PRAY PREPARE PREACH

# யோபு நூலைப் பிரசங்கித்தல்

## யோபு நூலுக்கான பேசும் வரைகோடுகள்



...உலகமெங்குமுள்ள
வேதாகம ஆசிரியர்களுக்காக
எழுதப்பட்டுள்ளது

# யோபு நூலைப்
## பிரசங்கித்தல்
### யோபு நூலுக்கான பேசும் வரைகோடுகள்

# பொருளடக்கம்

அ. விரைவான உதவி: யோபு நூலைப் பற்றிய ஒரு உரையை எவ்வாறு தயாரிக்கலாம். 6

ஆ. யோபு நூலைப் பிரசங்கித்தலை எவ்வாறு பயன்படுத்தலாம். 7

இ. யோபு நூலைப் பற்றி 10

ஈ. யோபு நூலைப் கற்றலும் பிரசங்கித்தலும் 13

உ. யோபு நூலிளிருந்து படிப்பினைகள் 68

ஊ. துன்பங்களுக்கான காரணங்கள் 70

**Preaching Job**
© Phil Crowter/The Good Book Company 2010

© 2018 தமிழ் மொழிபெயர்ப்பு, கொழும்பு இறையியல் கல்லூரி
Tamil Translation © 2018 by Colombo Theological Seminary

சகல பதிப்புரிமையும் ஆக்கியோனுக்கே உரியது. ஆக்கியோனின் எழுத்து மூல அனுமதியின்றி இந்நூலின் எப்பாகமும் எவ்விதத்திலும் பிரித்தெடுக்கப்படவோ, இலத்திரனியல் மூலங்களுக்கூடாகவோ பிரதி பண்ணப்படவோ கூடாது.

ISBN 978-955-36400-9-3

Colombo Theological Seminary, 189,Dutugemunu Street, Kohuwela
Sri Lanka
http://www.cts.lk

# தயவு செய்து இதை முதலில் வாசிக்கவும்!

PPP என்று குறிப்பிடப்படும் இன்னுமொரு நூலை உங்களுக்கு கொண்டுவருவதில் பெரிதான ஒரு மகிழ்ச்சியடைகிறோம். கர்த்தரின் வார்த்தையை பிரசங்கிப்பதற்கு இது உங்களுக்கு உதவ வேண்டுமென நாங்கள் ஜெபிக்கிறோம். எல்லாப் பிரதேசங்களிலுமுள்ள மக்கள் அனைவரும் தேவனின் வார்த்தையை தெளிவாகக் கேட்க வேண்டுமென நாங்கள் விரும்புகின்றோம். அப்பொழுது மக்கள் இயேசுவிடம் திரும்புவார்கள். கிறிஸ்தவர்கள் இயேசுவைப் போல் இன்னும் அதிகமாக வளருவார்கள். எல்லா புகழும் துதியும் தேவனுக்கே உரியது.

நாங்கள் உங்களுக்கு அதிகமான உதவிகளை செய்வோம். ஆனால் நீங்கள் இன்னும் கடுமையாக உழைக்க வேண்டும்! தயவு செய்து நீங்கள் வாசிப்பதை பிரதிபண்ண வேண்டாம்!

PPP என்றால் ஜெபித்தல்! தயாரித்தல்! பிரசங்கித்தல்! என்பதாகும். நீங்கள் பிரசங்கிப்பதற்கு முன்னர் செய்வதற்கு அதிகமான காரியங்கள் உண்டு.

**ஜெபித்தல்.** உலகின் சிறந்த உரையானது, தேவனின் பிரசன்னம் இல்லாத பட்சத்தில் நன்மை பயக்காது. நீங்கள் தேவனுடைய சத்தியத்தை பேச வேண்டுமென ஜெபியுங்கள். தேவன் ஒவ்வொரு மக்களுடைய இருதயங்களிலும் பேசவேண்டுமென ஜெபியுங்கள். உங்களுக்காகவும் நீங்கள் ஆயத்தம் செய்யும் பிரசங்கத்துக்காகவும் ஜெபியுங்கள். தேவனுடைய வார்த்தையானது உங்களிடத்தில் உயிரோட்டமுள்ளதாக வரவேண்டுமென ஜெபியுங்கள்.

**தயார் செய்தல்.** ஒரு வேதாகம உரையை தயார் செய்வதற்கு பல மணி நேரங்கள் உங்களுக்கு தேவை. வேதாகமத்தின் பகுதிகளை புரிந்து கொள்வதற்கு கடினமாக உழைக்கவும். நாங்கள் உங்களுக்கு அளித்துள்ள உதவிகளைக் குறித்து சிந்தியுங்கள். எந்தப் பகுதிகள் உங்களை செவிமடுப்பவர்களுக்கு உதவுகிறது? அதை நீங்கள் எவ்வாறு சிறப்பாக விளக்க முடியும்? நாங்கள் உங்களுக்கு ஒரு சில வார்த்தைகளை மாத்திரமே தந்திருக்கிறோம். நீங்களே அது இன்னும் அதிகமாக, எல்லோருக்கும் புரியும் விதத்தில் கூறவேண்டும்.

**பிரசங்கித்தல்.** இப்போது உங்களால் பிரசங்கிக்க முடியும். நாம் தேவனுடைய வார்த்தையை கற்பிக்கின்றோம் என்பதை அறிந்துகொள்வது ஒரு பெரிய சந்தோஷமாகும். இவைகள் நாம் கூற விரும்பும் விடயங்கள் அல்ல. இவை அவருடைய வார்த்தைகளால் எழுதப்பட்ட அவருடைய சத்தியங்கள். அவைகள் அவருடைய வேலையைச் செய்யும் என வாக்களித்துள்ளார்!

**ஏசாயா 55:10-11**

இதோ இப்புத்தகத்தை பயன்படுத்துவதற்கான சிறந்த வழிமுறை. யோபுவினுடைய கதையின் ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு பிரிவையும் கற்பிக்கவும்.

பில் கிரவ்டர்

பில் கிறவுடர் புற்று நோயால் பாதிப்படைந்து துன்பப்பட்ட கடைசி சில மாதங்களில் இப்புத்தகத்தை எழுதினார். யோபுவைப் போல துன்பத்தைப் பற்றி அறிந்திருந்தார். அவர் இதை எழுதி முடித்தவுடன் அவர் இறந்து இயேசுவிடம் அழைத்துச் செல்லப்பட்டார். இச்செய்திகளில் சில அவர் தனது கடைசி காலங்களில் பிரசங்கித்தவையாக இருக்கிறது. நீங்கள் இணையத்தத்தை அணுகினால் அவருடைய பிரசங்கங்கள் கிடைக்கப்பெறும். *www.cuckfieldbaptistchurch.co.uk/Pages/Job2.html*

# அ. விரைவான உதவி:

## யோபு நூலிலிருந்து ஒரு உரையை எவ்வாறு தயாரிக்கலாம்

1. தேவ உதவிக்காக ஜெபிக்கவும்.

2. வேதாகமப் பகுதியை பலமுறை வாசிக்கவும்.
பகுதியைப் புரிந்து கொள்ள **பின்னணிப்** பகுதியை உபயோகிக்கவும். கடினமான வேதவசனங்களைப் புரிந்துகொள்ள **குறிப்புகள்** பகுதியை உபயோகிக்கவும்.

3. வேதப் பகுதியிலிருந்து தேவன் எமக்கு போதிக்கின்ற முக்கிய குறிப்பைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யவும்.
உங்களுக்கு உதவ **முக்கிய** குறிப்பை பயன்படுத்தவும்.

4. உங்கள் மக்களுக்காக ஜெபிக்கவும். இந்த வேதாகம பகுதி அவர்களுக்கு எப்படி உதவியாயிருக்குமென்பதைக் குறித்து சிந்திக்கவும்.
உங்கள் உதவிக்கு ★**சிந்தித்து செயற்படுவதற்கு** பகுதியை உபயோகிக்கவும்.

5. உங்கள் உரையை உங்கள் சொந்த மொழியில் எழுதவும். வேதாகமம் கற்பிக்கும் முக்கிய விடயங்களிலிருந்து அதை ஆரம்பிக்கவும்.
உங்கள் உதவிக்கு **பிரசங்கித்தல்** பகுதியில் உள்ள நமது குறிப்புகளை உபயோகிக்கவும்.

6. இப்போது உங்கள் உரைக்கு ஒரு ஆரம்பத்தையும், ஒரு முடிவையும் எழுதவும்.

7. நீங்கள் தயார் செய்ததை சரிபார்க்கவும்.
- **முக்கிய குறிப்பு** தெளிவாக உள்ளதா?
- **வேதாகமம்** போதிப்பதை நீங்கள் அவர்களுக்குக் காட்டுகின்றீர்களா?
- உங்கள் மக்கள் புரிந்துகொள்ளவும், நினைவில் வைத்துக்கொள்ளவும் தக்கதாக **வார்த்தை படங்களைப்** பயன்படுத்துகின்றீர்களா?
- நீங்கள் மக்களுடன் **தொடர்புள்ளவர்களாக** இருக்கின்றீர்களா?
- என்ன **மாற்றம்** ஏற்படுமென்று நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?

8. உங்கள் வார்த்தைகள் மூலம் தேவன் பேச வேண்டுமென்றும் அவருடைய சத்தியம் மக்களை மாற்ற வேண்டுமென்றும் ஜெபிக்கவும்.

மேலதிக உதவிக்கு அடுத்த பகுதியை வாசிக்கவும்.

# ஆ. யோபு நூலைப் பிரசங்கித்தலை எவ்வாறு பயன்படுத்தலாம்

நீங்கள் ஒரு உரையை தயார் செய்யும் ஒவ்வொரு முறையும், இந்த விடயங்களிலிருந்து ஆரம்பிக்கவும்:

- தேவனின் உதவிக்காக ஜெபிக்கவும்.
- வேதாகமப் பகுதியை வாசிக்கவும்.
- வேதப் பகுதியிலிருந்து தேவன் எமக்கு போதிக்கின்ற முக்கிய குறிப்பைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யவும்.

இப்பொழுது இந்தக் குறிப்புக்களை நீங்கள் பயன்படுத்தும் பொழுது அக்குறிப்புக்கள் உங்களுக்கு உதவும். ஒவ்வொரு உரையாடலும் இரண்டு பக்கங்களைக் கொண்டுள்ளது. முதலாவது பக்கம் வேதாகமத்தின் பகுதிகளை சிந்திக்க உதவுகிறது. இரண்டாவது பக்கம் உரைக்குரிய தலைப்புக்களையும், கருத்துக்களையும் வழங்குகிறது.

நீங்கள் இவ் வேதாகம அடையாளத்தைப் பார்க்கின்றபொழுது, வேதாகமம் என்ன சொல்லுகின்றதென்பதை நீங்கள் படிக்க வேண்டும்.

## ஆய்விற்குரிய பக்கம்: வேதாகமத்தை புரிந்து கொள்ளுதல்


முதலாவது பக்கம் வேதாகமத்தின் பகுதிகளை புரிந்து கொள்வதற்கு உதவுகிறது.

**▣ பின்னணி**

இந்தப் பகுதியில் முன்பதாகவும், பின்பதாகவும் வருவது என்ன என்பதைப் பற்றி சிந்திப்பதற்கு இது மிக முக்கியமாக அமைகின்றது. நாம் யோபுவின் புத்தகத்தில் ஒவ்வொரு அதிகாரத்தையும் பார்க்க மாட்டோம். ஆனால் இந்தப் புத்தகத்தில் ஒவ்வொரு பகுதியும் எவ்வாறு பொருத்தமாக அமைகின்றது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

**பின்னணி கீழ்வரும் விடயத்தை செய்வதற்கு உதவும்**

யோபு புத்தகத்தில் நீங்கள் வாசித்த மற்ற பகுதிகள் எப்படிப்பட்டது எனக் கேளுங்கள். துன்பத்தைக் குறித்து புரிந்து கொள்வதற்கு எவ்வாறு உதவுகிறது எனக் கேளுங்கள்.



கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 1:1–5

**1 ஒரு நல்ல மனிதன்**

▣ பின்னணி

எமக்கும் துன்பத்தைப் பற்றிய கேள்விகள் உள்ளன. சாத்தான்கூட இக்கேள்விகளை கேட்பதற்கு வைத்திருப்பான். யோபு கர்த்தரை சேவித்தான். ஏனென்றால் அவனுக்கு அநேக பொருட்கள் செல்வங்கள் கிடைத்ததினாலா? யோபு 1:9–11

ஆரம்பத்தில் கர்த்தர் கேள்விக்கு சரியான பதிலை அளித்தார். யோபுவை செல்வந்தராக்கியதால் தான் அவர் நல்லவராக இருக்க வில்லை. யோபு உண்மையாகவே நல்லவர். அவர் உள்ளார்ந்த ரீதியில் நல்லவராக இருந்தார். யோபு 1:1–5.

(யோபு நல்லவர் என்று தேவன் சொல்கிறார். [யோபு 1:1,8] அவர் கூறுவதன் அர்த்தம் யோபு ஒரு பாவத்தையும் செய்யாதவர் என்பதல்ல. யோபுவுடைய இருதயம் கர்த்தரை அறிந்தது, அவரை நேசிக்கிறது. அவர் உள்ளார்ந்த ரீதியில் நல்லவராக இருந்தார்.)

▣ முக்கிய குறிப்பு

பயங்கரமான துன்பங்களை யோபு அனுபவிக்கும் போதுகூட அவனுடைய இருதயம் நன்றாகவே இருந்தது.

▣ சிந்தித்து செயற்படுவதற்கு

சாத்தான் என்ன சொல்கிறார். (யோபு 1:9-11) யோபுவைப் பொறுத்தவரை இது உண்மையானது அல்ல என்கிறான். ஆனால் பல மக்களைப் பொறுத்த வரையில் இது உண்மையானதாக இருக்கிறது. பலர் கிறிஸ்தவர்களாக இருக்க விரும்புகின்றார்கள். ஏனெனில் அவர்கள் தங்களுக்கு நல்ல வாழ்வு கிடைக்குமென்று நம்புகிறார்கள். கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பார் என அவர்கள் நினைக்கிறார்கள். கர்த்தர் கொடுக்கும் நல்ல காரியங்களை அவர்கள் விரும்புகிறார்கள்.

இது சரியானதல்ல என உங்கள் செவிமடுப்போர் காண அவர்களுக்கு உதவுங்கள். இவ்வாறு நினைப்பவர்கள் யோபுவைப் போன்றவர்கள் அல்ல. அவர்கள் உண்மையான கிறிஸ்தவர்கள் அல்ல.

▣ குறிப்புக்கள்

- யோபு 1:1. யோபு முழு நிறைவானவர் அல்ல. ஆனால் அவர் "குற்றமற்றவர்" (மக்கள் அவரிடம் எந்த தவறுகளையும் காணவில்லை.) மற்றும் அவர் நேர்மையானவர். அவர் கடவுளுக்குப் பயந்தவர். (கடவுளை நேசித்தவர், ஆராதித்தவர், அவர் தீமையை விட்டு விலகியிருந்தார்)
- யோபு 1:2-3. யோபு உலகின் அப்பகுதியில் மிகவும் செல்வந்தராக இருந்தார். கர்த்தர் அவரை ஆசீர்வதித்திருந் ததை மக்கள் அறிந்திருந்தனர். பழைய ஏற்பாட்டிலேயே தேவன் தம்மைப் பின்பற்றியவர்களுக்கு நல்ல காரியங்களை செய்வதாக வாக்குறுதியளித்திருந்தார். (உபா 28:1-14) இன்று ஒருவன் செல்வந்தனாக இருந்தால் கர்த்தர் அவனை ஆசீர்வதித்திருக்கிறார் என்று அர்த்தமல்ல. ஒருவன் விசுவாசத்தில் செல்வந்தனாக இருக்கும்போது கர்த்தர் ஆசீர்வாதங்களை கொடுக்கிறார். (யூக்கோபு 2:5) நாம் கர்த்தரை அறிந்திருக்கும் போதும், அவருடைய இராஜ்ஜியத்துக்கு உரியவர்களாயிருக்கும் போதும் நாம் ஐசுவரியவான்களாய் இருக்கிறோம்.
- யோபு 1:4-5 யோபு பாவத்தைக் குறித்து எவ்வளவு எச்சரிக்கையுடன் இருந்தான் என்பதை இது காட்டுகிறது. அவரது பிள்ளைகள் ஏதாவது பாவம் செய்தார்களா? என்பதை அவர் அறியவில்லை. ஆனால் பாவத்தை நிவர்த்தி செய்வதற்காக ஒரு தியாகத்தை செய்யவேண்டும் என்பதை அவர் அறிந்திருந்தார். அவரது பிள்ளைகள் அவர்களது கேளிக்கைகளில் தேவனை விட்டு விலகிவிடக் கூடுமெனப் பயந்தார்.

14

**◉ முக்கிய குறிப்பு**
நாம் சில முக்கிய குறிப்புக்களை ஒரு சில வார்த்தைகளில் வைத்துள்ளோம். அக்குறிப்புக்களைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். வேதாகமப் பகுதி இதைத் தான் கற்பிக்கிறது என்பதை உங்களால் காண முடிகிறதா? உங்கள் உரையில் இக்குறிப்பை தெளிவாக உறுதிப்படுத்த முயற்சி செய்யுங்கள்.

**☆ சிந்தித்து செயற்படுவதற்கு**
இந்தப் பகுதியை வேதாகமத்தின் ஒரு பகுதியிலிருந்து தெரிவு செய்தோம். அதைப்பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டும்.வேதாகமத்தை புரிந்து கொள்வதற்கு கடினமாக உழைப்பது முக்கியம். இவ்விடயத்தை இப்பகுதியிலிருந்து எவ்வாறு தெளிவாகக் கற்றுக்கொடுப்பது என கவனமாக சிந்தித்துப்பாருங்கள்.

**◉ குறிப்புகள்**
இந்தப்பகுதி கடினமான வேதவசனங்களை உங்களுக்குக் கூறுகிறது. நீங்கள் கற்பிக்கும் போது தவறுகளை விடாதிருக்க அது உங்களுக்கு உதவுகிறது.

## பிரசங்கித்தல் பக்கம்:

### வேதாகமத்தை கற்றுக்கொடுங்கள்

வேதாகமத்தின் பகுதிகளைக் கற்றுக்கொடுப்பதற்கு இரண்டாம் பக்கம் உங்களுக்கு உதவுகிறது. நீங்கள் எப்போதும் உங்களுடைய வேலைகளை சுயமாக செய்யவேண்டும். இப்பக்கம் உங்களுக்கு வேண்டிய கருத்துக்களைக் கொடுக்கிறது. நீங்கள் கருத்துக்களை எடுத்து அவற்றை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். நாங்கள் உங்களுக்கு எலும்புகளைக் கொடுப்போம். நீங்கள் அவற்றின் மீது சதையினைப் போடுதல் வேண்டும்!


➡ பிரசங்கியுங்கள்: யோபு 1:1 –5

**ஒரு நல்ல மனிதன்**
யோபு 1:1

◉ இயேசு அவருடைய மக்களை நோக்கி "நீங்கள் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறீர்கள் என்றார்" அவர்கள் சூரியனைப்போல பிரகாசிக்கிறார்கள். உண்மையான கிறிஸ்தவர்கள் பிரகாசிக்கிறார்கள். ஏனெனில் அவர்களுக்குள்ளே ஒளி இருக்கிறது. அவர்களைச் சூழ உள்ள மக்கள் தவறாக நடந்துகொள்கையில் இவர்களது நற்குணம் வெளிப்படுகிறது. இவர்கள் மற்றவர்களை பின்பற்றி நடக்கவில்லை.

சிலர் அவர்களைச் சுற்றியுள்ளவர் களை பின்பற்றினார்கள். அவர்கள் மற்றவர்கள் வேலை செய்வதைப் போல தாங்களும் செய்கிறார்கள். ஆலயத்திலும் ஆலயத்திலுள்ள மற்றவர்களைப் போல் இருக்கிறார்கள். ஆனால் உண்மையான கிறிஸ்தவர்கள் இவ்வாறு இருக்க மாட்டார்கள். அவர்களுடைய நன்மையைப் பிரகாசிக்கும் ஒளியாக இருப்பார்கள். அவர்கள் உள்ளார்ந்தத்தில் இருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை மாற்றி அவர்கள் நல்லவர்களாக உருவாகினார். அவ்வாறே அவர் யோபுவையும் உருவாக்கிர்.

யோபு கர்த்தரை அறிந்திருந்தார். ஆவர் தீமையை வெறுத்தார். அவர் நல்லவையையே நேசித்தார். யோபுவிற்கு ஏற்படும் எதுவுமே அவரில் மாற்றத்தை ஏற்படுத்தாது.

➡ கர்த்தர் உங்கள் பணத்தை, உங்கள் வீட்டை, உங்கள் உடல் நலத்தை, உங்கள் குடும்பத்தை எடுத்துக்கொண்டால் நீங்கள் யோபுவைப்போல் இருப்பீர்களா? நீங்கள் இன்னும் கர்த்தரை நம்புகிறீர்களா? நன்மையை நேசித்து தீமையை வெறுக்கிறீர்களா? ஆல்லது உங்கள் வாழ்வு இலகுவானதாக இருக்கும் போது மாத்திரம் கர்த்தரை பின்பற்றுவீர்களா?

யோபு நல்லவரும் உண்மையான வரும் என கர்த்தர் சொல்லுகிறார். ஆகவே இந்தப் புத்தகத்தில் என்ன நடைபெறும் என்று எமக்குத் தெரியும். யோபு நன்றாக இருப்பார். கர்த்தர் யோபுவின் விசுவாசத்தை சோதிப்பார்.ஆனால் அவருடைய விசுவாசம் தகர்க்கப்படாது.

➡ கர்த்தரைத் துதிப்போம் நாம் உண்மையான கிறிஸ்தவர்களாகும் போது. ஏனெனில் இயேசு கிறிஸ்து எம்மை மாற்றுகிறார். அவர் உள்ளார்ந்த ரீதியில் எமக்குள் மாற்றத்தை கொண்டு வருவார். இயேசு கிறிஸ்து நம்மை உண்மையான கிறிஸ்தவர்களாக மாற்றுவாரானால். முடிவு பரியந்தம் நாம் கர்த்தருடன் இருப்போம். (நாம் எப்போதும் நல்ல விடயங்களை செய்துகொண்டிருப்போம் என்பது இதன் அர்த்தம் அல்லயூ)

**ஓர் நல்ல செல்வந்தர்**
யோபு 1:2–3

• நீங்கள் ஒரு செல்வந்தராக இருந்தால் உங்கள் பணத்தை என்ன செய்வீர்கள். நீங்கள் எவ்விதமான வாழ்க்கை வாழ்வீர்கள். நீங்கள் கர்த்தரை மறப்பீர்களா?

மிகச்சிறிய அளவிலான மக்களே செல்வந்தர்களாகவும், நல்லவர்களாகவும் இருக்கிறார்கள். அதிக செல்வந்தராக உள்ள மக்களுள் மிகவும் சிறிய தொகையினரே கர்த்தரை நேசிக்கின்றர்.யோபுவிடம் அதிக பணம் இருந்தது. யோபு செல்வந்தராகவும், கர்த்தரை நேசித்தவராகவும் இருந்தார். அவருக்கு சொந்தமாவைகள் எவ்வளவு இருந்தது எனப்பாருங்கள்!

கர்த்தர் யோபுவை ஆசீர்வதித்ததை எல்லோரும் பார்க்க வேண்டும் என விரும்புகிறார். ஆனால் யோபுவின் நிலமை அவரைக் கெடுக்கவில்லை. அவர் தொடர்ந்து அதிகமாக கர்த்தரை நம்பினார்.நல்லதை நேசித்தார். தீமையாவைகளை வெறுத்தார்.

யோபு ஒரு நல்ல மனிதன். கர்த்தர் பல உடமைகளை அவருக்குக் கொடுத்த போதும் அவர் தொடர்ந்தும் நல்ல மனிதராகவே இருந்தார். எல்லாவற்றையும் யோபுவிடமிருந்து எடுத்த போது கூட அவர் ஒரு நல்ல மனிதராகவே இருந்தார். ஒரு மனிதன் உள்ளார்ந்த ரீதியில் நல்லவராக இருக்கும்போது வெளியரங்கமான செயலில் அவர் தீங்கு செய்ய மாட்டார்.

➡ கர்த்தர் உள்ளார்ந்த ரீதியில் உங்களை நல்லவராக உருவாக்கியிருக்கிறாரா? அல்லது நீங்கள் இன்னும் ஆலயத்தில் இருக்கும்போது மாத்திரம் கிறிஸ்தவர்களாக இருக்கிறீர்களா? நீஙகள் உண்மையான கிறிஸ்தவர்களாக இருக்க விரும்பினால் உங்களை மாற்றியமைக்கும் ஒருவராக இயேசு இருக்கிறார். யோவான் 3:3, 16.

15

**1. நாங்கள் உங்களுக்கு உதவக்கூடிய சில விடயங்களை எழுதியுள்ளோம்.**

- **இரண்டு அல்லது மூன்று தலைப்புகள்.**
இவை அனைத்தும் **இவ்வாறாகவே** எழுதப்பட்டது. வேதாகமத்தை தெளிவாகக் கற்றுக்கொடுப்பதற்கு இத் தலைப்புக்கள் உதவும். உங்களுடைய மக்களுக்கு மேம்பட்டவற்றை செய்வதற்காக இத்தலைப்புக்களை மாற்ற முடியும்.

- **வேதாகமம் என்ன சொல்கிறதென்பதை நாங்கள்**

**உங்களுக்கு காண்பிக்கிறோம்.** மக்கள் வேதாகமத்துக்கு செவிகொடுக்க வேண்டுமென நாம் விரும்புகிறோம். வேதாகமம் என்ன சொல்கிறதென்பதை அவர்களுக்கு தொடர்ந்து ஞாபகப்படுத்துங்கள். நீங்கள் பேசும் வசனம் என்ன என்பதை கண்டுபிடிக்கும்படி அவர்களிடம் சொல்லுங்கள். எப்போது இதைச் செய்யவேண்டும் என்பதை அறிவதற்கு இவ்வடையாளம் 📖 உதவும்.

- **வேதாகமத்தை கற்பித்தல் என்றால் என்ன என்பதை நாங்கள் உங்களுக்கு விளக்குகிறோம்.** மக்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் வேதாகமத்தை எவ்வாறு விளக்குவது என நீங்கள் சிந்திக்க வேண்டும். உங்களது மக்களை உங்களுக்குத் தெரியும். உங்களது மக்களை எமக்குத் தெரியாது. உங்களது வார்த்தைகள் எமது வார்த்தைகளை விட சிறப்பானதாகும்.
- **நாம் சில சமயங்களில் வார்த்தைச் சித்திரங்களைப் பயன்படுத்துகிறோம்.** யோபு 1:1-5 என்ற பகுதியிலிருந்து ஓர் உதாரணம் இங்கே கூறப்பட்டுள்ளது.

⊞ இயேசு தம் மக்களிடம், 'நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்' என்று சொன்னார். அவர்கள் சூரியனைப் போன்று பிரகாசிக்கிறார்கள். உண்மையான கிறிஸ்தவர்கள் பிரகாசிப்பார்கள். ஏனெனில் அவர்களுக்குள்ளே ஒளி இருக்கிறது. அவர்களைச் சூழ உள்ள மக்கள் தவறான முறையில் பழகும்போது அவர்களுடைய நற்குணம் வெளிப்படுகிறது. அவர்களைச் சூழ உள்ள மக்களின் நடத்தையை அவர்கள் பிரதி நடத்தையாகக் கொள்ள மாட்டார்கள்.

சில நேரங்களில், வார்த்தைச் சித்திரங்கள் உங்கள் மக்களுக்கு சிறப்பற்றதாக இருக்கலாம். ஒரு வேதாகம ஆசிரியர் மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் சிறந்த வசனங்களைக் கொண்ட சித்திரங்களை கண்டுபிடிக்க வேண்டும். வேதாகமத்தின் சத்தியத்தைக் கற்பிப்பதற்கு உங்களுக்கு இன்னும் பல வசன சித்திரங்கள் தேவைப்படுகிறது. வசனங்களைக் கொண்ட சித்திரங்களைப் பயன்படுத்தும் போது வேதாகமத்தின் வார்த்தைகள் என்ன சொல்லுகிறதென்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

- **உங்கள் மக்களை எவ்வாறு வேதாகமப் போதனைகளுடன் இணைப்பது என்பதைப்பற்றி நாங்கள் உங்களுக்குக் காட்டுகிறோம்.** தேவனுடைய வார்த்தை எம்முடன் பேசப்படுவதைக் கேட்பது மிகவும் முக்கியமானதாகும். வேதாகமப் படிப்பினை எப்படி எம்மை மாற்றுகிறது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.
- **நாம் உங்களுக்கு ஒன்று அல்லது இரண்டு உபாயங்களைத் தருகிறோம்.** வேதாகமத்துடன் உங்கள் மக்களை இணைப்பதற்கான பல வழிகளை நீங்கள் சிந்திக்க வேண்டும். நீங்கள் மக்களை அறிவீர்கள். வேதாகமம் எவ்வாறு அவர்களுடைய வாழ்க்கையை மாற்ற வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள்.
  இங்கே ஓர் உதாரணம் காட்டப்பட்டுள்ளது:

> கர்த்தர் உள்ளார்ந்த ரீதியில் உன்னை நல்லவராக உருவாக்கியிருக்கிறாரா? இல்லையெனில் நீங்கள் ஆலயத்தில் இருக்கும் போது மாத்திரம் கிறிஸ்தவனைப் போல் இருக்கிறீர்களா? நீங்கள் ஒரு **உண்மையான** கிறிஸ்தவனாக இருக்க விரும்பினால் உங்களை மாற்றும் நபராக இயேசு மாத்திரமே இருக்கிறார்.

**2. நீங்கள் செய்ய வேண்டிய ஏனைய விடயங்கள்.**

- **உங்களுடைய உரையை எப்படி ஆரம்பிக்க வேண்டுமென சிந்தியுங்கள்.** இன்று இவ்வுரையை கேட்பது ஏன் முக்கியமானது என மக்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். வேதாகமத்திலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொடுக்கப் போகிறீர்கள் என்பதை அவர்களிடம் சொல்ல வேண்டும். அவர்களுக்கு ஏன் அது முக்கியமானது என அவர்களிடம் சொல்ல வேண்டும்.
- **உங்களுடைய உரையை எவ்வாறு நிறைவு செய்வது என சிந்தியுங்கள்.** முக்கிய குறிப்புக்களை அவர்களுக்கு ஞாபகப்படுத்துங்கள்.அவர்கள் சிந்திப்பதற்கு அல்லது செயற்படுவதற்கான ஏதாவதொரு செயலைச் செய்யுங்கள்.
- **ஜெபம்!** தேவ வார்த்தையிலிருந்து தேவ சத்தியத்தை நீங்கள் மக்களுக்குச் சொல்கிறீர்கள். உங்களுடைய வார்த்தைகள் மக்களின் இருதயத்தில் பேசவேண்டுமென தேவனிடத்தில் ஜெபியுங்கள். தேவ சத்தியம் மக்களை மாற்ற வேண்டுமென்பதற்காக ஜெபியுங்கள்.
- **எப்போதும் உங்களது சொந்த மொழியையே பயன்படுத்துங்கள்.** மக்கள் சிறப்பாக ஆங்கிலம் பேசாவிட்டால் ஆங்கிலத்தில் விடயத்தை **சொல்லாதீர்கள்.**

---

# இ. யோபு நூலைப் பற்றி

யோபுவின் புத்தகம் கிறிஸ்தவர்களுக்கு மிகவும் முக்கியமானதொரு புத்தகம் ஆகும். ஏனெனில் அது துன்பப்படுதலைப் பற்றிக் கூறுகிறது. துன்பம் எம் ஒவ்வொருவருக்கும் பல்வேறு வழிகளில் வருகிறது. எனவே இப்புத்தகம் எம் ஒவ்வெருவருக்கும் உரியது.

யோபுவின் புத்தகம் வாசிப்பதற்கு ஒரு இலகுவான புத்தகம் அல்ல. அநேக கிறிஸ்தவர்கள் இதனை அறிந்துகொள்வதில்லை. யோபு நூலைப் பிரசங்கித்தல் எனும் இப்புத்தகம் உங்கள் செய்தியைக் கேட்போருக்கு பெரிதும் உதவும். இது அவர்களுக்கு துன்பம் பற்றிய உண்மையான சத்தியங்களைக் கற்பிக்கும். துன்பம் அவர்களுக்கு ஏற்படும் போது இந்நூல் அவர்களுக்கு உதவும்.

யோபு எப்போது வாழ்ந்தான் என எமக்குத் தெரியாது. ஆனால் வேதாகமத்தின் ஆரம்பப் புத்தகங்களில் இதுவும் ஒன்று என பலர் நினைக்கிறார்கள். யோபு

எனும் நூல் வேதாகமத்தின் “ஞானம்” அல்லது “கவிதை” எனும் புத்தகங்களுள் ஒன்றாகும். முதல் இரண்டு அதிகாரங்களும் கடைசி அதிகாரமும் யோபுவின் துன்பம் பற்றிய கதையைக் கூறுகிறது. நூலின் ஏனைய பகுதியானது உரையாடலாகும்.

**பொழிப்பு**

ஆரம்பத்தில், யோபு கர்த்தரை துதிக்கின்றான். கர்த்தர் அவரது உடமைகள், பிள்ளைகள், மற்றும் அவரது ஆரோக்கியம் ஆகியவற்றை எடுத்துக்கொள்கிறார். ஆனால் காலம் செல்ல, யோபு துன்பத்துடன் போராடுகிறார். அவரது நண்பர்கள் அவரைத் தவறாக குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால் யோபுவுக்கு அக்குற்றங்கள் உண்மையில்லை எனத் தெரியும். ஆனால் அவருக்கு தான் ஏன் துன்பப்படுகிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இது யோபுவிற்குத் தெரியவில்லை. இவை எல்லாவற்றிற்கு மேலாக கர்த்தர் அமைதியாயிருந்தார். கர்த்தர் யோபுவுக்கு ஆறுதலளிக்கவில்லை. கர்த்தர் யோபுவை அப்பாவி என்று சொல்லவில்லை.

யோபு அவருடைய துன்பத்தின் மத்தியிலே பல வலிமை மிகுந்த விடயங்களை சொல்லுகிறார் (தவறானவைகளையும் கூட).

பெரும்பாலும் அவர் இருளான சூழ்நிலையையும் மனச்சோர்வையும் உணர்கிறார். கர்த்தர் அவருக்கு எதிராக இருப்பதை உணர்கிறார். ஆனால் அவர் ஒருபோதும் கர்த்தரை விட்டு விலகவில்லை. (விலக வேண்டுமென சாத்தான் விரும்புகிறான்) யோபு கர்த்தர் மீது வைத்துள்ள ஆழ்ந்த நம்பிக்கை அவருடைய வேதனை மிகுந்த வார்த்தைகள் முலம் பிரகாசிக்கின்றன.

யோபுவின் நண்பர்கள் யோபுவுக்கு உதவவில்லை. அவர்களது வாதங்களை பின்பற்ற அவருக்கு கடினமாக இருந்தது. ஆனால் அவர்களது பிரதான கருவானது யோபு பாவம் செய்தார் என்பதைக் காட்டுவதேயாகும். யோபுவினுடைய நண்பர்கள் யோபுவை மனம் திரும்பி கர்த்தரிடம் வரும்படி சொன்னார்கள். இது அவருக்கு உதவக்கூடியது இல்லை. ஏனெனில் யோபுவின் பிரச்சனை பாவமல்ல.

இறுதியில் கர்த்தர் பேசுகிறார். இத்தாழ்மை அவருடைய கேள்விக்கு கர்த்தர் பதிலளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை யோபுவுக்கு எடுத்துக் காட்டுகிறது. மாறாக மகத்தான தேவன் நன்மையும் நீதியுமானவர் என்பதை அவர் கற்றுக்கொள்கிறார்.

**படிப்பினைகள்**

இந்தப்புத்தகத்தில் கற்றுக்கொள்வதற்கான பல பாடங்கள் உள்ளன. (பாடத்திலுள்ள கலந்துரையாடல்களைப் பாருங்கள். (68-72 ஆம் பக்கம்) இந்தப் பாடங்களை யோபுவைப்பற்றி கற்பிக்கும்போது மனதில் வைத்துக்கொள்ளுங்கள்)

# யோபுவின் புத்தகத்தைக் குறித்ததான ஒரு வரைகோடு

**யோபு 1–2: துன்பப்படுதலின் ஆரம்பம்**

யோபுவை சோதிப்பதற்கு சாத்தானுக்கு கர்த்தர் அனுமதி கொடுத்தார். யோபு துன்பம் வருகிற போது கர்த்தரை தூற்றவில்லை.

**யோபு 3–41: உரையாடல்**

1. **யோபுவும் மூன்று நண்பர்களும் (யோபு 3–31)**
   யோபு நிச்சயமாக ஏதொ ஒரு பாவம் செய்திருப்பான் என யோபுவின் மூன்று நண்பர்களும் நினைத்தார்கள். யோபு தான் குற்றமற்றவன் எனக் கூறுகிறான். அவனது துயரமானது எப்படி நெறி முறையாகும் என்பதை அவன் புரிந்துகொள்ளவில்லை.

2. **எலிகூ (யோபு 32–37)**
   எலிகூவும் யோபு பாவம் செய்தார் என நினைக்கிறார். அவன் யோபுவுக்கு கர்த்தரின் மேன்மையைப் பற்றிக் குறிப்பிட்டார்.

3. **கர்த்தர் (யோபு 38–41)**
   யோபு எவ்வளவு சிறியவர் என்பதை கர்த்தர் யோபுவுக்குக் காட்டுகிறார். கர்த்தர் தனக்கு நியாயம் செய்யவில்லை என யோபு தவறாக நினைக்கிறார்.

**யோபு 42: துன்பப்படுதலின் முடிவு**

யோபு அதிகமாக கர்த்தரை நம்புவதற்குக் கற்றுக்கொண்டான். கர்த்தர் அவனை முன்பை விட ஆசீர்வதித்தார்.

# யோபு நூலைப் பிரசங்கித்தல்

ஈ. யோபு நூலைக் கற்றலும் பிரசங்கித்தலும்

# 1 ஒரு நல்ல மனிதன்

**பின்னணி**
எமக்கும் துன்பத்தைப் பற்றிய கேள்விகள் உள்ளன. சாத்தான்கூட இக்கேள்விகளை கேட்பதற்கு வைத்திருப்பான். "யோபு கர்த்தரை சேவித்தான். ஏனென்றால் அவனுக்கு அநேக பொருட்கள் செல்வங்கள் கிடைத்ததினாலா?"
**யோபு 1:9~11**

ஆரம்பத்தில் கர்த்தர் கேள்விக்கு சரியான பதிலை அளித்தார். யோபுவை செல்வந்தராக்கியதால் தான் அவர் நல்லவராக இருக்க வில்லை! யோபு உண்மையாகவே நல்லவர். அவன் உள்ளார்ந்த ரீதியில் நல்லவராக இருந்தான்.
**யோபு 1:1~5.**

(யோபு நல்லவன் என்று தேவன் சொல்கிறார். [யோபு 1:1,8], அவர் கூறுவதன் அர்த்தம் யோபு ஒரு பாவத்தையும் செய்யாதவர் என்பதல்ல! யோபுவுடைய இருதயம் கர்த்தரை அறிந்தது. அவரை நேசிக்கிறது. அவன் **உள்ளார்ந்த** ரீதியில் நல்லவராக இருந்தான்.)

**முக்கிய குறிப்பு**
பயங்கரமான துன்பங்களை யோபு அனுபவிக்கும் போதுகூட அவனுடைய இருதயம் நன்றாகவே இருந்தது.

**சிந்தித்து செயற்படுவதற்கு**
சாத்தான் என்ன சொல்கிறான் (யோபு 1:9-11) யோபுவைப் பொறுத்தவரை இது உண்மையானது அல்ல என்கிறான். ஆனால் பல மக்களைப் பொறுத்த வரையில் இது உண்மையானதாக இருக்கிறது. பலர் கிறிஸ்தவர்களாக இருக்க விரும்புகின்றார்கள். ஏனெனில் அவர்கள் தங்களுக்கு நல்ல வாழ்வு கிடைக்குமென்று நம்புகிறார்கள். கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பார் என அவர்கள் நினைக்கிறார்கள். கர்த்தர் கொடுக்கும் நல்ல காரியங்களை அவர்கள் விரும்புகிறார்கள்.

இது சரியானதல்ல என உங்கள் செவிமடுப்போர் காண அவர்களுக்கு உதவுங்கள். இவ்வாறு நினைப்பவர்கள் யோபுவைப் போன்றவர்கள் அல்ல. அவர்கள் உண்மையான கிறிஸ்தவர்கள் அல்ல.

**குறிப்புக்கள்**

- **யோபு 1:1.** யோபு முழு நிறைவானவர் அல்ல, ஆனால் அவர் "குற்றமற்றவர்" (மக்கள் அவரிடம் எந்த தவறுகளையும் காணவில்லை) மற்றும் அவர் "நேர்மையானவர்" அவர் கடவுளுக்குப் "பயந்தவர்". (கடவுளை நேசித்தவர், ஆராதித்தவர்), அவர் தீமையை "வெறுத்து" (விட்டு விலகியிருந்தார்)
- **யோபு 1:2-3.** யோபு உலகின் அப்பகுதியில் மிகவும் (செல்வந்தராக) இருந்தான். கர்த்தர் அவரை ஆசீர்வதித்திருந்ததை மக்கள் அறிந்திருந்தனர். **பழைய**

## கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 1:1-5

**ஏற்பாட்டிலேயே**, தேவன் தம்மைப் பின்பற்றியவர்களுக்கு நல்ல காரியங்களை செய்வதாக வாக்குறுதியளித்திருந்தார்; (உபா 28:1-14 பார்க்கவும்). இன்று, ஒருவன் செல்வந்தனாக இருந்தால், கர்த்தர் அவனை ஆசீர்வதித்திருக்கிறார் என்று **அர்த்தமல்ல.** ஒருவன் "விசுவாசத்தில் செல்வந்தனாக" இருக்கும்போது கர்த்தர் ஆசீர்வாதங்களை கொடுக்கிறார் (யாக்கோபு 2:5). நாம் கர்த்தரை அறிந்திருக்கும் போதும், அவருடைய இராஜ்ஜியத்துக்கு உரியவர்களாயிருக்கும் போதும் நாம் "ஐசுவரியவான்களாய்" இருக்கிறோம்.

- **யோபு 1:4-5.** யோபு பாவத்தைக் குறித்து எவ்வளவு எச்சரிக்கையுடன் இருந்தான் என்பதை இது காட்டுகிறது. அவனது பிள்ளைகள் ஏதாவது பாவம் செய்தார்களா என்பதை அவன் அறியவில்லை. ஆனால் பாவத்தை நிவர்த்தி செய்வதற்காக ஒரு தியாகத்தை செய்யவேண்டும் என்பதை அவன் அறிந்திருந்தான். (அவரது பிள்ளைகள் அவர்களது "கேளிக்கைகளில்" தேவனை விட்டு விலகிவிடக் கூடுமெனப் பயந்தான்.)

## பிரசங்கியுங்கள்: யோபு 1:1-5

### ஒரு நல்ல மனிதன்

**யோபு 1:1**

⊞ இயேசு அவருடைய மக்களை நோக்கி "நீங்கள் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்" என்றார். அவர்கள் சூரியனைப்போல பிரகாசிக்கிறார்கள். உண்மையான கிறிஸ்தவர்கள் பிரகாசிக்கிறார்கள். ஏனெனில் அவர்களுக்குள்ளே ஒளி இருக்கிறது. அவர்களைச் சூழ உள்ள மக்கள் தவறாக நடந்துகொள்கையில் இவர்களது நற்குணம் வெளிப்படுகிறது. இவர்கள் மற்றவர்களை பின்பற்றி நடக்கவில்லை.

சிலர் அவர்களைச் சுற்றியுள்ளவர்களை பின்பற்றினார்கள். அவர்கள் மற்றவர்கள் வேலை செய்வதைப் போல தாங்களும் செய்கிறார்கள். ஆலயத்திலும், ஆலயத்திலுள்ள மற்றவர்களைப் போல் இருக்கிறார்கள். ஆனால் உண்மையான கிறிஸ்தவர்கள் இவ்வாறு இருக்க மாட்டார்கள். அவர்களுடைய நன்மையைப் பிரகாசிக்கும் ஒளியாக இருப்பார்கள். அவர்கள் உள்ளார்ந்தத்தில் **நல்லவர்களாக** இருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை மாற்றி அவர்கள் நல்லவர்களாக உருவாக்குகிறார். அவ்வாறே அவர் யோபுவையும் உருவாக்கினார்.

**யோபு கர்த்தரை அறிந்திருந்தான். அவன் தீமையை வெறுத்தான். அவன் நல்லவையையே நேசித்தான். யோபுவிற்கு ஏற்படும் எதுவுமே**

அவரில் மாற்றத்தை ஏற்படுத்தாது.

> ≫ கர்த்தர் உங்கள் பணத்தை, உங்கள் வீட்டை, உங்கள் உடல் நலத்தை, உங்கள் குடும்பத்தை எடுத்துக்கொண்டால் நீங்கள் யோபுவைப்போல் இருப்பீர்களா? நீங்கள் இன்னும் கர்த்தரை நம்புகிறீர்களா? நன்மையை நேசித்து தீமையை வெறுக்கிறீர்களா? அல்லது உங்கள் வாழ்வு இலகுவானதாக இருக்கும் போது மாத்திரம் கர்த்தரை பின்பற்றுவீர்களா?

யோபு நல்லவனும் உண்மையான வனும் என கர்த்தர் சொல்லுகிறார். ஆகவே இந்தப் புத்தகத்தில் என்ன நடைபெறும் என்று எமக்குத் தெரியும்! யோபு நன்றாக இருப்பான்! கர்த்தர் யோபுவின் விசுவாசத்தை சோதிப்பார், ஆனால் அவனுடைய விசுவாசம் தகர்க்கப்படாது.

> ≫ கர்த்தரைத் துதிப்போம் நாம் உண்மையான கிறிஸ்தவர்களாகும் போது, ஏனெனில் இயேசு கிறிஸ்து எம்மை மாற்றுகிறார். அவர் உள்ளார்ந்த ரீதியில் எமக்குள் மாற்றத்தை கொண்டு வருவார்! இயேசு கிறிஸ்து நம்மை உண்மையான கிறிஸ்தவர்களாக மாற்றுவாரானால், முடிவு பரியந்தம் நாம் கர்த்தருடன் இருப்போம். (நாம் **எப்போதும்** நல்ல விடயங்களை செய்துகொண்டிருப்போம் என்பது இதன் அர்த்தம் அல்ல!)

## ஓர் நல்ல செல்வந்தர்

📖 யோபு 1:2–3

- நீங்கள் ஒரு செல்வந்தராக இருந்தால், உங்கள் பணத்தை என்ன செய்வீர்கள்? நீங்கள் எவ்விதமான வாழ்க்கை வாழ்வீர்கள்? நீங்கள் கர்த்தரை மறப்பீர்களா?

மிகச்சிறிய அளவிலான மக்களே செல்வந்தர்களாகவும், நல்லவர்களாகவும் இருக்கிறார்கள். அதிக செல்வந்தராக உள்ள மக்களுள் மிகவும் சிறிய தொகையினரே கர்த்தரை நேசிக்கின்றனர். யோபுவிடம் அதிக பணம் இருந்தது. யோபு **செல்வந்தனாகவும்**, கர்த்தரை **நேசித்தவனாகவும்** இருந்தான். அவனுக்கு சொந்தமானவைகள் எவ்வளவு இருந்தது எனப் பாருங்கள்!

கர்த்தர் யோபுவை ஆசீர்வதித்ததை எல்லோரும் பார்க்க வேண்டும் என விரும்புகிறார். ஆனால் யோபுவின் நிலமை அவனைக் கெடுக்கவில்லை. அவன் தொடர்ந்து அதிகமாக கர்த்தரை நம்பினான். நல்லதை நேசித்தான். தீமையானவைகளை வெறுத்தான்.

யோபு ஒரு நல்ல மனிதன். கர்த்தர் பல உடமைகளை அவனுக்குக் கொடுத்த போதும், அவன் தொடர்ந்தும் நல்ல மனிதனாகவே இருந்தான். எல்லாவற்றையும் யோபுவிடமிருந்து எடுத்த போது கூட, அவன் ஒரு நல்ல மனிதனாகவே இருந்தார். ஒரு மனிதன் உள்ளார்ந்த ரீதியில் நல்லவனாக இருக்கும்போது, வெளியரங்கமான செயலில் அவன் தீங்கு செய்ய மாட்டான்.

> ≫ கர்த்தர் உள்ளார்ந்த ரீதியில் உங்களை நல்லவராக உருவாக்கியிருக்கிறாரா? அல்லது நீங்கள் இன்னும் ஆலயத்தில் இருக்கும்போது மாத்திரம் கிறிஸ்தவர்களாக இருக்கிறீர்களா? நீஙகள் **உண்மையான** கிறிஸ்தவர்களாக இருக்க விரும்பினால், உங்களை மாற்றியமைக்கும் ஒருவராக இயேசு இருக்கிறார். 📖 **யோவான் 3:3, 16.**

# 2 தேவனும் சாத்தானும்

### பின்னணி

யோபு ஒரு நல்ல மனிதர் என கர்த்தர் எமக்கு சொல்கிறார் (யோபு 1:1). யோபு ஒரு நல்ல மனிதர் என கர்த்தர் சாத்தானிடத்திலும் சொல்கிறார் (யோபு 1:8). சாத்தான் யோபுவைத் தாக்குவதே கர்த்தரின் திட்டமாயிருந்தது! ஒரு நல்ல மனிதன் எவ்வாறு துன்பத்தை அனுபவிக்கிறார் என சாத்தானுக்கும் எமக்கும் காட்டுவதை கர்த்தர் விரும்புகிறார்.

யோபு 1:1~12

### முக்கிய குறிப்பு

கர்த்தர் சாத்தானை கட்டுப்படுத்துகிறார். கர்த்தர் எமக்கு நேரிடும் கடினமான காரியங்களை கட்டுப்படுத்துகிறார்.

### சிந்தித்து செயற்படுவதற்கு

நல்ல விடயங்கள் கர்த்தரிடம் இருந்தும் தீமையான விடயங்கள் சாத்தானிடம் இருந்தும் வருகின்றன என சில கிறிஸ்தவர்கள் நினைக்கின்றார்கள். ஆனால் இந்த சிந்தனையில் என்ன தவறாக உள்ளது?

**கர்த்தரே** யோபுவிற்கு பிரச்சனைகளைக் கொண்டு வந்தார் (யோபு 2:10, 42:11). உங்களுக்கு ஏதாவது ஒரு தீமை ஏற்பட்டால், அது கர்த்தரால் அனுமதிக்கப் பட்டிருக்கிறது என்பதை நம்புவது **கடினமாக** இருக்கிறது. ஆனால் அவர் அதை அனுமதிக்கிறார். கர்த்தர் கடடுப்படுத்துகிறவர் என்பதை உங்கள் செவிமடுப்போர் புரிந்துகொள்வதற்கு எவ்வாறு உதவுவீர்கள்?

கர்த்தர் எமக்கு வரும் எல்லா பிரச்சனைகளுக்கும் பின்னால் இருக்கிறார் என்பதை அறியும் போது அது எமக்கு பெரும் ஆறுதலளிக்கிறது. நாம், வெறுக்கும் பிசாசின் கரங்களில் அல்ல, கர்த்தருடைய அன்புக் கரங்களில் இருக்கிறோம்.

இரண்டு முக்கியமான சத்தியங்களை உங்கள் செவிமடுப்போர் கற்றுக்கொள்ள அவர்களை உற்சாகப்படுத்துங்கள்: கர்த்தர் எல்லா **வல்லமையும்**, **அன்பும்** உள்ளவர் (சங் 62:11-12).

### குறிப்புகள்

- **யோபு** 1:6-7. இங்கே சாத்தான் ஏன் தேவ தூதர்களுடன் வருகிறான் என்று எமக்குத் தெரியாது. தேவன் சாத்தானை பரலோகத்தில் இருந்து துரத்தி விட்டார், ஆனால் அவன் உலகத்தில் இருக்க தேவன் அனுமதிக்கிறார். சாத்தானின் தீமையான கிரியைகளை கர்த்தரின் நல்ல நோக்கங்களுக்காக பயன்படுத்த தேவன் விரும்புகிறார்.
- **யோபு** 1:8. **தேவன்** சாத்தானுக்கு யோபுவைச் சுட்டிக் காட்டினார். சாத்தான் மூலமாக யோபுவுக்கு பிரச்சனைகளைக் கொண்டுவருவது **கர்த்தருடைய** திட்டமாயிருக்கிறது.

## கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 1:6 – 12

- **யோபு 1:9-11.** சாத்தான் **கர்த்தருக்கு** எதிராகவும், யோபுவுக்கு எதிராகவும் பேசுகிறான். “சாத்தான் கர்த்தரிடம் நீர் யோபுவுக்கு அநேக ஆசீர்வாதங்களைக் கொடுத்திருக்கிறீர். சகல தீங்குகளிலிருந்தும் அவனைப் பாதுகாக்கிறார். இவ்விதம் உம் பக்கத்தில் வைத்துக்கொண்டால் அவன் உம்மை சேவிப்பான்! தானே” என்றான்.
- **யோபு 1:12.** கர்த்தர் சாத்தானிடம் அவனுக்கு என்ன செய்ய முடியும், என்ன செய்ய முடியாதென்பதை சரியாகக் கூறுகின்றார். கர்த்தரே சாத்தானைக் கட்டுப்படுத்துகிறார்.

## பிரசங்கியுங்கள்: யோபு 1:6 – 12

### சாத்தான்

**சாத்தான் ஒரு கொடிய தூதன் மாத்திரமே**

**யோபு 1:6**

சாத்தான் இறைவன் அல்ல. சாத்தானுக்கு அவன் விரும்பியதை செய்ய முடியாது. கர்த்தர் அனுமதிக்கும் வரை யோபுவைத் தொட முடியாதிருந்தது.

⊞ ஒரு சிறிய கற்பனை. ஒரு பெரிய சிறுவனும் ஒரு சிறிய சிறுவனுமாக இரண்டு சிறுவர்கள் இருந்தனர். பெரியவன் சிறியவனை வெறுக்கிறான். அவனைக் காயப்படுத்த விரும்புகிறான். ஆனால் ஆசிரியர் அங்கே இருக்கிறார். எனவே பெரியவனுக்கு சிறியவனைத் தொட முடியவில்லை. பெரியவன் சாத்தானுடைய ரூபத்தில் இருக்கிறான். தேவனுடைய பிள்ளைகளை விட சாத்தான் வல்லமையானவன். இவன் தேவனுடைய பிள்ளைகளைத் துன்பப் படுத்துகிறான். ஆனால் கர்த்தர் சொல்லும்வரை அவனால் எம்மைத் தொட முடியாது.

**யோபு 1:12**

» சாத்தானுக்கு தான் விரும்பியதை செய்ய முடியாததால் தேவனுக்கு துதியுண்டாகட்டும். சாத்தான் தீமைக்குப் பொறுப்பானவனல்ல. தேவன் அனுமதிப்பதை மாத்திரமே அவனால்

செய்ய முடியும். தேவ ஜனங்களுக்கு தீங்கு நடைபெறும்போது **தேவன்** அதைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார். ஆகவே கர்த்தரை துதியுங்கள்.

**சாத்தான் தீமையானவைகளை நாடுகிறான்.**

யோபு 1:9-11

சாத்தான் என்ன செய்ய விரும்புகிறான் என்பதை நீங்கள் காண்கிறீர்களா? அவன் தேவனோடு உள்ள யோபுவின் நட்பைக் கெடுக்க விரும்புகிறான். யோபு தேவனிடமிருந்து நன்மைகளைப் பெறுவதால் மாத்திரமே அவன் கடவுளுக்கு சேவை செய்கிறான் என சாத்தான் சொன்னான். இது ஒரு பொய்யாகும்.

சாத்தான் இவ்வாறான சந்தேகங்களை எம் மனதில் உருவாக்க விரும்புகிறான். சாத்தான் ஏமாற்றுபவன் என்பதை நினைவில் வையுங்கள். அவன் எங்களை காயப்படுத்துகிறவனாக இருக்கிறான். **யாக்கோபு 4:7**

## கர்த்தர்

யோபு 1:6-12

**கர்த்தர்** சாத்தானிடம் எவ்வாறான கேள்விகளைக் கேட்கிறார் எனப் பாருங்கள். **கர்த்தர்** யோபுவைப் பற்றி சாத்தானை சிந்திக்க வைக்கிறார். சாத்தான் யோபுவைக் காயப்படுத்த முடியும் என **கர்த்தர்** சொல்கிறார். கர்த்தர் எல்லாவற்றையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்!

யோபு 2ம் அதிகாரத்திற்குப் பின் நாம் சாத்தானைப்பற்றி வாசிப்பதில்லை. யோபுவின் புத்தகத்தில் சாத்தான் அவ்வளவு முக்கியமானவன் அல்ல. நாம் துன்பப்படுகையில் முக்கியமாக தேவனைப்பற்றி யோசிப்போம். **நாம் சாத்தானை குற்றம் சொல்ல மாட்டோம் - கர்த்தர் மீது நம்பிக்கை வைப்போம்.**

தனது துன்பத்துக்குப்பின்னால் தேவன் இருக்கிறார் என யோபுவுக்குத் தெரியும். **கர்த்தர்** தன்னைக் கொன்றாலும் கூட தான் கர்த்தரில் நம்பிக்கையுடன் இருப்பேன் என்று தேவன் கூறுகிறார் (யோபு 13:15).

சாத்தான் எமக்கு பயங்கரமான காரியங்களைச் செய்யும்படி கர்த்தர் அனுமதிக்கிறார் என்பதை புரிந்து கொள்வது கடினமாக இருக்கிறது. **யோபு 1:12** கடினமான காரியங்கள் எமக்கு நமக்கு நடக்கும் போது நாம் எப்படி உணர்கிறோம் என்பதைக் கலந்துரையாடுங்கள். சிந்தித்து செயற்படுதல் எனும் பகுதியைப் பாருங்கள்.

யோபு 1:9-11 இல் காணப்படும் சாத்தானுடைய வார்த்தைகள் உங்களுக்கு உண்மையாக இருக்கலாம். உங்களுக்கு கர்த்தர் நன்மையானவைகளை கொடுக்கும் போது மாத்திரம் நீங்கள் கர்த்தரை நம்புவீர்களா?
அவர் உங்களை நேசிக்கிறார் என உங்களுக்குத் **தெரியுமா**? ஏனெனில் அவர் உங்களுக்காக சிலுவையில் மரிக்க தமது மகனை ஒப்புக்கொடுத்தார். என்ன நடந்தாலும் நீங்கள் அவரை நம்புவீர்களா? ஏனெனில் உங்களுக்காக இயேசு மரித்தார். **ரோமர் 5:8**

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 1:13-22

# 3 கர்த்தரை மகிமைப்படுத்துவீர்களா?

**▣ பின்னணி**

யோபுவிற்கு கொடூரமான சம்பவங்கள் விரைவில் வரும் என எமக்குத் தெரியும். யோபுவை சோதிப்பதற்கு **சாத்தானுக்கு** கர்த்தர் அனுமதி கொடுத்தார் என்பதும் எமக்குத் தெரியும். யோபுவைத் துயரப்படுத்தும் போது யோபு கர்த்தரை சபிக்க வேண்டுமென சாத்தான் விரும்புகிறான். **கர்த்தர்** யோபுவைப் பற்றி உறுதியாக இருந்தார் என்பது எமக்குத் தெரியும். அவர் ஒரு உண்மையுள்ள விசுவாசி ஒரு உண்மையுள்ள மனிதன்.

**யோபு 1:1~12**

யோபுவிற்கு இதைப் பற்றி எதுவும் தெரியாது என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். யோபுவின் விசுவாசம் எவ்வளவு ஆழமானது என்பதைப் பற்றி இங்கு நாங்கள் கற்போம். **யோபு 1:13~22**

**▣ முக்கிய குறிப்பு**

ஒரு விசுவாசிக்கு என்ன நடத்தாலும் அவர் கடவுளை மகிமைப்படுத்தி அவர் மீது நம்பிக்கை வைப்பது சாத்தியமாகும்.

**★ சிந்தித்து செயற்படுவதற்கு**

1. யோபு எமக்கு ஒரு சிறந்த உதாரண புருஷனாகத் திகழ்கிறான். ஆனால் கர்த்தர் எமக்கு துன்பங்களை அனுமதிக்கும் போது நாம் யோபுவைப் போல எப்போதும் கடவுளை மகிமைப்படுத்த மாட்டோம். தோல்வியுற்ற விசுவாசிகளை ஆறுதல் படுத்த வேண்டும் என்பதை நினைவில் வைத்திருங்கள். ஒரு வேளை தங்களுக்கு துன்பம் ஏற்படும் போது சிலர் கடவுளுக்கு விரோதமாக செயற்படலாம். அவர்கள் கடவுளிடம் மன்னிப்புக் கேட்பதற்கும் அவரை மகிமைப் படுத்துவதற்கும் அவர்களுக்கு உதவுங்கள்.

2. துன்பங்கள் வருவதற்கு முன் கடவுளின் வழிகள் பற்றி அறிந்திருப்பது நல்லது. அவர் நல்லவர். அவர் அன்பானவர் அவர் ஞானமும் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும் அதிகாரமும் உடையவர். இது எமக்குத் தெரிந்தால் எமக்குப் பிரச்சனைகள் வரும்போது அவரை மகிமைப் படுத்துவது எளிதாயிருக்கும் (தானியேல் 2:20-21, 4:34-35).

**❁ குறிப்புகள்**

- **யோபு** 1:14-19. நான்கு பயங்கரமான சம்பவங்கள் யோபுவின் குடும்பத்திற்கு நடந்தது. இரண்டு மனித குழுக்கள் அவரைத் தாக்கினார்கள் ("சபேயர்" மற்றும் "கல்தேயர்"). மற்றையது வானத்திலிருந்து வந்த அக்கினி மற்றும் புயல் காற்று ஆகியவையாகும். இந்த நான்கும் சாத்தானிடமிருந்து கர்த்தருடைய உடன்பாட்டுடன் வந்தது என்பது எமக்குத் தெரியும். கர்த்தர் எல்லாவற்றையும் கட்டுப் படுத்துபவராக உள்ளார். ஆகவே

## கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 1:13-22

கரத்தர் இதை செய்திருக்கிறார் என்ற யோபுவின் பார்வை சரியானதாகும் (யோபு 1:21).

- **யோபு 1:20.** யோபு தனது ஆடைகளை கிழித்து தனது தலைமுடியினை வெட்டி தனது வலியையும் இழப்பையும் வெளிக்காட்டினார். எமது வலிகளை வெளிக்காட்டுவது நன்மையானதாகும். இருந்தாலும் யோபுவின் இருதயம் வேதனையால் நிறைந்திருந்தாலும் **அவர் இன்னும் கர்த்தரைத் துதிப்பதற்கும் மகிமைப் படுத்துவதற்கும் விரும்புகிறான்.** நாம் எமது (வேதனை, துக்கம், கோபம்) போன்றவற்றில் நாம் எவ்வளவு தூரம் கடவுளுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க முடியும். நாம் உள்ளார்ந்த ரீதியில் உணர்ந்து கர்த்தரை துதிக்காமல் வெறும் புன்னகையால் கர்த்தரை துதிப்பது போல ஒருபோதும் **பாசாங்கு** செய்யக்கூடாது.
- **யோபு 1:22.** யோபு 1:11 ஐப் பாருங்கள். **சாத்தான் தோல்வியுற்றான்.**

## பிரசங்கியுங்கள்: யோபு 1:13-22

### கர்த்தரைப் பற்றி என்ன எண்ணம் கொண்டுள்ளோம்.

யோபு 1:20

[ கதையை கூறுங்கள். நான்கு பேர் யோபுவுக்கு துர்ச்செய்தியை கொண்டு வருவது போல் நடித்துக் காட்டுங்கள்.] இவ்வாறான சம்பவங்களில ஏதாவது ஒன்று உங்களுக்கு ஏற்பட்டாலும் கூட நீங்கள் எப்படி உணர்வீர்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

**எல்லாக்காரியங்களும் தவறான விதத்தில் உங்களுக்கு நடக்கும் போது நீங்கள் தேவனைப்பற்றி உண்மையாக என்ன நினைக்கிறீர் கள் என்பதை கண்டுபிடியுங்கள்.**

இச்சம்பவங்கள் யோபுவிற்கு நடைபெறும் முன்பு அவர் எவ்வாறு இருந்தார் என்பதை நினைத்துப் பாருங்கள். அவர் சந்தோசமாக இருந்தார். அவர் செல்வந்தனாக இருந்தார் அவர் கர்த்தரை நேசித்தார். பின்னர் ஒரு சில நிமிடங்களில் அவர் அனைத்தையும் இழக்கின்றார். அவரது பத்துப் பிள்ளைகளையும் இழக்கிறார். இங்கே கர்த்தரைப் பற்றி யோபு என்ன நினைத்திருப்பார் என்பதைப் பார்க்கலாம்.

- **யோபு அவருடைய வேதனையை வெளிக்காட்டுகிறான்.** அவன் கடவுளுக்கு உண்மையாக இருந்தான். நன்றாக இருப்பது போல் அவன் நடிக்கவில்லை.

அவன் நன்றாக இருக்கவில்லை உள்ளார்ந்த ரீதியில் உடைத்து போயிருந்தான்.

- **யோபு ஆராதனை செய்கிறான்.** யோபுவிற்கு அநேக வேதனைகள் ஏற்பட்டன. அவனுக்குள் அனேக கேள்விகள் எழுந்தன. ஆனால் அவன் காத்திருந்தான். எல்லாவற்றையும் விட முக்கியமான ஒன்று **முதலாவதாக** வருகிறது. அவன் கர்த்தரைத் துதிக்கிறான்!

» பிரச்சனைகள் வரும் போது நீங்கள் கர்த்தரை **நோக்கித்** திரும்புவீர்களா? அல்லது கர்த்தரை **விட்டு** விலகுவீர்களா? நீங்கள் கர்த்தரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்பதை இது காட்டுகிறது. யோபு கர்த்தரை துதிக்கிறான். ஏனெனில் **கர்த்தர் இன்னும் துதிக்குப்பாத்திரர்** என்பதை அவன் அறிந்திருந்தான். கர்த்தர் என்ன செய்தாலும் அவர் **நல்லவர்**, அவர் **அன்பானவர்.** நீங்கள் அதை நம்புகிறீர்களா?

## கர்த்தரின் நற்கொடைகளைப் பற்றி நாம் நினைக்கின்றோம்

யோபு 1:21

**கர்த்தருடைய கொடைகளை உங்களிடமிருந்து அவர் எடுக்கும் போது நீங்கள் உண்மையில் எவ்வாறு சிந்திக்கிறீர்கள் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.**

சாத்தான் மிகவும் தவறானவன். (யோபு 1:9-11) யோபு **கர்த்தருடைய கொடைகளை** நேசிப்பதாக சாத்தான் நினைத்தான். ஆனால் யோபு கர்த்தரை நேசித்தான். கர்த்தர் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்ட போதும் கூட யோபு இன்னும் கர்த்தரை நேசித்தான்! **யோபு 1:21**

- உங்களிடம் உள்ள எல்லா கொடைகளையும் நினைத்துப் பாருங்கள். நாம் “இவை என்னுடையது” என்போம். ஆனால் அது உண்மையானதா?
- எங்களுடைய உடைமைகளைக் குறித்து எங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? யார் அவற்றை எமக்குக் கொடுத்தார்கள்?

» கர்த்தர் உங்கள் ஆரோக்கியத்தை, உங்கள் பயிர்களை, உங்கள் தந்தையை, எடுத்துக்கொண்டால் நீங்கள் யோபுவைப்போல் கர்த்தரை மகிமைப்படுத்துவீர்களா? நீங்கள் இன்னும் கர்த்தருடன் இருக்கிறீர்கள். கர்த்தரை நேசிப்பீர்களா?

கர்த்தர் சிறிய எதாவதென்றை எடுத்துக் கொண்டால் கூட அதைக் குறித்து விரைவாக கோபப்படுகிறோம். அல்லது முறைப்பாடு செய்கிறோம். அல்லது உங்களிடம் உள்ள உடைமைகளைப் பற்றி கவலைப்படுவீர்கள்? உங்களுக்கு அதைக் கொடுப்பதற்கு அல்லது பகிர்ந்து கொள்வதற்கு கடினமாக இருக்கிறதா? என கண்டுபிடியுங்கள் கர்த்தர் கொடுத்த **கொடைகளின்** மீது நீங்கள் அதிகம் அன்பு செலுத்துகிறீர்களா?

» கர்த்தர் ஒருபோதும் எடுத்துக்கொள்ளாத ஒரு பரிசு இருக்கிறது. அது உங்களிடம் உள்ள எல்லாவற்றையும் விட மிகவும் பெறுமதி வாய்ந்தது. நீங்கள் இயேசு கிறிஸ்துவை பரிசாக கொண்டிராவிட்டால் இப்போது அவரிடம் கேளுங்கள்.

**மத்தேயு 6:19-21**

# 4 கர்த்தருக்கு உரிமை உண்டு

**பின்னணி**
கொடுரமான இழப்பு யோபுவின் விசுவாசம் எவ்வாறு உள்ளது என்பதைக் காட்டுகிறது. (யோபு 1:20-22):

- அவனுடைய வேதனையிலும் அவன் தேவனை மகிமைப் படுத்தினான்.
- தேவன் தனக்குக் கொடுத்த எல்லாக் கொடைகளையும் எடுத்துக் கொண்ட போதும் அவன் தேவனை நேசிக்கிறான்.

ஆனால் சாத்தான் எளிதில் விட்டு விடவில்லை. அவன், யோபு கர்த்தரிடமிருந்து விலகிச் செல்வதை விரும்பினான். தேவன் கொடுத்த எல்லாவிதமான ஈவுகளுக்காக மாத்திரமே யோபு கர்த்தருக்கு சேவை செய்கிறான் என்பதை சுட்டிக் காட்ட சாத்தான் விரும்பினான்.

**யோபு 2:1~10**

**முக்கிய குறிப்பு**
எமக்கு எதையும் செய்வதற்கு இறைவனுக்கு உரிமையுண்டு (கிறிஸ்தவர்கள் சில நேரங்களில் இதை தேவனின் "இறையாண்மை" என்று அழைக்கின்றனர். அவர் எங்களுக்கு அரசர் [இறைவன்] எங்களுக்கு மேலானவர்).

**சிந்தித்து செயற்படுவதற்கு**
பிரச்சனைகள் வரும் போது இவ்வுண்மையை ஏற்றுக்கொள்வது கடினமான உள்ளது. அது எவ்வளவு கடினமானது என்பதை நீங்கள் சுட்டிக் காட்டுங்கள். அன்பாகப் பேசுங்கள். உங்கள் செவிமடுப்போருள் சிலர் எவ்வளவு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள்.

யோபுவைப் போல் பிரச்சனைகளை ஏற்றுக்கொண்ட இன்றைய மனிதர்களைப் பற்றிய கதைகளை சொல்லுங்கள். இது உங்கள் செவிமடுப்போருக்கு தைரியத்தையும் பலத்தையும் தரும். இந்தக் கடினமான சத்தியம் நல்ல உண்மை என்பதை அது எடுத்துக்காட்டும்! அது தேவனைப் பற்றிக்கொள்ள எமக்கு உதவுகிறது.

**குறிப்புக்கள்**

- **யோபு 2:3.** யோபுவிற்கு என்ன நடந்தாலும் தேவன் அதை பொறுப்பேற்றுக்கொள்கிறார் ("நீ அவரை எதிர்த்து என்னைத் தூண்டிவிட்டாய்"). சாத்தான் யோபுவைத் தாக்குவதற்காக தேவனிடம் அனுமதி கேட்டான். தேவன் இல்லை என்று சொல்லியிருக்க முடியும். ஆனால் தேவன் ஆம் என்று சொன்னார்.
- **யோபு 2:4-5.** (யோபு 1:12 ஐ பார்க்கவும்) "இந்தத் தொல்லை பாரதூரமற்ற ஒன்று மட்டுமே என்று சாத்தான் சொல்கிறான். நாங்கள் இன்னும் உண்மையாகவே யோபுவைத் துன்புறுத்தவில்லை. யோபுவையே நான் துன்பத்துக்

## கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 2:1-10

குள்ளாக்குகிறேன். அப்பொழுது அவன் உம்மை சபிப்பான்" என சாத்தான் சொல்கிறான்.

- **யோபு 2:9.** யோபு விசுவாசமாக இருப்பதை நிறுத்தமாட்டான் என்று யோபுவின் மனைவி காண்கிறாள். யோபு தேவனை சபிப்பானென்றால், அவன் நம்புகின்ற அனைத்திற்கும் எதிராக நிற்பான். இந்த பயங்கரமான வேதனையை விட அது நல்லது என யோபுவின் மனைவி நினைக்கிறாள். ஆனால் அது தவறு என யோபுவைப் போல் அவள் உணர்ந்தாள்.

## பிரசங்கியுங்கள்: யோபு 2:1-10

### பற்றிப் பிடித்தல்!

**யோபு 2:9**

[சாத்தானின் செயல்களுக்கான எல்லைகளை கர்த்தர் எவ்வாறு ஏற்படுத்துகிறார் என்பதை மீண்டும் மீண்டும் காணக்கூடியதாக உள்ளது. (யோபு 2:1-6) கர்த்தர் கட்டுப்படுத்துபவர். சாத்தானுக்கு யோபுவின் வாழ்க்கையை எடுத்துவிட முடியாது.]

யோபுவுக்கு ஏற்கனவே எவ்வளவு பிரச்சனை இருந்தது என்பதை நினைத்துப் பாருங்கள். அவன் தனது பிள்ளைகளையும் அவனது செல்வத்தையும் இழந்தான். **கர்த்தர்** அவனுக்கு இதைச் செய்தார் என அவனுக்குத் தெரியும். அவனுடைய வேதனை அதிகமாக இருந்தது.

பின்னர் தேவன் அவனுக்கு அதிக வேதனையை கொடுத்தார்! அவனது உடல் முழுவதும் புண்களினால் நிறைந்திருந்தது. இது எவ்வளவு வேதனையானது என்பதை சிந்தித்துப் பாருங்கள் (யோபு 2:7-8)! இது சாத்தானுடைய யோசனை என்று எமக்குத் தெரியும். யோபு இதை அறியவில்லை. ஆனால் கர்த்தரே எப்போதும் ஆளுபவர் என்பது அவனுக்குத் தெரியும்.

யோபு என்ன செய்வான்? **யோபு 2:9**

யோபு கர்த்தர் மீது நம்பிக்கை

வைத்திருந்தான். அவனது மனைவி அவன் கர்த்தரை நம்புவதை நிறுத்த விரும்புகிறாள். அவள் கர்த்தருடன் கோபமாக இருந்தாள். யோபு கர்த்தருடன் உள்ள உறவை நிறைவு செய்ய வேண்டுமென விரும்பினாள். இவை யாவற்றையும் கரத்தர் யோபுவிற்கு செய்தால். கர்த்தரை சபிக்க வேண்டும். ஆனால் யோபு இன்னும் கர்த்தரின் மீது நம்பிக்கையாயிருந்தான். ஏனெனில் **எமக்கு எதைச் செய்வதற்கும் கர்த்தருக்கு உரிமை உண்டு** என்பதை அவன் அறிந்திருந்தான்.

யோபு பல ஆண்டுகளாக இதை நம்பியிருந்தான். அவன் இப்போது கொடூரமான வேதனையில் இருந்தாலும் அவன் இன்னும் தேவனை விசுவாசித்தான். அவர் தேவனை விட்டு விலக மாட்டான்.

» யோபுவின் மனைவியைபோல் சிந்திப்பது சுலபமானது. "தேவன் **இதைச்** செய்தடியால் அவர் எப்படி நல்லவராக இருக்கலாம்?" என நாங்கள் நினைக்கலாம். "தேவன் இவை எல்லாவற்றையும் செய்தபடியால் தேவனிடமிருந்து விலகிச் செல்வது நல்லது" என நாம் நினைக்கலாம். **ஆனால் இது தவறானது.** இது மிகவும் ஆபத்தானது.

யோபு சரியானவர். உங்களுக்கு புரிந்து கொள்ள முடியாத காரியங்கள் வரும் பொழுது கர்த்தரை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். வேதாகமம் சொல்வதை நம்புங்கள். நமக்கு எதையும் செய்வதற்கு கர்த்தருக்கு உரிமை உண்டு. அவர் எப்போதும் நல்லதையே செய்வார்.

## பிரச்சனைகளை ஏற்றுக்கொள்ளுங்கள்!

யோபு 2:10

யோபு எதை விசுவாசித்தான்?

- நாம் பிரச்சனையை ஏற்கத் **தகுதியுள்ளவர்களாக** இருக்கும் போது மாத்திரம் தான் பிரச்சனைகளை ஏற்றுக்கொள்வதா?
- **சாதாரணமாக** வரும் துன்பங்களை மட்டுமே நாம் ஏற்றுக்கொள்வதா?
- எதிர்பார்க்க முடியாத நேரத்தில் வரும் **எந்தத்** துன்பங்களையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமா?

நீர் எதை விசுவாசிக்கிறீர்?

யோபுவிற்கு இது எளிதாக இருக்கவில்லை! இதை நாம் பின்னர் பார்ப்போம். ஆனால் இத்துன்பம் கடவுளிடம் இருந்து தனக்குத் கிடைத்த **ஈவு** என்பது அவனுக்குத் தெரியும். யோபு அதை புரிந்து கொள்ளவில்லை. ஆனால் அவனுடைய நல்ல இறைவனிட மிருந்து அவனுக்கு கிடைத்த ஈவுகளை **ஏற்றுக்கொள்கிறான்.**

» அவர் ஏன் என்று உங்களுக்கு சொல்லாமல் எதை செய்தாலும் நீங்கள் கர்த்தரை நம்புவீர்களா? அவர் கர்த்தர் என்பதால் நமக்கு **எந்த** பிரச்சனையையும் கொடுக்கும் உரிமை அவருக்கு உண்டு. நீங்கள் கர்த்தரை நம்புகிறீர்களா? கர்த்தர் தம் குமாரனை பாடுகள் அனுபவிக்கும்படி எமக்குக் கொடுத்தார், என்பதை நினைவில் வையுங்கள். இயேசு கிறிஸ்து துன்பப்பட்டு தமது பிள்ளைகளை நரகமாகிய கொடிய பிரச்சனையிலிருந்து **காப்பாற்றுகின்றார்!**

# 5 அவனது வலியை உணர்தல்!

**பின்னணி**

யோபு புத்தகத்தில் ஒரு நீண்ட பகுதியை நாம் தொடங்குகின்றோம். பல அதிகாரங்களில் யோபுவும் அவனது நண்பர்களும் அவனுக்கு ஏற்பட்ட துன்பத்தைப் பற்றி வாதிடுகின்றனர். முடிவிலே என்ன நடந்தது என்பதை கண்டுபிடிக்க கடைசி அதிகாரம் வரை காத்திருக்க வேண்டும்.

யோபுவைப் பாவத்துக்குட்படுத்த முயற்சி செய்த சாத்தான் தோற்றுப்போகிறான். யோபு கர்த்தருக்கு எதிராக திரும்ப மறுக்கிறான். அதற்குப் பதிலாக அவன் கர்த்தரை மகிமைப் படுத்துகிறான் (யோபு 1:20-22, 2:10).

யோபுவின் வேதனை எவ்வளவு ஆழமானது என்பதை இங்கு நாம் காண்கிறோம். ஆனால் யோபு இன்னும் கர்த்தரைப் பற்றிப் பிடித்திருந்தான். ஆனால் அவனுடைய வார்த்தைகள் அவனது கசப்பான வேதனையை எடுத்துக்காட்டுகின்றன;
**யோபு 2:11–3:26.**

**முக்கிய குறிப்பு**

யோபுவின் வேதனையை உணர்ந்து புரிந்து கொள்ளுதல்.

(இன்று அதிகளவில் துன்பப் படுகின்ற மக்களின் வேதனையை புரிந்து கொள்வதற்கு இது உதவுகிறது. நாம் யோபுவைப் போல் உணரும்போது இது எமக்கு உதவுகிறது.)

**சிந்தித்து செயற்படுவதற்கு**

யோபு என்ன பிழையான வார்த்தைகள் சொல்கிறான் என்பதைக் காண்பது எளிது. நாம் பிறந்த நாளை ஒரு நாளும் சபிக்க மாட்டோம்! நாம் நிச்சயமாக மரிக்க வேண்டுமென விரும்ப மாட்டோம்! ஆனால் இக் குறிப்பை மறந்து விடாதீர்கள். **யோபு அவனுடைய வேதனையை வெளிக்காட்ட வேண்டியதாயிருந்தது.** அவனுடைய **உணர்ச்சிகளுக்கு** நாம் செவிகொடுக்க வேண்டும். எமது வாழ்வில் நாம் காயப்படும் போது, மக்கள் எமது வேதனையை புரிந்துகொள்வது எமக்கு தேவையாயிருக்கிறது. யாராவது எம்மைத் திருத்த வேண்டிய தேவை எமக்கு வழமையாக இருப்பதில்லை.

உங்களுக்கு செவிமடுப்போர் வேதனையில் உள்ள மக்களின் வேதனையை உணர உதவி செய்யுங்கள்.

**குறிப்புக்கள்**

- **யோபு 2:11-13.** யோபுவின் மூன்று நண்பர்களும் உண்மையாகவே யோபுவிற்கு உதவ விரும்பினார்கள். அவர்கள் அவனோடு அழுதார்கள். அவர்கள் ஒரு வாரத்திற்கு அவனோடு மௌனமாக இருந்தார்கள்.
- **யோபு 3:1-10.** யோபு தான் பிறந்த நாளை சபித்தான். அந்த நாள் ஒரு போதும் உருவாகியிருக்கக கூடாது என விரும்பினான். அந்த நாளை நாட்காட்டியிலிருந்து

## கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 2:11 –3:26

எடுக்கவும் விரும்பினான்.

- **யோபு 3:11-19.** “நான் பிறந்த நேரத்திலே இறந்திருந்தால்! எனக்கு இந்த வேதனை வந்திருக்காது. நான் சமாதானமாக ஓய்வெடுத்திருப்பேன்” என யோபு சொன்னார். வாழ்க்கை மிகவும் கொடூரமானதாகவும் மரணம் அவனுடைய பார்வைக்கு அருமையானதாகவும் காணப்பட்டது! (யோபு கூறியது தவறானது யோபு 3:17; மரணம் என்பது நியாயத்தீர்ப்பு என்பதை அவன் மறந்து விட்டான்.)
- **யோபு 3:20-26.** யோபு மரணத்திற்காக ஏங்கினான். மரித்தால் அவன் சந்தோசமாக இருப்பான் - கர்த்தர் ஏன் அவனை உயிரோடு வைத்தார்? அங்கு அவனுக்கு தப்பித்துக்கொள்ள இயலாது (யோபு 3:23). கர்த்தர் அவனை வேதனையாலும், கண்ணீராலும் நிறைக்கிறார்! (யோபு 3:24) அங்கு ஓய்வு இல்லை.

## பிரசங்கியுங்கள்: யோபு 2:11 –3:26

### அவனது அமைதியான வேதனையை உணர்தல்

யோபு 2:11–13

**யோபு அமைதியாக இருந்தார்.** அவனுக்கு நடந்த எல்லாவற்றையும் நினைத்துப் பாருங்கள். அதிக அதிர்ச்சியால் நிறைந்தவனாயும். பேசுவதற்கு அச்சமடைந்தவனாயும் இருந்தான். வேதனையோடு இருக்கவே அவனுக்கு முடிந்தது.

**அவனது நண்பர்கள் அமைதியாக இருந்தார்கள்.** அவர்கள் அவனோடு ஒருவாரம் உட்காந்திருந்தார்கள்! அவர்கள் உண்மையாகவே யோபு மீது அக்கறை காட்டினார்கள். அவனுடைய வேதனையிலும் கண்ணீரிலும் அவர்கள் அவனுடன் பேசுவதற்கு முயற்சி செய்யவில்லை.

> சில நேரங்களில் இவ்வாறு இருக்கும் மக்களுக்கு தேவையானது என்னவென்றால். அவர்களோடு அழுது அவர்களை கட்டி அணைப்பதாகும். அதுதான் கர்த்தரின் அன்பைக் காட்டுவதற்கு சிறந்த வழியாகும்.

### அவனது பேச்சின் வேதனையை உணர்தல்

சில நேரங்களில் மக்கள் பேசும் போது கடினமாக இருக்கலாம். அவர்களுடைய வேதனையெல்லாம் வெளிப்படுகிறது. சரியானவை அல்ல என்று நாம் அறிந்த விடயங்களை

அவர்கள் சொல்லக்கூடும். ஒரு வேளை அவர்கள் தேவனை புறந்தள்ளலாம். நாம் **அவர்களுடைய வேதனையை உணர வேண்டும்.** அவர்களை திருத்த முயற்சி செய்யக் கூடாது.

### அவனது இருளை உணருங்கள்

📖 யோபு 3:3–5

⊞ விளக்குகள் திடீரென்று அணைந்து போகும் போது எல்லா இடமும் இருளாக இருக்கும். எல்லாமே இருக்கும் ஆனால் உங்களுக்கு ஒன்றையும் பார்க்க முடியாது. இதேபோல் தான் யோபுவும் இருக்கிறான். எல்லாம் இருளாக இருக்கிறது. எந்த வித ஆறுதலும் இல்லாதிருக்கிறது. எந்த வித மகிழ்ச்சியும் எந்த வித எதிர்பார்ப்பும் இல்லாதிருக்கிறான். இன்னும் வேதனையுடன் இருக்கிறான். ஆனால் கர்த்தர் அங்கு இன்னும் இருக்கிறார் என்பதை அவன் அறிந்திருக்கிறான். ஆனால் இருளை மட்டும் அவனால் உணர முடிகிறது.

யோபு இன்னும் கர்த்தர் மீது நம்பிக்கை வைத்திருக்கிறான். அவன் பிறந்த நாளை அவர் சபிக்கிறான். ஆனால் அவன் ஒரு போதும் கர்த்தரை சபிக்கவில்லை. அந்த நாள் ஒரு போதும் வராதிருக்கவும் அவன் பிறக்காமலும் இருக்க வேண்டும்! அது எவ்வளவு தீமையானது என்பதை நாம் உணர வேண்டுமென யோபு விரும்புகிறான்.

⊳ நீங்கள் யோபுவைப் போல் இருளை உணரும் பொழுது இயேசு கிறிஸ்துவை நினைவு கூருங்கள். இது எவ்வாறான இருள் என்று இயேசுவுக்குத் தெரியும். கர்த்தர் அவரை கைவிட்டபொழுது அவர் சிலுவையில் மூன்று மணிநேரம் வேதனையை அனுபவித்தார். நரகத்தின் இருளை அவர் உணர்ந்தார். இயேசுவை நீங்கள் அறிவீர்களா? அவர் உங்களுக்குப்பதிலாக நரகத்தின் இருளை ஏற்றுக்கொண்டார். அதற்காக அவரைத் துதியுங்கள்!

### அவர் மரணத்துக்காக எவ்விதம் ஏங்குகிறார் என்பதை உணர்தல்

📖 யோபு 3:20–24, 26

யோபு உள்ளார்ந்த ரீதியில் மிகவும் இருளான நிலையில் காணப்படுகிறார். ஆனால் அவருக்குள் இன்னும் ஒளி பிரகாசித்துக் கொண்டிருக்கிறது (யோபு 3:20)! கர்த்தர் ஏன் அவர் இறப்பதற்கு அனுமதி கொடுக்க வில்லை? கர்த்தர் அவரைச் சுற்றி அவனைப் பாதுகாப்பதற்காக ஒரு வேலியமைக்கிறார். அது தான் அவன் இறக்கவில்லை. வாழ்வு ஒரு சிறைச்சாலை போன்றது. கர்த்தர் யோபுவை வேதனையாலும் கண்ணீராலும் நிறைத்தார். அவர் யோபுவுக்கு ஓய்வு கொடுக்கவில்லை!

இந்த இருளை நாமும் புரிந்துகொள்ள வேண்டும் என கர்த்தர் விரும்புகிறார். யோபுவின் வேதனைகளில் சிலவற்றை நாமும் புரிந்துகொள்ள வேண்டும் அதனால் அது வேதாகமத்தில் காணப்படுகிறது.

⊳ நீங்கள் எப்போதாவது யோபுவைப்போல் இருளை உணர்ந்திருந்தால் நீங்கள் ஒரு போதும் உங்கள் நம்பிக்கையை இழக்க வேண்டியதில்லை. யோபுவும் இந்த இருண்ட காலங்களைக் கடந்து வந்தார். நல்ல விடயங்களாயிராமல் யோபு கூறுவதைப் போல நீங்களும் கூற தேவன் உங்களை அனுமதிக்கலாம். எவ்வாறு இருந்தாலும் யோபு இன்னும் கர்த்தரை பற்றிப் பிடித்திருப்பதை நினைவில் வையுங்கள். எனவே நீங்களும் அவரைப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள்!

# 6 எப்படி உதவி செய்யக்கூடாது!

**பின்னணி**

யோபு 4-5 இல், எலிப்பாஸ் பேசுகிறான். இப்பொழுது யோபு பதிலளிக்கிறான் (யோபு 6-7). அடுத்ததாக பில்தாத் பேசுகிறான், யோபு மீண்டும் பதிலளிக்கிறார் (யோபு 8-10). யோபுவின் மூன்றாம் நண்பன் சோபார் பேசுகிறான், அதற்கு யோபு பதிலளிக்கிறான் (11-14). பின்னர் எலிபாஸ் தொடர்ந்து முயற்சி செய்கிறான், இவ்வொழுங்கு முறையானது யோபு 31ம் அதிகாரம் வரை தொடர்கிறது.

எலிப்பாஸ் பில்தாத் சோபாார் ஆகிய மூவரும் ஒரே மாதிரியான விடயங்களையே கூறினார்கள். யோபு ஏதோ ஒரு மிகவும் பிழையான - காரியத்தை செய்திருக்கிறார் என அவர்கள் நினைத்தார்கள். அதுதான் அவன் மிகவும் துன்பப்படுகிறான் என நினைத்தார்கள். யோபுவை இறைவனிடம் மனம்திரும்பி மன்னிப்பு கேட்கத் தூண்டும் படி அவர்கள் முயற்சி செய்கிறாார்கள். ஆனால் அது தவறானது என எமக்குத் தெரியும்! யோபு 1-2 ஐ வாசிக்கும் போது யோபு மிகவும் **நல்லவன்**, அவர் கெட்டவன் அல்ல என சொல்லப்படுகிறது. **யோபு 4~5**

**முக்கிய குறிப்பு**

பிரச்சனையில் சிக்கியிருக்கும் சிலரிடம் நீங்கள் பேசும் பொழுது முதலாவதாக அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை செவிமடுங்கள்! உங்கள் சொந்தக் கருத்துக்களை கூறாதீர்கள். அது தவறானது என வேதாகமம் கூறுகிறது!

**சிந்தித்து செயற்படுவதற்கு**

இந்த மூன்று நண்பர்களும் யோபுவின் நூலில் பல உண்மை விடயங்களை சொல்கிறார்கள். அவர்களுக்கு கர்த்தரைப் பற்றி அதிகமாகத் தெரியும். ஆனாலும் அவர்கள் கர்த்தரைப் பற்றியும் யோபுவைப் பற்றியும் தவறான காரியங்களை பேசுகிறார்கள் ( யோபு 42:7ஐ பார்க்கவும்). சில சமயங்களில் அவர்கள் உண்மையான காரியங்களைப் பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் சொல்வது யோபுவுக்குப் பொருத்தமற்றதாக இருந்தது (உதாரணம்: யோபு 5:17-18ஐ பார்க்கவும்).

இங்கு தான் நாம் கவனமாக இருக்க வேண்டும். யோபுவின் புத்தகம் **முழுவதுமே** கர்த்தரின் வார்த்தையாகும். ஆனால் பல விடயங்களை மக்கள் தவறாகக் கூறுகிறார்கள்! வாசிக்கும் போது அதை நன்றாக புரிந்துகொள்ள அதன் பெரிய பகுதிகளை வாசிக்க வேண்டும்.

**குறிப்புகள்**

எலிப்பாஸ் யோபுவிடம் கூறும் முக்கிய விடயங்கள்.

- **யோபு 4:1-6.** நீர் மற்ற மக்களை கர்த்தரிடம் நடத்துகிறீர். ஆனால் நான் இப்போது உம்மைத்

## கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 4-5

திருத்த வேண்டும்.

- **யோபு 4:7-11.** மக்கள் விதைக்கிற பிரச்சனைகளை தாங்களே அறுவடை செய்கிறார்கள் என்பதை நான் கண்டேன்.
- **யோபு 4:12-21.** **ஒருவரும் கர்த்தரின் பார்வையில் தூய்மையானவர்கள் அல்ல** என்பதை கரத்தர் எனக்கு காண்பித்தார்.
- **யோபு 5:1-7.** அறிவில்லாத வர்களுக்கு பிரச்சனைகள் வரும்போது அவர்கள் நன்றாக இருப்பதை நான் கண்டேன். பிரச்சனை என்பது வேறெங்கும் இருந்துவரவில்லை. அது எம்மிடம் இருந்தே வருகிறது.
- **யோபு 5:8-16.** உங்களினுடைய பிரச்சனையை எமது மகத்தான இறைவனிடம் சொல்ல வேண்டுமென்பதே எனது ஆலோசனை!
- **யோபு 5:17-27.** தேவன் உங்களைத் திருத்தட்டும். நீங்கள் அவருடைய ஆசீர்வாதத்தை மீண்டும் அனுபவியுங்கள்.

## பிரசங்கியுங்கள்: யோபு 4-5

### எப்படி உதவி செய்யக்கூடாது

யோபுவின் நண்பர்கள் உண்மையிலேயே யோபுவுக்கு உதவ விரும்பினார்கள். ஆனால் **அவர்கள்** சிந்திப்பதிலும் சொல்ல விரும்பும் காரியங்களிலும் பெருமையுடையவர்களாயிருந்தார்கள். **அவர்கள்** அவ் வார்த்தைகளை சொன்னபின் யோபு எவ்வாறு உணர்ந்திருப்பான் என சிந்தியுங்கள்! எலிப்பாஸின் வார்த்தைகள் யோபுவை காயப்படுத்தும் என எலிபாஸ் புரிந்துகொள்ளவில்லை. நீங்கள் ஒரு நல்ல நண்பராக விரும்பினால் எலிபாஸின் தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ளுங்கள்!

**1. நீங்கள் கேட்பதற்கு முன்பதாக பதிலளிக்காதீர்கள்**

**யோபு 4:2**

“இது என்னை மிகவும் வேதனைப் படுத்துகிறது நான் மரிக்கப்போகிறேன்” என யோபு சொன்னார். உண்மையான பிரச்சனை என்னவென்று **யோபு** பெரும்பாலும் இன்னும் புரிந்துகொள்ளவில்லை. அவர் இன்னொருவரின் ஆலோசனையை கேட்பதற்கு தயாராக இருக்கவில்லை! பிரச்சனை என்ன என்பதுப்பற்றி சிந்தித்து அதற்கு பதில் கொடுப்பதற்கு எலிபாசுக்கு மிகவும் இலகுவாக இருந்தது. **ஆனால் இவன் தவறாக செயற்பட்டான். ஏனெனில் இவன் யோபுவிடம் பிரச்சனையை**

செவிமடுத்துக் கேட்கவில்லை.

» கேளுங்கள், கேளுங்கள், கேளுங்கள். அதற்குப்பின் அந்த நண்பர்களுக்கு என்ன உதவி செய்யலாம் என்பதற்காக ஜெபியுங்கள்.

**2. இரக்கமாயிருங்கள்**

யோபு 4:1~6

யோபு மிகவும் வேதனையாக இருந்தான்! எலிபாஸ் இரக்கத்துடன் இவ்வாறு சொல்லியிருக்க மாட்டான்: "கடந்த காலங்களில் நீங்கள் மிகவும் நல்ல அறிவுரைகள் **கொடுத்தி ருக்கலாம்**. அவ் ஆலோசனைகளை அறிவுரையாக **எடுப்பது** மிகவும் இலகுவானது அல்ல அப்படித்தானே!"

» இரக்கத்துடன் இருங்கள்! அவர்களுக்கு என்ன நடந்தாலும் அவர்கள் தகுதியுடையவர்களாகவே இருக்கிறார்கள் இரக்கமாயிருங்கள்!

**3. தாழ்மையுடன் இருங்கள்**

யோபு 5:8

இது மிகவும் சுலபமானது என எலிப்பாஸ் நினைக்கிறார்! நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், கர்த்தரிடமாகத் திரும்புவதே ஆகும்! எலிப்பாஸ் யோபுவை மதிக்க வேண்டும்! இவை யாவும் **தனக்கு** நடந்திருந்தால் **அவர்** எவ்வாறு உணர்வார் என எலிபாஸ் தனக்குத்தானே கேட்க வேண்டும்!

» தாழ்மையுடன் இருங்கள் நீங்கள்! கூறும்படியான சரியான வேதாகம வசனங்கள் உங்களிடம் இருந்தாலும் கூட கவனமாயிருங்கள். அது உங்களுக்கு இலகுவானதாகவும் தெளிவானதாகவும் தோன்றலாம். ஆனால் வேதனையில் இருக்கும் நபர் நீங்கள் அல்ல.

**4. அதைத் தவறாக புரிந்து கொள்ளாதீர்கள்**

யோபு 4:7~8

எலிப்பாஸ் இரக்கமுள்ளவராகவும் மனத் தாழ்மையுள்ளவராகவும் **இருந்த போதிலும் கர்த்தர் குறித்ததான தவறான புரிதலை அவர் கொண்டிருப்பதினால்** அவர் அறிவுரை வழங்கக்கூடாது!

- யோபு 4:8 சரியானதா? யோபு 4:7 சரியானதா?

எலிபாஸின் கருத்தின் **ஒருபகுதி** சரியானது. கர்த்தர் நியாயமானவர். நாம் தீமையான கிரியைகளை செய்தால், அதற்கான கூலியை செலுத்துவோம். ஆனால் நாம் எப்போதும் அதற்கான கூலியை எமது **இந்த வாழ்வில்** செலுத்த மாட்டோம். யோபு 4:7 இல் அவருடைய கருத்து தவறானதாக உள்ளது. அனேக அப்பாவி மக்கள் பயங்கரமான காரியங்களை அனுபவிக்கிறார்கள்.

எலிப்பாஸ் கர்த்தரைக் குறித்த தவறான கருத்தை உடையவனாக இருப்பதனால் அவன் யோபுவைக் குறித்தும் தவறான கருத்தை உடையவனாக உள்ளான்! யோபு கடவுளுக்கு எதிராக செயற்பட்டதினாலேயே யோபு துன்பப்படுகிறான் என எலிப்பாஸ் நினைக்கிறான். அவனின் கருத்து தவறானது!

» நீங்கள் அறிவுரைகளை வழங்குவதற்கு முன்னர் வேதாகமத்தை நீங்கள் நன்றாக புரிந்துக்கொண்டுள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

இல்லாவிட்டால் செவி கொடுங்கள், ஜெபியுங்கள், இரக்கம் காண்பியுங்கள் மற்றும் வேறு ஒருவரது உதவியை நாடுங்கள்.

# 7 நீங்கள் ஏன் என்னைத் தாக்குகிறீர்கள்?

**பின்னணி**

யோபு தனது நண்பன் எலிப்பாஸினால் தாமதப்படுத்தப்பட்டும் அதிர்ச்சிக்குள்ளாக்கப்பட்டும் இருந்தார். யோபு நிச்சயமாக ஏதாவதொரு பாவம் செய்திருப்பார் என எலிப்பாஸ் யோபுவைப்பற்றி தவறாக நினைத்தான். யோபுவின் பிரச்சனைக்கான வேறு எந்தவொரு காரணத்தையும் எலிப்பாஸினால் காண்டுகொள்ள முடியவில்லை.

தான் ஏற்கனவே அதிக வேதனையில் இருப்பதாகவும் - இப்பொழுது அவருடைய நண்பர்கள் அவருக்கு எதிராக மாறிவிட்டார்கள்! **கர்த்தர்** ஏன் இப்பொழுதும் தனக்கு எதிராக மாறிவிட்டார்? எனவும், யோபு நினைக்கின்றார்.
**யோபு 6~7** (**குறிப்புகள்** உதவும்.)

**முக்கிய குறிப்பு**

தேவன் மற்றும் யோபுவின் நண்பர்களாகிய இரு தரப்பினரும் தனக்கு எதிராக உள்ளார்கள் என்று யோபு **நினைக்கின்றான்.** ஆனால் கர்த்தர் நிச்சயமாக யோபுவுக்கு எதிராக **இல்லை.**

**சிந்தித்து செயற்படுவதற்கு**

அநேக கிறிஸ்தவர்கள் யோபு செய்ததைப் போன்ற தவறையே விடுகின்றனர். கர்த்தர் எம்மீது அதிகமாக அன்பு செலுத்துவதற்குப் பதிலாக அவர் எமக்கு எதிராக இருக்கிறார் என நாம் **உணருகின்றோம்.** யோபுவுக்கு **ஏன்** இவ்வளவு பிரச்சனையைக் கொடுத்தார் என கர்த்தர் ஒருபோதும் யோபுவிடம் கூறவில்லை. யோபு கர்த்தரை **விசுவாசிக்க** வேண்டும் என்பதற்காக கர்த்தர் இவ்வாறு செய்தார். நாமும் அவரில் நம்பிக்கை வைக்கவேண்டும் என கர்த்தர் விரும்புகிறார். நாம் புரிந்து கொள்ளாத போதும், அவரை உணராத பொழுதும், நாம் அவரில் சார்ந்திருக்க வேண்டும் என அவர் விரும்புகிறார். இது கர்த்தர் மீது உள்ள எமது விசுவாசத்தைப் பலப்படுத்துகிறது. யோபு இவ்வாறே கர்த்தரைப் பற்றிப் பிடித்திருந்தார்.

கர்த்தருடைய அன்பை நினைவு கூறவும், அவரைப் பற்றிப்பிடிக்கவும் எவ்வாறு உங்கள் செவிமடுப்போரை ஊக்குவிப்பீர்கள்?

இவ்வுலகிலே எமக்கு உபத்திரவங்கள் **உண்டு** என்று இயேசு சொன்ன வாக்கு தத்தங்களையும் நினைவு கூருங்கள். இந்தப் பிரச்சனைகளுக்கு மிகவும் முக்கியமான காரணங்களை வேதாகமம் எமக்குக் கூறுகிறது. இந்தக் காரணங்களை நாம் நினைவில் கொள்ள வேண்டும். (உதாரணம்: யாக்கோபு 1:2-4, 2 கொரிந்தியர் 1:3-4, எபிரேயர், 12:7-11.)

**குறிப்புகள்**

- **யோபு 6:2-7.** "நிச்சயமாக நீங்கள் (நண்பர்கள்) என்னைக் குற்றம் சாட்ட வைக்கின்றீர்கள்!"
- **யோபு 6:8-13.** "கர்த்தாவே தயவு செய்து எனது வாழ்வை முடித்து விடும்!"

## கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 6-7

- **யோபு 6:14-23.** “நீங்கள் (நண்பர்கள்) என்னை அதிகமாக ஏமாற்றி விட்டீர்கள்!”
- **யோபு 6:24-30.** “நண்பர்களே என்னுடன் நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். நான் செய்த பிழை என்ன என்பதை தெளிவாக சொல்லுங்கள்!”
- **யோபு 7:1-11.** “என் மீது இரங்கும் கர்த்தாவே! (எனக்காக அனுதாபப்படும்)”
- **யோபு 7:12-21.** “கர்த்தாவே! ஏன் என்னை தனிமையில் விடாமல் இருக்கின்றீர்.”

## பிரசங்கியுங்கள்: யோபு 6-7

### நண்பர்கள் என்னை ஏன் தாக்குகிறார்கள்? யோபு 6:14

**நீதிமொழிகள் 17:17.** யோபு சொல்வது சரியானது! நண்பர்கள் **எப்போதும்** நண்பர்களாக இருக்க வேண்டும். நாம் தவறுகள் செய்தாலும் கூட நண்பர்கள் எமக்கு உதவ வேண்டும். எம்மை தாக்கக் கூடாது!

எலிபாஸ் யோபுவை மிகவும் ஏமாற்றமடையச் செய்கிறார். அவருடைய நண்பர்கள் ஆறுதலளிப்பார்கள் என யோபு எதிர்பார்க்கிறார். ஆனால் அதற்குப்பதிலாக அவர்கள் இன்னும் வேதனையையே கொண்டு வந்தார்கள்! அது தண்ணீர் மிகவும் தேவைப்படும் ஒரு கடுமையான பாலைவனப் பிரயாணத்தைப் போல உணரப்பட்டது. இறுதியாக நீங்கள் வந்தபோதோ அந்த தண்ணீர் ஓடை வற்றிவிட்டது. அது மிகுந்த ஏமாற்றத்தைத் தருவதாகும்! (யோபு 6:15-21)

பிரச்சனையில் இருக்கும் மக்களுக்கு நீங்கள் ஒரு உண்மையான நண்பர்களாயிருக்க வேண்டுமென ஜெபியுங்கள். அது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல!

- **கர்த்தரின் அன்பைக்** கேட்டுப் பெறுங்கள். அதன் பின்பு நீங்கள் இரக்கமுள்ளவர்களாயிருப்பீர்கள். உங்கள் நண்பரை நீங்கள் ஏமாற்ற

மாட்டீர்கள். அன்பு அவர்களுடைய வேதனையை போக்கும்.

## கர்த்தர் ஏன் என்னைத் தாக்குகிறார்? யோபு 6:4

கரத்தர் தனக்கு எதிராயிருக்கிறார் என யோபு உணர்கிறார். கர்த்தர் அவர் மீது கோப அம்புங்களை எய்வது போல் உணர்கிறார். அதன் விஷம் அவரது உடல் முழுவதும் பரவியது. ஏன் அவருடைய நண்பர்கள் அவருக்கு எதிராக திரும்பினார்கள் என அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை! யோபுவின் கருத்து சரியானதா?

எய்யப்பட்ட எல்லாப் பிரச்சனையின் "அம்பு" களுக்குப் பின்னும் கர்த்தர் **இருக்கிறார்** என்பது எமக்குத் தெரியும். ஆனால் யோபுவின் மீது தேவன் கோபப்பட**வில்லை** என்பதும் எமக்குத் தெரியும்! **கர்த்தர் எய்த அம்புகளை யோபு தவறாகப் புரிந்துகொள்கிறார்.**

இது எமக்கு மிகவும் முக்கியமானது. ஏன் எமக்குத் தீங்குகள் நடக்கின்றன என்பதை நாம் பெரும்பாலும் புரிந்து கொள்ளத் தவறுகின்றோம். **தேவன் எமக்கு எதிராக இருக்கிறார் என அது எப்போதும் அர்த்தப்படுவதில்லை.** கர்த்தர் எமக்குத் தூரமாயிருப்பதாக நாம் **உணரலாம்.** ஆனால் பிரச்சனைகளின் போது **தமது பிள்ளைகளுடன்** அவர் கூட இருப்பதாக அவர் வாக்களித்திருக்கிறார்; ஏசாயா 43:1~2.

கர்த்தர் தனக்கு எதிராக உள்ளார் என யோபு தவறாக எண்ணுகிறார். ஆனால் யோபு கர்த்தருக்கு எதிராகத் திரும்பவில்லை! அவர் தனது வேதனையில் கர்த்தரை **நோக்கி** செல்கிறார்.

- யோபு தனது கர்த்தரை எதிர்க்காத படிக்கு தனது வாழ்வை முடித்து விடும்படி யோபு கர்த்தரிடம் கேட்கிறார்; யோபு 6:8~10.
- எவ்வளவு பயங்கரமான வேதனையை அவர் உணர்கிறார் என அவர் கர்த்தரிடம் சொல்கிறார். அவரது வேதனை யில் இருந்து அவனுக்கு ஓய்வு கிடைக்கவில்லை; யோபு 7:4~5.
- யோபு தன்னைத் தனிமையாக விடும்படி கர்த்தரிடம் கேட்கிறார். "ஏன் கர்த்தர் என்னை இந்த அளவு கவனிக்கிறார? ஏன் எல்லாவிதமான கவனத்தையும் என் மீது செலுத்துகிறார்?" என அவர் கேட்கிறார். யோபு 7:17~20

கர்த்தர் யோபுவை தனிமையாக விடாததற்கு ஒரு காரணம் இருக்கிறது. அது எல்லா தேவனுடைய மக்களுக்கும் பொதுவானது. **அவர் எம்மை அதிகமாக நேசிக்கிறார்!** எமது நன்மைக்காகவே எமது அனைத்து 'பிரச்சனைகளையும்' திட்டமிடுகிறார். பிரச்சனைகளுகு மத்தியிலும், நாம் அவரை நம்புகிறோமா? நுன்றி செலுத்துகிறோமா என அவர் கண்காணிக்கின்றார். எரேமியா 29:11

# 8 எனக்காக பேச ஒருவர்!

**பின்னணி**

யோபு 8இல் பில்தாத் யோபுவிற்குப் பதிலளிக்கிறார். ஆனால் அவரும் எலிப்பாஸ் செய்த அதே தவறை செய்கிறார். நல்ல காரியங்கள் யோபு செய்திருப்பின் அவர் கர்த்தரின் ஆசீர்வாதத்தைப் பற்றியும் அறிந்திருப்பார். ஆனால் எவை நன்மையானதோ, அவைகளை யோபு **செய்தும்** இந்தப் பிரச்சனைகள் எல்லாம் யோபுவுக்கு வருகிறதே!

ஒருவரும் தனக்கு செவி கொடுக்க மாட்டார்கள் என யோபு நினைக்கிறான். கர்த்தர் எப்போதும் சரியானவர் என்பது அவருக்கு தெரியும். ஆனால் கர்த்தர் மிகவும் தூரமாய் இருப்பதாகக் காணப்பட்டார். அவருக்காக யாராவது கர்த்தருடன் பேசவேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டது!

யோபு 9

**முக்கிய குறிப்பு**

கர்த்தர் மிகவும் நல்லவரென்பதை யோபு உணர்ந்தார். அவருக்காக யாராவது கர்த்தரிடம் பேச வேண்டுமென்று அவர் விரும்பினார்.

**சிந்தித்து செயற்படுவதற்கு**

யோபு மிகவும் கொடிய வேதனையில் உள்ளார் என்பதை ஞாபகம் வைத்திருங்கள். அவர் சொன்ன சில காரியங்கள் கலவை ஒன்றாகக் காணப்பட்டது. சில சரியானவை. சில பிழையானவை. நாங்களும் பிரச்சனையில் இருக்கும் போது, இதைப் போலவே செய்கிறோம்! இது எதனை அர்த்தப்படுத்துகிறது என்றால், நாம் வாசிக்கும்போது கவனத்துடன் வாசிக்க வேண்டும். யோபு தவறான கருத்தை உடையவராக இருக்கும் போதிலும் அவருடைய உணர்வுகளின் மூலம் நாம் சிலதைக் கற்றுக்கொள்ளலாம்.

**குறிப்புக்கள்**

- **யோபு 9:14-20.** யோபு தான் ஒரு "அப்பாவி" (குற்றவாளி இல்லை) என உணருகின்றார். யோபு கர்த்தருடன் விவாதம் செய்ய முடியாத அளவுக்கு அவர் பெரியவராய் இருக்கிறார்! தன்மீது அனுதாபப் படும்படி ("கருணை") மாத்திரமே யோபு, கர்த்தரிடம் கேட்க முடியும். கர்த்தர் அவருக்கு செவி கொடுப்பார் என்பதனை யோபு நம்பவில்லை. கர்த்தர் மீண்டும் தன்னை தாக்குவார் என அவர் நினைக்கிறார் (யோபு 14:17-18). கர்த்தர் யோபுவைவிட அதிக பலம் வாய்ந்தவர்!
- **யோபு 9:30-31.** யோபு தன்னுடைய ஒவ்வொரு குற்ற உணர்வையும் கழுவிவிட நினைக்கிறார். ஆனால் பரிசுத்த கர்த்தருக்கு முன்பாக அவர் குற்றவாளியாகவே காணப்படுவார். அவர் ஓர் அழுக்குக் குழியிலிருந்து வெளியே வந்த அழுக்கான மனிதர் போல காணப்படுவார்.
- **யோபு 9:32-35.** கர்த்தர் ஒரு மனிதர் அல்ல. எனவே போபு அவருடன், நீதிமன்றத்தில்

## கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 9:14 - 3

விவாதிப்பது போல் விவாதிக்க முடியாது. அவருக்கும் கர்த்தருக்குமிடையில் ("நடுநிலை வகிக்க") யாராவது ஒருவர் வரவேண்டுமென அவர் விரும்புகிறார். கர்த்தருடைய கோபத்தை போக்குவதற்கு யாராவது ஒருவர் கர்த்தருடன் பேச வேண்டும் என அவர் விரும்புகிறார்.

## பிரசங்கியுங்கள்: யோபு 9:14 - 3

### யோபுவுக்கு கர்த்தர் மிகவும் பெரியவராக இருக்கின்றார்

யோபு 9:14~20

⊞ உங்கள் நாட்டின் தலைவருக்கு எதிராக நீங்கள் புகார் செய்தால் நீங்கள் எவ்வாறு உணருவீர்கள் என்பதைக் கற்பனை செய்யுங்கள். கூறவேண்டிய முக்கியமான குறிப்புகள் உங்களிடம் உண்டு. ஆனால் அவரிடம் அதிகமான அதிகாரங்கள் உண்டு அதனால் அவர் ஒருபோதும் செவி கொடுக்கமாட்டார் என்ற உணர்வு ஏற்படக்கூடும். யோபுவும் இவ்வாறே உணர்ந்தான்.

**கர்த்தர் மிகவும் பெரியவர்;** யோபு **9:4~10.** கர்த்தர் மிகவும் பெரியவராய் இருப்பதினாலே யோபு கர்த்தரைத் துதிக்கிறார்! கர்த்தரை மிகவும் பலம் வாய்ந்தவராக யோபு உணர்ந்த போதிலும், யோபு மிகவும் பெரியவரான கர்த்தரை துதிக்கிறார்!

**கர்த்தர் மிகவும் பரிசுத்தமானவர்;**

யோபு **9~20, 30~31.** அவர் துன்பப்படுவதற்குரிய எந்தவொரு தீய காரியத்தையும் அவர் செய்யவில்லை என யோபு அறிந்திருந்தார். ஆனால் கர்த்தரின் பார்வையில் அவர் ஒரு பாவியென்பதையும் யோபு அறிந்தி ருந்தார். அவன் அவருடைய வாயை திறக்கும் போதே பாவம் வெளிப்படுகிறது!

இது வரையில் யோபுவின் கருத்து சரியானது. ஆனால் அவர் ஒரு பெரிய பிழை விடுகிறார். கர்த்தர் தனக்கு எதிராயிருக்கிறார் என்று அவர் இன்னும் நினைக்கிறார். கர்த்தர் மிகவும் பெரியவரான படியால் தனக்கு செவி கொடுக்க மாட்டார் என நினைக்கிறார். கர்த்தர் நியாயமானவராக இருக்க மாட்டார் என அவர் நினைக்கிறார். (இது தவறானது!) 📖**யோபு 9:14~18**

» நாம் தேவனை விசுவாசிக்கும் போது அவர் "எமக்கு **மிகவும்** பெரியவராகத் தென்பட மாட்டார்"! அவருடைய வல்லமை எமக்கு எதிரானதாக இராமல் ~ அது எமக்கானதாக இருக்கும்! நாம் தவறு எதனையும் செய்யாத பட்சத்தில் நாம் குற்ற உணர்வுடன் இருப்பதை தேவன் விரும்பவில்லை. தேவன் எப்பொழுதும், நீதியுள்ளவராக நியாயம் உள்ளவராக மற்றும் இரக்கம் உள்ளவராக இருக்கின்றார். யோபு தேவனைக் குறித்து பயந்தார். ஆனால் நாம் தேவனை விசுவாசிக்கும் போது அவருடைய கரங்களில் **பாதுகாப்பாக** இருப்போம்.

## எனக்காகப் பேசும் ஒருவர்!

📖 **யோபு 9:32~35**

யோபு தான் ஒரு நீதிமன்றத்தில் இருப்பதைப் போல் உணருகின்றார். அவர் ஒரு தவறும் செய்யவில்லை. ஆனால் நீதிபதி அவரை "குற்றவாளி" என்கிறார். கர்த்தரோடு விவாதிக்க முடியாது என அவர் உணர்கிறார். அவருக்காக வேறு ஒருவர் பேசவேண்டும் என அவர் விரும்புகிறார். கர்த்தர் அவருக்கு இரங்கும் படியாகவும், அவருக்கு செவிகொடுக்கும் படியாகவும் யாராவது ஒருவர் கர்த்தரிடம் பேச வேண்டும் என அவர் விரும்புகிறார்.

யோபு மீண்டும் **கர்த்தரைப் பற்றி தவறான கருத்தையே கொண்டிருக்கிறார்.** ஒரு வேளை நாமும் அதே தவறை செய்யலாம். கர்த்தர் அன்பானவர்! கர்த்தருடன் யோபு **பேசலாம்.** மற்றும் கர்த்தர் செவி மடுப்பதில் மகிழ்கின்றார்! யோபு கர்த்தருடைய இரக்கத்தைப் பெறுவதற்கு அவருக்கு வேறு யாரும் தேவையில்லை! கர்த்தர் மற்றவர்கள் சொல்வதைக் கேட்கமாட்டார்.

யோபு கர்த்தரை பற்றித் தவறாக நினைத்த போதிலும் அவருடைய வார்த்தைகள் **இயேசுவை நமக்கு சுட்டிக்காட்டும்** உண்மைகளை பேசுகின்றன! நாம் எம் நீதிபரராகிய கர்த்தரின் முன் குற்றமுள்ளவர்களாயிருக்கிறோம். அதனால் எமக்கும் கர்த்தருக்கும் இடையில் இருக்க யாராவது ஒருவர் இருக்க **வேண்டும்** என்று தேடுகிறோம். கர்த்தரிடம் எங்கள் பாவங்களை மன்னிக்கும்படி கேட்க எமக்கு இயேசு அவசியம். இதற்கு மேலாக எமது குற்றங்களை எம்மை விட்டு **நீக்க** எமக்கு இயேசு தேவை. அதனால் தான் அவர் சிலுவையில் மரித்தார்!

📖 **1 யோவான் 2:1~2**

» கர்த்தரை மகிமைப் படுத்துங்கள். நாம் அவரை விசுவாசிக்கும் போது இயேசு கிறிஸ்து எமக்காக பேசுவார்! நாம் பாவம் செய்துள்ளோம் இருப்பினும் "பயப்படாதிருங்கள், நான் உங்கள் பாவங்களை உங்களை விட்டு நீக்குவேன். நீங்கள் கர்த்தருக்குள் சமாதானமாயிருங்கள்" என இயேசுகிறிஸ்து சொல்கிறார்.

கர்த்தருடைய அன்பை **உணர** முடியாத நேரத்தில் இதை நினைவு கூருங்கள். இயேசு உங்களுக்காகப் பேசுவதையும் உங்கள் தகப்பன் உங்களைப் பார்த்து புன்னகைப்பதையும் நினைவு கூருங்கள்.

# 9 இருள் சார்ந்த நம்பிக்கை

**பின்னணி**

யோபுவின் நண்பர்களுடனான வாதங்கள் தொடர்கின்றது .யோபு பேசும் போது வேதனையைப் பற்றியும், மரணத்தைப் பறறியும் அதிகமாகப் பேசுகிறான். கர்த்தர் ஏன் இந்தத் துன்பத்தை தனக்கு கொடுத்தார் என்பதை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவன் உள்ளார்ந்த ரீதியில் இருளை உணர்ந்தான்.

ஆனால் சில நேரங்களில் விரைவான ஒளி மின்னுகிறது. அவனுக்கு சிறியளவு நம்பிக்கையை கொடுக்கும் விடயத்தை யோபு சிந்திக்கிறான். அதன் பின்பு இருள் மீண்டும் வருகின்றது. அவன் மீண்டும் மனச்சோர்வு அடைகின்றான்.

யோபுவின் நம்பிக்கையை **யோபு 13:15** இல் பார்க்கவும். ("அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப் பேன்") **16:19**. யோபு இருளை எவ்வாறு உணர்ந்தார் எனப் பார்ப்பதற்காக இந்த வசனங்களுக்கு முன்னுள்ள பகுதியையும், பின்னுள்ள பகுதியையும் பார்க்கவும்.

**முக்கிய குறிப்பு**

இருளான காலங்களில் கூட கர்த்தர் மீது வைக்கும் விசுவாசம் எதிர்காலத்திற்கு நம்பிக்கை அளிக்கிறது.

**சிந்தித்து செயற்படுவதற்கு**

இச்செய்தி யோபுவைப்போல் **நம்பிக்கையில் குறைவுள்ள** கர்த்தருடைய பிள்ளைகளுக்கு உதவுகிறது. யோபு அவருடைய வேதனையிலிருந்து வெளியே வந்துவிட்டார் என்று கருத்துடன் பிரசங்கிக்காதீர்கள்! இங்கே யோபு தெளிவான விசுவாசமுள்ளவராக இருக்கவில்லை. அவர் நம்பிக்கையிழந்த நிலையில் மிகவும் மனக்கிலேசத்துடன் காணப்படுகின்றார். ஆனாலும் அவர் எப்படியாயினும் கர்த்தரைப் பற்றிப் பிடித்திருந்தார். இதுவே அவரின் நம்பிக்கையின் வெளிப்பாட்டை அளித்திருந்தது. கர்த்தர் இறுதியில் தனக்கு உதவுவார் என அவர் நம்ப வேண்டிய நிலை அவருக்கு இருந்தது.

கர்த்தர் எருசலேமை நியாயம் தீர்க்கும் பொழுது எரேமியாவும் யோபுவைப் போல் உணர்ந்தார்; **புலம்பல் 3:13–33.**

**குறிப்புகள்**

- **யோபு 13:15.** "அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்." யோபு தான் ஒரு அப்பாவி என்பதைச் சொல்ல விரும்புகிறார் (யோபு 13:13). யோபுவைக் கர்த்தர் மரணத்துக்காக நியாயம்

## கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 13,16

தீர்த்தாலும் கூட யோபு கர்த்தரில் நம்பிக்கை வைத்திருப்பார்.

- **யோபு 16:19.** இன்னுமே கர்த்தர் தனக்கு எதிராக இருப்பதாக யோபு உணர்கிறார் (யோபு 16:14). இவ் **உலகில்** கர்த்தர் அவருக்கு செவிகொடுக்க மாட்டார். ஆனால் ஒரு நாள் **பரலோகத்தில்** கர்த்தர் யோபுவுக்காக எழுந்திருப்பார். கர்த்தர் யோபுவுக்காக "சாட்சிகொடுப்பார்". அல்லது அவருக்காக வாதாடுவார்! இறுதியில் நடக்கும் இச்செயல் நியாயமானதாக அமையும்! (மீண்டும் யோபு அவருக்குத் தெரிந்ததை விட அநேக உண்மைகளைப் பேசுகிறார். பரலோகத்தில் தனது மக்களுக்காகப் பேசும் ஒருவராக **இயேசு** வந்தார். [யோபு 9:33 இல் உள்ளதைப் போல்]).

## பிரசங்கியுங்கள்: யோபு 13,16

### எது நடந்தாலும் நம்பிக்கை வைத்திருத்தல்

**யோபு 13:15**

⊞ நீங்கள் ஒரு அடர்ந்த (புதர்) காட்டுக்குள்ளே தொலைந்து போவதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் ஒருவரைப் பார்க்கிறீர்கள், ஆனால் அவர் உங்கள் பழைய எதிரியாக இருக்கிறார். அவர் உங்களை நோக்கி கற்களை வீசுகிறார். ஆனால் நீங்கள் இன்னும் அவரைத் தொடர்ந்து செல்கிறீர்கள்! காட்டிலிருந்து வெளியே வருவதற்குரிய ஒரே வழி அது தான்!

இது யோபுவுக்கும் அவ்வாறே இருந்தது. அவருக்கு உதவுவதற்கு கர்த்தரைத் தவிர வேறு ஒருவரும் இருக்கவில்லை. யோபு மீண்டுமாக கர்த்தர் தனக்கு எதிராக இருக்கிறார் என (தவறாக) நினைக்கிறார். ஆனால் கர்த்தர் தான் இன்னமும் அவன் நம்பிக்கை. தான் ஒரு அப்பாவி என வெளியே சொல்ல வேண்டும் என உணர்கிறான். கர்த்தர் அவனுக்கு செவி கொடுப்பார் என அவன் நம்பிக்கை வைத்திருந்தான். கர்த்தர் தனக்கு நியாயம் செய்வார் என்பதை யோபு உணரவில்லை. கர்த்தர் தன்னை தாக்குவதாக யோபு உணர்கிறார். ஆனால் கர்த்தர் தனக்கு நியாயம் செய்வார் என்று

விசுவாசிப்பதே யோபுவின் ஒரே நம்பிக்கையாய் இருந்தது! இறுதியில் தன்னைக் கர்த்தர் கைவிட்டு விடமாட்டார் என யோபு விசுவாசித்தான்.

» எது நடந்தாலும் உங்கள் நம்பிக்கையை கர்த்தர் மீது வையுங்கள்! மிகவும் பயங்கரமான துன்பங்கள் உங்களுக்கு நேர்ந்தாலும், தேவனையே சார்ந்திருங்கள்! அவர் உங்களுக்கு எதிராயிருப்பதைப் போல் நீங்கள் உணர்ந்தாலும் கூட கர்த்தர் உங்களுக்கு உதவுவார் என எதிர்பாருங்கள். கர்த்தர் அவர்களுடைய பிள்ளைகளிடமிருந்து தனது அன்பை ஒருபோதும் எடுக்க மாட்டார். நீங்கள் அவரை நம்பும் போது கர்த்தர் **ஒரு போதும்** கைவிட **மாட்டார்**. நீங்கள் உங்கள் உணர்வில் நம்பிக்கை வைக்காதீர்கள். கர்த்தரிலும் அவரது வாக்குத்தத்தங்களிலும் நம்பிக்கை வையுங்கள்.

## பரலோகத்தின் மீதான நம்பிக்கை

📖 **யோபு 16:19**

யோபு இருளையும், ஏமாற்றத்தையும் எவ்வாறு உணர்கிறார் என்பதை நினைத்துப் பாருங்கள்! அவர் கர்த்தரின் அன்பை காணவில்லை: 📖 **யோபு 16:19~14.**

- கர்த்தரைப்பற்றி யோபு இப்போது என்ன நினைக்கிறான்?

யோபுவின் கருத்து எவ்வளவு பிழையானது என்பதை நாம் இங்கே காணலாம். ஒரு விசுவாசி இவ்வாறு சொல்லும் பொழுது நாம் வருத்தப் படலாம். ஆனால் சில நேரங்களில் கர்த்தருடைய மக்கள் இவ்வாறான இருளையும், மனச்சோர்வையும் உணருவார்கள். சில நேரங்களில் மக்கள் சுகயீனமடைவார்கள். அதனால் அவர்களால் தீய காரியங்களை மாத்திரமே காணக்கூடியதாக இருக்கும்.

ஆனால் யோபுவின் வேதனையில் ஒளியின் மின்வெட்டு ஒன்று தோன்றுகிறது. யோபு கர்த்தரைப்பற்றி நினைக்கும்போது, கர்த்தர் நிச்சயமாக இறுதியில் தனக்கு நியாயம் வழங்குவார் என அவன் அறிந்திருந்தான்! தேவன் தனக்கு **இப்போது** செவிகொடுக்க மாட்டார் என உணர்ந்த போதிலும் எனவே அவன் மரித்த பிறகு கர்த்தர் தனக்கு செவிகொடுப்பார்! எனவும், கர்த்தரை அவன் சந்திப்பான் எனவும் அவன் விசுவாசித்தான்! பரலோகத்தில் ஒரு நீதிமன்றத்தை யோபு கற்பனை செய்கிறான். நீதிமன்றத்தில் யோபுவுக்காக ஒருவர் பேசுவார். அந்த நபர் கர்த்தராக இருப்பார். யோபு நினைத்தது சரி. **இயேசு கிறிஸ்து** அவருடைய மக்களுக்காகப் பேசுவார்.

» அநேக விடயங்கள் **இன்று** நியாயமற்றதாக இருக்கிறது. ஆனால் ஒரு நாள் எல்லாம் நியாயமானதாக மாறும். நாம் கர்த்தரை அறியும் பொழுது எங்களுக்காக ஒருவர் பரலோகத்தில் பேசுவார். 'நான் அவர்களுடைய பாவங்களுக்காக மரித்தேன் ~ அவர்கள் கர்த்தருக்குள் சமாதானம் உடையவர்கள்! என **இயேசு கிறிஸ்து** கூறுவார்'. **இப்பொழுது** எல்லாம் சரியாக இருக்கும் என கர்த்தர் ஒருநாளும் வாக்களிக்கவில்லை. ஆனால் பரலோகத்தில் அவர் நேசிக்கும் மக்களுக்காக இயேசு பேசுவார். அவர் எல்லாவற்றையும் சரி செய்வார்!

# 10 எனது மீட்பர்!

### பின்னணி

யோபுவின் "இருள் சார்ந்த நம்பிக்கைக்கு" இது ஒரு உதாரணமாகும். எல்லாரும் அவருக்கு எதிராக நிற்கின்றார்கள். அவர் நம்பிக்கையற்ற இருளான சூழலை உணருகின்றார். பின்பு அந்த இருளிலும் அவருக்குள் ஒரு நம்பிக்கையின் ஒளி பிரகாசிக்கின்றது. இது அவரை முழுமையான சஞ்சலத்திலிருந்து அவரைக் காப்பாற்றுகிறது. ஆனால் அவரது மனச்சோர்வான உணர்வு அவருக்குத் திரும்பவும் வருகிறது. இருள் அந்த ஒளியின் மின்வெட்டைப் பின்தொடர்கிறது.

யோபு 19:20-27

### முக்கிய குறிப்பு

யோபு தனது கர்த்தராகிய "மீட்பரை" நம்புகிறான். (இரட்சகர்) மரணத்திற்குப் பின் கர்த்தரைக் காண்பார் என யோபு நம்புகிறான்.

### சிந்தித்து செயற்படுவதற்கு

இந்தப்பகுதியைக் குறித்து மிகவும் கவனமாயிருங்கள். இதிலுள்ள சிலவற்றை எபிரெய மொழியிலிருந்து மொழி பெயர்ப்பதற்குக் கடினமாயுள்ளது. மேலும் பழைய ஏற்பாட்டில், மக்கள் சிலநேரங்களில் தாங்கள் புரிந்துகொண்டதற்கு மேலதிகமாகவே விடயங்களைக் கூறுகிறார்கள். இயேசுவையும், உயிர்த்தெழுதலையும் எவ்வாறு யோபு சுட்டிக் காட்டியிருக்கிறார் என்பதை **இப்போது** இலகுவாக **எம்மால்** காணக்கூடியதாயுள்ளது. யோபு இந்த விடயங்களை எந்த அளவு தெளிவாகக் கண்டார் என்பது எமக்குத் தெரியாது. எமக்குத் தெரிந்தது இவை தான் -

- அவனது கர்த்தராகிய மீட்பர் அவனைக் காப்பாற்றுவார் என யோபு நம்புகிறான்.
- மரணத்தின் பின், அவன் கர்த்தரைப் பார்ப்பான் என யோபு அறிந்திருந்தான்.

### குறிப்புகள்

- **யோபு** 19:23-24. யோபுவின் நண்பர்கள் நியாயமற்றவராக இருந்தார்கள். யோபு பாவம் செய்ததாக அவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் யோபுவை நம்ப மாட்டார்கள்.. எனவே யோபு அவருடைய வார்த்தைகள் எழுதப்பட வேண்டுமென்று விரும்புகிறார். கருங்கல்லிலே பதிக்கப்பட்டாக (உளி வெட்டாக) வேண்டும் என்று விரும்புகிறார். அதை ஒருவரும் அழித்துவிட முடியாது. இதனால் மக்கள் உண்மையை அறிந்துகொள்வர். அவர் ஒரு அப்பாவி என்பதை மனிதர் அறிய வேண்டும் என விரும்பினார்.

## கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 19:23-27

(யோபு விரும்பியவைகளை கர்த்தர் அவருக்குக் கொடுத்தார்! அவருடைய வார்த்தைகள் வேதாகமத்தில் உள்ளன.)

- **யோபு 19:25.** "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்று நான் அறிந்திருக்கிறேன்." கிரயத்தை செலுத்தி மக்களை விடுவிப்பவர் "மீட்பர்" ஆவார். அவருடைய மீட்பர் அவரை "மீட்பார்" (விடுவிப்பார்) என யோபு நம்பினார். கர்த்தர் அவருக்காகப் பரலோகத்தில் பேசுவார்,கர்த்தர் யோபுவினுடைய பிரச்சனைகளை முடிவுக்குக் கொண்டுவருவார்.
- **யோபு 19:26-27.** யோபு தான் மரித்தபின் கர்த்தரை பார்க்க முடியும் என எதிர்பார்க்கிறார். மரணத்தின் பின் உண்மையான மனிதனாக உண்மையான சரீரத்தோடும், உண்மையான கண்களோடும் இருப்பார் என அவர் எதிர்பார்க்கிறார். (யோபு மரணத்திலிருந்து உயிர்ப்பார் என்பது எமக்குத் தெரியும், அவர் பரலோகத்துக்கு தயாரான ஒரு புதிய உடலைக் கொண்டிருப்பார்)

## பிரசங்கியுங்கள்: யோபு 19:23-27

### எனது மீட்பர்!

யோபு 19:25

**1. எமது தேவன் யார் என்பதை நினைவில் வைக்கும் போது நம்பிக்கை வருகிறது.**

யோபு **அவனுடைய பிரச்சனைகளைப்** பார்க்கின்ற பொழுது எவ்வித நம்பிக்கையும் இல்லாதவனாக இருந்தான். யோபுவினுடைய **நண்பர்கள்** அவனுக்கு நம்பிக்கையைக் கொடுக்கவில்லை. ஆனால் **கர்த்தர் யார் என்பதை** அவன் நினைக்கும் பொழுது யோபுவுக்கு நம்பிக்கை ஏற்படுகிறது. கர்த்தர் மாறாதவர். கர்த்தர் எங்கள் அழுகைக்குப் பதில் கொடுப்பவரும், நியாயமானவரும், அன்பானவருமாக இருக்கிறார். யோபுவினால் இப்பொழுது கர்த்தருடைய அன்பையும் பாதுகாப்பையும் **உணர** முடியாத போதிலும். "எனது மீட்பர்" எனக்கு உதவுவார் என்ற நம்பிக்கை அவனுக்குள் இருந்தது. முடிவில் தேவன் அவனை மீட்பார் (விடுவிப்பார்) என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது.

> நீங்கள் இருளையும், நம்பிக்கை அற்ற நிலையையும் உணரும் போது, **உங்கள் கர்த்தர் யார் என்பதை நினைவு கூருங்கள்.** அவருடைய அன்பு எப்பொழுதும் நீடிக்கிறது (எரேமியா 31:3). கர்த்தரை நம்பும் போது அவருடைய மக்களுக்கு அவர் **உதவுகிறார்.** கர்த்தர் இரட்சகராகிய கர்த்தராக இருக்கிறார். அதனால் அவர் கட்டாயமாக

காப்பாற்றுவார்! நீங்கள் மரிக்கும் பொழுது கூட உங்கள் மீட்பராகிய கர்த்தர் வாழ்கின்றார் ~ எனவே நீங்கள் அவரில் பாதுகாப்பாக உள்ளீர்கள்.

**2. எமது இயேசு கிறிஸ்து யாரென்பதை நாம் நினைக்கும் பொழுது நம்பிக்கை வருகின்றது.**

**இயேசு கிறிஸ்துவே** எமது மீட்பர் என்பதை யோபுவின் வார்த்தைகள் சுட்டிக் காண்பிக்கின்றன. யோபு இதைக் காணாமல் இருக்கலாம் ஆனால் நாம் எங்கள் மீட்பராகிய கிறிஸ்துவை சிலுவை மீது காண்கிறோம். அவருடைய பிள்ளைகள் மீது அவர் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார் என்பதைக் காணலாம். ஏனெனில் அவர் அவர்களுக்காக மரித்தார்.

இயேசு உங்களை மீட்பதற்காக மரித்தாரெனில் அவர் இப்போது உங்களை விட்டு விடுவாரா? இது நடக்காத ஒன்று! நீங்கள் இருளான சூழலை உணரலாம். ஆனால் ஒருபோதும் நீங்கள் உங்களைப் பார்க்காதீர்கள். இயேசுவை நோக்கிப் பாருங்கள்! உங்கள் மீட்பரில் நம்பிக்கை வையுங்கள்! அவர் உங்களுக்காக பரலோகில் உயிருடன் வாழ்கிறார் (எபிரெயர் 7:25).

## மரணத்தின் பின் என்னுடைய வாழ்வு!

யோபு 19:26~27

யோபுவின் மீட்பர் உயிரோடு இருப்பாரெனில் யோபுவும் உயிரோடு இருக்க வேண்டும். யோபு தான் விரைவில் மரித்துவிடுவார் என நினைக்கிறார். ஆனால் மரணம் முடிவாக அமையாது, கர்த்தர் யோபுவின் மீட்பராயின். கர்த்தர் ஒரு பொழுதும் யோபுவைக் கைவிடமாட்டார்! அவருடைய மரணத்திற்கு **பின்** அவர் வாழ்வார் என யோபு நிச்சயித்து இருந்தார். அவர் இப்பொழுது மிகப்பெரிய பிரச்சனையோடிருக்கிறார். ஆனால் அவர் ஒரு நாள் கர்த்தரைக் காண்பார். அது எவ்வளவு அற்புதமானவொரு சிந்தனை!

யோபு தொலைவில் இருந்து எதைக் கண்டார் என புதிய ஏற்பாடு எமக்குத் தெளிவாக கூறுகிறது. இயேசு கிறிஸ்து மீட்பராயிருக்கிறார். அவர் திரும்ப வருவார். கர்த்தர் ஒவ்வொருவரையும் மரணத்திலிருந்து உயிர்ப்பிப்பார். இயேசு கிறிஸ்து விசுவாசிகளை அவருடன் எடுத்துக்கொள்வார். அவர்கள் இயேசு கிறிஸ்துவைக்காண்பார்கள். அவர்கள் அவரைப் போல் இருப்பார்கள். அவர்கள் கர்த்தரை அனுபவிப்பதற்கு புதிய சரீரத்தை உடையவர்களாய் இருப்பார்கள்!

1 யோவான் 3:2

இயேசு கிறிஸ்து உங்கள் மீட்பரென்பதை நீங்கள் அறியாவிட்டால், உங்களிடம் நம்பிக்கை இருக்காது. நீங்கள் இப்பொழுது பிரச்சனையில் இருக்கலாம். ஆனால் அங்கு அதை விட மோசமான பிரச்சனைகள் வரக்கூடும். இப்பொழுதே இயேசுவிடம் செல்லுங்கள்!

இயேசு உங்கள் மீட்பர் என்பதை நீங்கள் அறிந்து கொண்டால், உங்களிடம் பெரியதொரு நம்பிக்கையை இருக்கிறது! உங்களுடைய பெரிய பிரச்சனைகள் இப்போது உண்மையிலேயே சிறிய விடயமாகும். இயேசு கிறிஸ்து உங்களுக்காக விரைவாக வருவார். உங்களுடைய வேதனைகளெல்லாம் நீங்கிவிடும். நம்பிக்கை இழக்காதீர்கள். உங்கள் உயிர்த்தெழுதலை நம்புங்கள்!

1 தெசலோனிக்கேயர் 4:16~18

# 11 கர்த்தரிடம் நல்ல காரணங்கள் உண்டு!

**பின்னணி**

யோபுவை, மிகவும் பெரிய பாவங்களுக்காக யோபுவின் நண்பர்கள் குற்றம் சாட்டினார்கள். அவர்கள் அவனை கர்த்தரிடத்தில் திரும்பும் படி சொன்னார்கள். அப்போது கர்த்த உன்னை ஆசீர்வதிப்பார் என அவர்கள் சொன்னார்கள். **யோபு 22:21~26.**

ஆனால் கர்த்தர், யோபு பாவம் செய்யாத போதிலும் யோபுவைக் கைவிட்டது போன்று காணப் படுகிறது. யோபு கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார். ஆனால் கர்த்தர் பதில் கொடுக்கவில்லை. அவரால் கர்த்தரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதே யோபுவின் பெரிதான வேதனையாக இருந்தது. **யோபு 23:1~12**

அவருடைய வேதனையிலும் கர்த்தர் அதற்கான காரணத்தை வைத்திருப்பார் என அவர் அறிந்திருந்தார். **யோபு 23:10**

**முக்கிய குறிப்பு**

கர்த்தர் தூரமாக இருப்பது போன்று உணர்ந்தாலும் அவர் மீது நம்பிக்கை வையுங்கள்! எமது வேதனைகளுக்கான சிறந்த காரணங்களை அவர் வைத்திருக்கிறார்.

**சிந்தித்து செயற்படுவதற்கு**

பெரும்பாலும் கிறஸ்தவர்கள் தாங்கள் துன்பப்படும் பொழுது **தவறைச் செய்து** விடுகிறார்கள். அவர்கள் ஜெபிப்பதை நிறுத்தி விடுகிறார்கள். அவர்கள் கர்த்தரை விட்டுத் திரும்புகிறார்கள். அவர்கள் நம்பிக்கையை இழக்கிறார்கள். அவர்கள் தற்கொலை செய்யக்கூட முயற்சிக்கிறார்கள். அவர்கள் அதிகமாக மதுபானத்திற்கு அடிமையாகிறார்கள்.

கர்த்தர் பதில் கொடுக்காத போது செய்யவேண்டிய **சரியான காரியம்** என்ன என்பதை யோபு எமக்கு எடுத்துக்காட்டி உதவியிருக்கிறார். யோபுவிடமிருந்து கற்றுக்கொள்ளும் படி உங்கள் செவிமடுப்போருக்கு உதவுங்கள். பெரிய பிரச்சனையிலும் கூட அவர் நம்பிக்கை இழக்கவில்லை. அதற்குப் பதிலாக தன்னுடைய துன்பத்துக்கு கர்த்தர் ஒரு காரணத்தை வைத்திருப்பார் என நம்பினார். அதனூடாக நல்ல காரியங்கள் வரும்.

**குறிப்புகள்**

- **யோபு** 23:4-7. யோபு ஏன் கர்தரைத் தேட விரும்புகிறார் என்பதற்கான ஒரு காரணத்தை இது காண்பிக்கிறது. அவர் இத் துன்பத்துக்குத் தகுதியற்றவர் என யோபு கர்த்தரிடம் கூறுவார்! முன்பு கர்த்தர் தனக்கு செவிகொடுப்பார் என யோபு நினைக்கவில்லை. (யோபு 9:14-20) கர்த்தர் அவருக்கு நியாயம் செய்வார் என இப்போது அவர் உணருகின்றார்.
- **யோபு** 23:10. “அவர் என்னை சோதித்த பின்பு நான் பொன்னாக

## கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 23:1 –12

விளங்குவேன்" (இது சரியான மொழிபெயர்ப்பு.) தங்கமானது நல்ல காரணத்துக்காகவே நெருப்பிலிடப்படுகிறது என்பதை யோபு நினைவு படுத்துகிறார். யோபு அவரது கடந்தகால பிரச்சனைகளைப் பார்த்து அதிலிருந்து நன்மையான விடயங்கள் வரும் என்பதைக் காண்கிறார்.

- **யோபு** 23:11-12. யோபு தனது வாழ்வைப் பற்றி இவ்வாறு சொல்லலாம்! இது உண்மையானது என்பதை கர்த்தர் காண்பார் என அவர் உணர்ந்தார். அவர் ஒரு அப்பாவி என்பதைக் கர்த்தர் காண்பார் (இந்த தீமையான காரியங்களுக்கு அவர் பாத்திரர் அல்ல).

## பிரசங்கியுங்கள்: யோபு 23:1 –12

### கர்த்தர் எங்கே?

**யோபு 23:3**

பிரச்சனை வரும்போது சில மனிதர்கள் தேவனை **விட்டுத்** திரும்புவார்கள். அவர்கள் கர்த்தர் இல்லாமல் வாழ்வதற்கு முயற்சி செய்வார்கள். யோபு அவ்வாறு இல்லை **நிச்சயமாக கர்த்தர் இருக்க வேண்டுமென்பது** அவருக்குத் தெரியும். கர்த்தர் இல்லாமல் யோபுவினால் வாழ இயலாது.

ஆனால் யோபுவினால் கர்த்தரைக் காண்டுபிடிக்க முடியவில்லை. அவர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார். ஆனால் கர்த்தர் அமைதியாக இருந்தார்.

⊞ முக்கியமானதொரு பொருளை நீங்கள் தொலைத்துவிட்டால் எல்லா இடமும் அதைத் தேடுவீர்கள். அதைக் கண்டுபிடிக்கும் வரையில் நீங்கள் வேறு ஒன்றும் செய்ய மாட்டீர்கள். யோபு அவ்வாறு தான் இருந்தார்; **யோபு 23:8~9.** (முடிவிலே கர்த்தர் யோபுவிடம் வருவார்! யோபு 38:1)

» நீங்களும் யோபுவைப் போன்றவர்களா? கர்த்தர் இல்லாமல் உங்களாலும் வாழ முடியாதா? நீங்கள் நம்பிக்கை இழந்து விடாதீர்கள். அவரைக் கண்டு பிடிக்கும்வரை அவரைத் தேடுங்கள். இயேசுவின் வாக்குத்தத்தத்தை நினைவு கூருங்கள்; **மத்தேயு 7:7~8.**

## ➡ பிரசங்கியுங்கள்: யோபு 23:1 –12

### கர்த்தர் நல்ல காரணங்களை வைத்திருக்கிறார்.

யோபு 23:10

- நீங்கள் கர்த்தரைக் காண முடியாத பொழுது, **அவர் உங்களைத் தொலைக்கவில்லை** என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்!
- நீங்கள் எதையும் புரிந்து கொள்ளாத போதும், **கர்த்தர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார்** என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்!

தீய காரியங்கள் எமக்கு **ஏன்** நடக்கின்றன என்பதை எம்மால் காண முடியாத போது அது கடினமானதாகவே இருக்கும். இதை எமக்குப் புரிந்துகொள்ள முடியாது! ஆனால் கர்த்தர் அதை அறிவாரெனில் அது எமக்குத் தெரிய வேண்டிய **அவசியமில்லை.** எமது பிரச்சனைகளுக்குரிய சிறந்ததொரு காரணத்தைக் கர்த்தர் வைத்திருப்பார். நாங்கள் செய்ய வேண்டிய ஒரே விடயம் கர்த்தருடைய கரங்களில் எமது கையை கோர்க்க வேண்டும். அவர் இருளினூடாக எம்மை வழிநடத்துவார்.

கர்த்தர் ஏன் இக்குறிப்பிட்ட காரியத்தை செய்தார் என்பதை நாம் அறியாமல் இருக்கலாம் ஆனால் கர்த்தர் எமது பிரச்சனைகளுக்குரிய **நல்ல காரணங்களை நிச்சயம் சொல்கிறார்.** நாங்கள் கட்டாயமாக யோபுவைப் போல் கர்த்தருடைய காரணங்களை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்; **யோபு 23:10** (**குறிப்புகளில்** மொழி பெயர்ப்பைப் பார்க்கவும்).

- **"பொன்" என்பதைக் காட்டுவதற்காக அவருடைய பொன்னை சோதிக்கிறார்.** (விலை மதிப்பற்ற மக்களை சோதிக்கிறார்) சிலர், தங்களுக்கு சோதனை வரும்வரை கிறிஸ்தவர்கள் போலக் காணப்படுவார்கள். ஆனால் யோபு அப்படிப்பட்டவர் அல்ல என்பது எமக்குத் தெரியும். அவர் உண்மையான தங்கமாயிருக்கிறார். உண்மையான கிறிஸ்தவர்களைப் பிரச்சனை முடிவிலே தாக்காது. **அவர்கள் உண்மையான கிறிஸ்தவர்கள் என்பதை மாத்திரமே அது நிருபிக்கிறது;** **I பேதுரு 1:6~7.**
- **கர்த்தர் தன்னுடைய "தங்கத்தை" தூய்மைப் படுத்துவதற்காக அதனை சோதிக்கிறார்.** நெருப்பு தங்கத்தை இன்னும் சிறப்பானதாக மாற்றும்! கர்த்தர் அவருடைய மக்களை தூய்மையானவர்களாக மாற்றுவதற்காக பிரச்சனைகளைப் பயன்படுத்துகிறார்; **ரோமர் 5:3~4**

» கர்த்தர் தொலைவில் இருப்பதாக உணரக்கூடும். ஆனால் **அவர்** உங்களுடைய பிரச்சனைகளுக்கு **சிறந்த காரணங்களை வைத்திருக்கிறார்** என்பதை நினைவில் கொள்ளுங்கள். **உங்கள் நம்பிக்கை எவ்வளவு உண்மையானது** என்பதை மக்கள் பார்க்க வேண்டுமென அவர் விரும்புகிறார். அத்தோடு அவர் **உங்களைத் தூய்மைப்படுத்த** விரும்புகிறார். இந்த விடயங்களை நீங்கள் விரும்புகிறீர்களா?

» கர்தருடைய அன்பான பரிசாகி வேதனையை ஏற்றுக்கொள்ள உதவவேண்டுமென்பதற்காக ஜெபியுங்கள். அதற்கு எதிராகப் போராடாதீர்கள். ஆனால் கர்த்தர் உங்களை அதற்கூடாகக் கடந்து வரப்பண்ணுவார் என நம்புங்கள். **யாக்கோபு 1:12**

# 12 ஞானம் எங்கே உள்ளது?

**பின்னணி**

யோபுவும் அவனது மூன்று நண்பர்களும் நீண்ட நேரமாகமாக வாதிட்டனர். இறுதியாக மூன்று நண்பர்களும் அதை செய்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் யோபுவுக்கு உதவவில்லை. அங்கே அதிக வார்த்தைகள் இருந்தன. அவற்றுள் சிறியளவு ஞானமே காணப்பட்டது.

யோபு 28 வித்தியாசமானது! அது கடினமான வாக்குவாதம் அல்ல. யோபு தன்னுடைய வலிகளைப் பற்றி எதனையும் பேசவில்லை. அதற்கப் பதிலாக ஞானத்தைக் குறித்ததான சில ஞானமான வார்த்தைகளை யோபு எமக்குத் தருகிறார்.

**யோபு 28**

**முக்கிய குறிப்பு**

நீங்கள் கர்த்தருக்குப் பயப்படும் (கௌரவப்படுத்தும்) பொழுது ஞானத்தைக் கண்டடையலாம்.

**சிந்தித்து செயற்படுவதற்கு**

ஞானம் என்பது **எங்களுக்குத் தெரிந்த விடயங்கள்** மாத்திரம் அல்ல. **எப்படி நாம் வாழ்கிறோம்** மற்றும் **யாரை நாம் அறிந்திருக்கிறோம்** என்பதைப் பற்றியது ஆகும். யோபு 28:28, மிகவும் முக்கியமானது. விசேடமாக பிரச்சனைகளில் இருக்கும்போது, இப்பகுதி முக்கியமானதாக காணப்படுகிறது. எமது எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கூறவேண்டிய அவசியமில்லை. கடினமான நேரங்களை கர்த்தர் **ஏன்** எங்களுக்கு கொண்டு வந்தார் என்பது எமக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை. நாம் தொடர்ந்து கர்த்தரை மதிக்க **வேண்டியதும்** அவருக்காக வாழ வேண்டியதுமே அவசியம். யோபு 28:28ஐ கற்று, ஞாபகத்தில் வைத்திருக்க முயற்சி செய்யுங்கள்.

பாவிகளுக்காக இயேசுகிறிஸ்து மரித்ததினூடாக நாம் கர்த்தருடைய ஞானத்தைக் காண்கிறோம். இது அநேகருக்கு முட்டாள் தனமாகத் தெரியலாம். ஆனால் நாம் கர்த்தரை சிலுவையினூடாகவே அறிகிறோம். எமது ஞானமான வாழ்வின் ஆரம்பம் சிலுவையுடன் தொடர்கிறது. **1 கொரிந்தியர் 1:22-24, கொலொசேயர் 2:3.**

**குறிப்புகள்**

- **யோபு 28:1-11.** தங்கம், வெள்ளி, மற்றும் விலையுயர்ந்த கற்களை மனிதனால் கண்டுபிடிக்க முடியும், பெறுமதிமிக்க புதையல்களை கண்டுபிடிக்க, மனிதன் பூமியின் ஆழமான பகுதிகளைத் தேடுகிறான்.
- **யோபு 28:12-19.** ஆனால் மனிதனால் ஞானத்தைக் கண்டுபிடிக்க முடியாது! கடலிலோ, பூமியிலோ அவன் ஞானத்தைக் கண்டு பிடிக்க முடியாது. ஞானத்தை தங்கத்தைக் கொண்டு அவனால் வாங்க முடியாது.

## கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 28

எல்லாவற்றையும் விட ஞானம் அதிக பெறுமதி வாய்ந்தது.

- **யோபு 28:20-28.** ஞானம் எங்கேயிருந்து வருகிறது? கர்த்தரைத் தவிர - வேறொருவரும் இதனை அறிய மாட்டார்கள் (யோபு 28:23). ஞானத்தை எங்கே தேடுவது என கர்த்தர் மனிதரிடம் கூறி இருக்கிறார்! (யோபு 28:28) நீங்கள் கர்த்தருக்குப் "பயப்படும்" (பெரிதான கனம், தேவ ஆராதனை அதிகளவு மரியாதை வழங்கல்) பொழுது ஞானத்தைக் கண்டடைவீர்கள். நீங்கள் தவறான காரியங்களிலிருந்து மனமந்திரும்பும் ("விலகும்") போது ஞானத்தைக் கண்டடைவீர்கள்.

## பிரசங்கியுங்கள்: யோபு 28

### மனிதனால் ஞானத்தைக் கண்டுபிடிக்க முடியாது.

மனிதன் விடயங்களைக் கண்டு பிடிப்பதில் மிகவும் சிறந்தவன். ஆயிரமாண்டுகளுக்கு முன்பு யோபு உயிருடன் இருந்தபொழுது, ஆழமான சுரங்கங்களில் தங்கம் மற்றும் விலையுயர்ந்த கற்களை மனிதனால் கண்டுபிடிக்க முடிந்தது (சுரங்கம்); 📖 **யோபு 28:10-11.** [இன்று உருபெருக்கி எவ்வாறு பல மறைந்திருக்கும் சிறிய பொருட்களை பார்க்க உதவுகிறது போன்ற விஞ்ஞானக் கருவிகளின் உபயோகம் பற்றிய உதாரணங்களை கூறுங்கள்.]

ஆனால் மனிதனால் ஞானத்தைக் கண்டுபிடிக்க முடியாது; 📖 **யோபு 28:12-15.**

- தங்கத்தை விட ஞானம் ஏன் மிகவும் பெறுமதி வாய்ந்தது?
- மனிதனால் ஞானத்தை கண்டுபிடிக்க முடியாதது ஏன்?

எல்லாக் கடினமான வினாக்களுக்கும் மனிதன் விடைகளைத் தேட விரும்புகிறான். ஆனால் கர்த்தர் பதில்களை மறைக்கிறார். எங்களுக்கு எல்லா விடயங்களையும் நாம் அறிந்திருக்க வேண்டுமென்று கர்த்தர் விரும்பவில்லை. அநேக விடயங்கள் கர்த்தருக்கு மட்டுமே

தெரிய வேண்டியவை;
**உபாகமம் 29:29.**

யோபுவும் அவரது நண்பர்களும் நீண்ட நேரமாக வாதிட்டபோதும் யோபு ஏன் இவ்வளவு துன்பப்படுகிறார் என அவர்களால் இன்னும் அறிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் பதில்களைத் தேடுகிறார்கள். ஆனால் அவர்கள் ஞானத்தைக் கண்டடையவில்லை. ஞானத்தை எப்படி பெறுவது என்பதை யோபு 28 காட்டுகிறது.

## கர்த்தர் எமக்கு ஞானத்தை வெளிப்படுத்துகிறார்

**யோபு 28:20, 23, 28**

⊞ நீங்கள் சில விடயங்களை மணிக் கணக்காகத் தேடுவீர்கள். அதை நீங்கள் எங்கும் கண்டுபிடிக்க முடியாதிருக்கும் அது எப்போதும் உங்கள் சட்டைப் பையில் இருந்தது என்பதை பின்பாகவே நீங்கள் உணருவீர்கள்!

நாம் சரியான இடத்தில் தேடுவோமானால் ஞானத்தை கண்டுபிடிப்பது கடினமான விடயம் இல்லை! நாம் பல கடினமான கேள்விகளை கேட்க வேண்டிய அவசியமில்லை. நாம் **கர்த்தரிடம்** கேட்க வேண்டியது ஞானத்தை மாத்திரமே (யாக்கோபு 1:5).

**யோபு இந்த ஞானத்தை ஏற்கனவே பெற்றிருந்தார்! யோபு 1:1, 28:28**

- யோபு அவருடைய வேதனையிலும் எவ்வாறு ஞானத்துடன் (அறிவு) இருந்தார்?

தேவன் **ஏன்** இதைச் செய்தார் என்று கேட்கவேண்டிய அவசியம் யோபுவுக்கு இருக்கவில்லை. முன்பிருந்த பிரகாரம் கர்த்தரில் நம்பிக்கை வைப்பதும், கர்த்தருக்காக வாழ்வதுமே யோபு செய்ய வேண்டிய விடயமாக இருந்தது. இது தான் ஞானம்!

**ஞானம் என்பது ஏன் என்ற கேள்விக்கு பதிலை அறிவதல்ல. ஞானம் என்பது கர்த்தரை அறிவதே ஆகும்.**

⊳ யோபு தன் வேதனையைப் பார்க்காமல் கர்த்தரை நோக்கிப் பார்த்த போது அவர் ஞானமாக வாழ்வதற்குரிய வழியைக் கண்டார். நீங்கள் பிரச்சனையில் இருக்கும் போது யோபு 28:28 ஐ ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்! பிரச்சனை வருவதற்கு முன்செய்தது போல கர்த்தரை நம்புவதும், அவருக்கு புகழ் செலுத்துவதுமே யோபு செய்ய வேண்டிய விடயமாக இருந்தது. எனவே நாமும் அவ்வாறே செய்வோம்! தொடர்ந்தும் கர்த்தருக்குப் **பயப்படுவோம்,** பிழையான எண்ணங்களையும் சிந்தனைகளையும் **தவிர்ப்போம்.** இதுவே ஞானம்!

ஞானமானது உலகிலேயே மிகவும் விலையுயர்ந்த ஒரு விடயமாகும். ஞானமாக வாழ்வதற்குரிய வழியை கர்த்தர் உங்களுக்குக் காண்பித்து இருந்தால் அவரைத் துதியுங்கள்! அனேகர் தவறான இடங்களில் ஞானத்தைத் தேடுகிறார்கள். ஆனால் கர்த்தர் ஞானத்தைக் கண்டடைவதற்குரிய உண்மையான இடத்தை காட்டியிருக்கிறார். அந்த இடம் இயேசுவின் சிலுவை ஆகும்;
**1 கொரிந்தியர் 1:22-24.**

**உண்மையான ஞானத்தைப் பற்றி உங்களுக்கு தெரியுமா?**

# 13 தேவ பக்திக்குரிய வாழ்வு!

**பின்னணி**
யோபு 31 இல் யோபு தனது நண்பர்களிடம் பேசிய கடைசி வார்த்தைகள் உள்ளது. பல முறைகள் "நான் ஒரு அப்பாவி" என்று யோபு சொன்னார். தண்டிக்கப் படுவதற்குரிய எந்தவொரு காரியத்தையும் அவர் செய்ய வில்லை. இங்கே யோபு தனது தேவபக்திக்குரிய வாழ்வைக் காட்டுகிறார். யோபு கர்த்தருக்கு முன்பாக எவ்விதத்திலும் பாவம் செய்யவில்லை என்று கூறுகிறார். அவருடைய வாழ்வானது **யோபு 28:28** இல் அவர் கூறியதற்கும், **யோபு 1:8** இல் கர்த்தர் கூறியதற்கும் பொருந்தும் விதமாகவே அமைகிறது.

**முக்கிய குறிப்பு**
கர்த்தருக்குள்ளான வாழ்விற்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக யோபு திகழ்கின்றார்.

**சிந்தித்து செயற்படுவதற்கு**
பாலியல் பாவமானது பல குடும்பங்களையும் மற்றும் வாழ்வினையும் கெடுத்துவிடுகிறது. யோபுவின் முன்மாதிரியை பின்பற்றும்படி மக்களை எவ்வாறு நீங்கள் உற்சாகப்படுத்தலாம் என்று சிந்தியுங்கள். எமது கண்களையும் மனதையும் எப்படி தூய்மையாக வைத்திருக்க முடியும்? நாம் எப்படி நம்முடைய செயல்களை சரியாகச் செய்யலாம்?

யோபுவின் உதாரணத்தை ஏற்றுக்கொள்வது எளிது. ஆனால் பாலியல் பாவம் செய்வதற்கு மக்களைத் தூண்டுவது எது? பிழையான சிந்தனைகளை ஆரம்பத்திலேயே வேண்டாம் என சொல்வதற்கு உங்கள் செவிமடுப்போரை எவ்வாறு உற்சாகப்படுத்துவீர்கள். அவர்கள் யோபுவைப்போல் கர்த்தருக்கு முன்பாக வாக்குறுதி அளிக்க வேண்டியது அவசியமா? அவர்களுக்கு உதவும் படி ஒரு நண்பரைக் கேட்பது அவசியமா?

**குறிப்புக்கள்**
யோபு 31 இல் பலமுறை இவ்வாறு யோபு எழுதுகிறார்: "நான் இந்தத் தவறான காரியங்களைச் செய்திருந்தால் இந்த பயங்கரமான சம்பவங்கள் எனக்கு நடக்கட்டும்." "நான் **ஒரு போதும்** இந்தத் தவறை செய்ததில்லை" என்று யோபு குறிப்பிடுகிறார். இது உண்மையில்லையென்றால், கர்த்தர் இதை தெளிவு படுத்த வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

- **யோபு 31:1.** 'காமம்' பாலியல் ரீதியான தவறான விடயமாகும். பாலியல் பாவமானதுபார்வையுடன் தொடங்குகிறது என்பதை யோபு அறிந்திருந்தார். அவர் பிழையான வழியில் பார்க்கமாட்டேன் என ஒரு "உடன்படிக்கை" (உறுதியான வாக்குறுதி) செய்திருந்தார்.

## கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 31

- **யோபு** 31:5. “மாயை” “கபடு” - பொய்கள் நேர்மையானவை அல்ல.
- **யோபு** 31:7. “என் இருதயம் என் கண்களை பின்தொடர்ந்தும்” முதலாவது நீங்கள் **பார்க்கிறீர்கள்** பின்பு தவறான ஒன்றை நீங்கள் **விரும்புகிறீர்கள்.** அதன் பின் அதை நீங்கள் **அடைகிறீர்கள்.** யோபு அவ்வாறு செய்யவில்லை!
- **யோபு** 31:9. “என் மனம் யாதொரு ஸ்திரியின் மேல் மயங்கி, அயலானுடைய வாசலை நான் எட்டிப் பார்த்ததுண்டானால்...” (காத்திருத்தல், மறைந்திருத்தல்)
- **யோபு** 31:16-23. யோபு எப்பொழுதும் ஏழை மக்களுக்கு கரிசனை காட்டினார் (16), பசியோடு வந்த மக்களுடன் உணவைப் பகிர்ந்தார் (17-18). உடை தேவைப்பட்ட மக்களுக்கு உடையை கொடுத்தார் (19-20), உதவி செய்ய யாருமற்ற மக்களுடன் நியாயமாக நடந்தார் (21). இவைகளை அவர் செய்யா விட்டால் அவரது கைப்பட்டை தோழிலிருந்து சரியட்டும் (22). அவர் கடவுளின் தண்டனைக்குப் பயந்திருந்ததினால், அவர் தவறான ஒன்றையும் செய்யவில்லை (23).

## பிரசங்கியுங்கள்: யோபு 31

### தூய்மை யோபு 31:1, 9-10

- பாலியல் ரீதியான பாவம் எங்கே தொடங்குகிறது?

பெண்கள் ஆண்களுடன் மிகவும் நட்பாக இருக்க முடியும். ஆழகான பெண்களைக் குறித்து நினைத்து அவர்களது எண்ணங்களை கட்டி எழுப்பலாம் இது தவறானது. ஆனால் பாவம் இவ்விடயங்கள் நடக்க முன்பே தொடங்குகிறது. பாலியல் பாவம் என்பது **பார்வையினாலே** தொடங்குகிறது என்பதை யோபு அறிந்திருந்தார்.

- ஒருவரைப் பார்ப்பது தவறு அல்ல! தவறு என்ன? ஒரு போதும் செய்ய மாட்டேன் என யோபு செய்த வாக்குறுதி என்ன?

**மத்தேயு 5:28-29.** உங்கள் தவறான எண்ணங்கள் மற்றும் செயல்களை மன்னிக்கும்படி கர்த்தரிடம் கேளுங்கள். நீங்கள் தவறான விதத்தில் **பார்க்காதபடி** உதவி செய்யும்படி கர்த்தரிடம் கேளுங்கள். நீங்கள் பாலியல் பாவம் செய்யாமலிருக்க நீங்கள் என்ன செய்யவேண்டும்?

### நேர்மை

**அவர் ஒருபோதும் ஏமாற்றவில்லை**
யோபு 31:5-8

பலர் ஒருவரும் பார்க்காத நேரத்தில்

சிறதளவேனும் ஏமாற்ற முயலுவார்கள். ஆனால் அவர் **எப்போதும்** பார்க்கிறார் என யோபுவுக்குத் தெரியும் (யோபு 31:4). யோபு ஒரு போதும் ஏமாற்றமாட்டார். கர்த்தர் அவரைக் கணக்கிடும் போது அவர் நேர்மையானவர் என்று காண்பிக்க வேண்டுமென அவர் விரும்புகிறார்! யோபு தவறு செய்திருந்தால் (அவர் ஒரு ஏமாற்றுக்காரராக இருந்தால) மக்கள் அவருடைய எல்லாப் பயிர்களையும் திருடிச் செல்லட்டும்!

**அவர் அவரது சேவையாளர்களுடன் நியாயமாக நடந்தார்** யோபு 31:13~15

- பலர் தங்களது சேவையாளருக்கு நியாயமானவர்களாக இருக்க மாட்டார்கள்! அவர்கள் புகார்செய்கின்ற போது **யோபு** ஏன் அவற்றுக்குச் செவிகொடுத்தார்?

> எல்லோரைப் போலவும் இருப்பது மிகவும் இலகுவான ஒன்றாக இருக்கிறது. ஆனால் கர்த்தர் தம் மக்களை வித்தியாசமாக இருப்பதற்காக அழைக்கிறார். யோபுவின் முன்மாதிரியிலிருந்து நீங்கள் எதை கற்றுக் கொள்கிறீர்கள்?

## பராமரித்தல் யோபு 31:16~23

கெட்ட காரியங்களைச் செய்வது தவறு என்று எம் எல்லோருக்கும் தெரியும். **நன்மையான காரியங்களை செய்யாமல் இருப்பதும்** தவறு என்பதை நீங்கள் அறிவீர்களா (யாக்கோபு 4:17)?

யோபு இதை அறிந்திருந்தார். யோபு செல்வந்தராக இருந்தார். தேவையுள்ள மனிதருக்கு உதவக் கூடியவராக இருந்தார். கர்த்தர் அவரை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பது அவருக்குத் தெரியும். யோபு மக்களைப் போகச் சொன்னாரா? உதவி தேவைப்பட்ட மக்களை அவர் பார்த்த போது அவர் வேறு திசையை நோக்கிப் பார்த்தாரா?

> உதவி தேவைப்படும் மக்களுக்கு நீங்கள் ஒரு நண்பராக இருக்கிறீர்களா? யோபுவைப் போல் நீங்கள் செல்வந்தராக இல்லாது இருக்கலாம். ஆனால் மற்றவர்களைப் பராமரிக்கும் பொருட்டு நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறாரென சிந்தியுங்கள்.

யோபு சிறந்த ஒரு முன்மாதிரியாக இருக்கிறார் - இன்னும் ஒரு சிறந்த உதாரணத்தை எமக்கு நினைவூட்டுகிறார். பரலோகத்தில் உள்ள அவருடைய தகப்பனை பிரியப்படுத்தவே இயேசு **எப்பொழுதும் எல்லாவற்றையும்** செய்தார். இயேசுவின் வாழ்வைப் போன்றோ அல்லது யோபுவின் வாழ்வைப் போன்றோ எமது வாழ்வு இல்லாததைக் குறித்து நாம் துக்கப்படுகின்றோம். ஆனால் நீங்கள் நம்பிக்கையை இழக்காதீர்கள்! இயேசு எம்மைப் போன்ற பாவிகளுக்காக இவ்வுலகிற்கு வந்து ஒரு முழுமையான நிறைவான வாழ்வை வாழ்ந்தார்! நாம் அவரை நம்பும் போது, இயேசுவினுடைய முழுமையான வாழ்வு எமதாகின்றது! கர்த்தர் எம்மைப் பார்க்கின்றபோது இயேசுவினுடைய அப்பரிபூரண வாழ்வை காண்பார்! எனவே கர்த்தர் இயேசுவுக்குள்ளாக எம்மை **ஏற்றுக்கொள்கிறார்!** அவரை துதியுங்கள்!

# 14 கர்த்தரின் மேன்மையைக் குறித்த பாடங்கள்

**பின்னணி**

யோபுவின் மூன்று நண்பர்களிடமும் சொல்வதற்கு எதுவும் இருக்க வில்லை. ஆனால் வேறொருவர் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருக்கிறார். **எலிகூவிடம்** கூறுவதற்கு அநேக விடயங்கள் இருந்தது! (யோபு 32-37)

**தன்னிடம்** எல்லாப் பதில்களும் இருக்கிறது என எலிகூ நிச்சயித்து இருந்தார்! அவர் யோபுவின் மீதும் அவரது நண்பர்கள் மீதும் கோபமாக இருந்தார். அவர்கள் தன்னுடைய ஞானத்திற்குச் செவிகொடுக்க வேண்டுமென அவர் விரும்புகிறார். **யோபு 32:1-3, 33:1-3.** ஆனால் எலிகூவுடைய ஞானமானது சிறந்ததல்ல. அந்த மூன்று நண்பர்களைப் போலவே எலிகூவும் யோபுவைப் புரிந்துகொள்ளவில்லை. யோபு இப்பிரச்சினைக்கு பாத்திரவானாயிருக்கிறார் என அவரது நண்பர்களைப் போலவே அவரும் நினைத்தார் (யோபு 34:5-12).

ஆனால் அதன் பின்பு தனது சொந்த ஞானத்தைப் பற்றி சிந்திப்பதை எலிகூ நிறுத்தினான். அதற்குப் பதிலாக கர்த்தர் எவ்வளவு பெரியவர் என்பதை சிந்தித்தான். அதனால் அவனிடத்தி லிருந்து கற்றுக்கொள்வதற்குரிய முக்கிய பாடங்கள் இருந்தன; **யோபு 36:22-37:24.**

**முக்கிய குறிப்பு**

நாம் கர்த்தருடைய மேன்மையைக் குறித்து நினைக்கும் போதும் மற்றும் தாழ்மையாக இருக்கும் போதும் எமது சிந்தனை ஞானமுள்ளதாக அமையும்.

**சிந்தித்து செயற்படுவதற்கு**

அநேகர் புயலைக் கண்டால் பயப்படுவர். கர்த்தரே அதைக் கட்டுப்படுத்துபவர் என்பதை கிறிஸ்தவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அவரே புயலை அனுப்புகிறார். எனவே பயப்படவேண்டிய அவசியமில்லை. அதற்குப் பதிலாக அவரது மேன்மைக்காகவும் - வல்லமைக்காகவும் நாம் அவரைத் துதிக்க வேண்டும். நாங்கள் அதை சிறியதாக உணரவேண்டும். ஆனால் பயப்படக்கூடாது.

ஒரு கிறிஸ்தவ மாலுமியானவர் ஒரு பெரிய புயலைக் கடலில் மகிழ்ச்சியுடன் அனுபவித்தார். அவருடைய மனைவி உண்மையாகவே பயந்திருந்தார். அவளுடைய கனவர் புன்னகைத்து விட்டு மனைவியினுடைய கைகளிலே சமாதானமாக உறங்கும் தனது குழந்தையை நோக்கினார். பாருங்கள் எமது மகன் உங்களுடைய கைகளிலே எவ்வளவு பாதுகாப்பாக உறங்குகிறார். அவர் புயலைக் கண்டு கவலைப்படவில்லை. நீங்கள் கர்த்தரில் கரங்களில் பாதுகாப்பாக இருப்பதை உணரவில்லையா? நீங்கள் உங்கள் பரலோக தந்தையை

## கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 36:24 – 37:24

நம்பவில்லையா? அவர் புயலை அவருடைய கரங்களில் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார் என்பதை நீங்கள் நம்பவில்லையா?

**குறிப்புகள்**

- **யோபு 36:24.** "மகிமை" - துதி.
- **யோபு 36: 27-37: 3-4, 13, 15.** புயல் மீதான கர்த்தரின் கட்டுப்பாட்டை இந்த நீண்ட பகுதி எமக்கு விவரிக்கின்றது. **கர்த்தரே** இடியையும் மின்னலையும் அனுப்புகிறவர். அது அவரின் கட்டுப்பாட்டில் உள்ளது.
- **யோபு 37:21.** புயலுக்குப்பின் சூரியன் வெளிவரும். அது பார்ப்பதற்கு மிகவும் பிரகாசமானது.

## பிரசங்கியுங்கள்: யோபு 36:24 – 37:24

### கர்த்தரின் மேன்மையிலிருந்தான படிப்பினைகள்

**ஏன்?** என்பதை அறிவது ஞானம் அல்ல. அது **கர்த்தரை** அறிவது பற்றியதாகும். நாம் கர்த்தரின் மேன்மையைப் பற்றி சிந்திக்கும் போது எம்முடைய எல்லா கேள்விகளுக்குமான நாமே பதில்களை நாம் பெற்றுக்கொள்ள மாட்டோம். ஆனால் எம்முடைய பிரச்சனைகள் அதற்குரிய சரியான இடத்தை கண்டு பிடித்துவிடும்.

⊞ ஒரு நாட்டின் தலைவர் படுக்கைக்குச் செல்வதற்கு முன்பு எப்பொழுதும் வானத்திலுள்ள நட்சத்திரங்களைப் பார்ப்பார். அது அவருடைய பிரச்சனைகளுக்கு பதில்கொடுக்கவில்லை! ஆனால் கர்த்தருடைய படைப்புகளின் மேன்மை அவருடைய பிரச்சனைகளைவிட மிகவும் பெரியது என்பதை அது அவருக்குஞாபகப்படுத்தும்.

எலிகூவிற்கு ஒரு **புயல்** கர்த்தருடைய மேன்மையை காண்பதற்கு உதவியது;
**யோபு 37:10~14.**

1. **கர்த்தரைத் துதிப்பதை நினைவில் வையுங்கள்**

**யோபு 36:24~26**

⊞ ஒரு கிறிஸ்தவப் பெண் அவளது

கணவனின் மரணத்தின்பின் மிகவும் சோகமாகக் காணப்பட்டார். அதனால் அவர் பாடுவதை நிறுத்தியிருந்தார். அது தவறு என்பதை அவள் விரைவாகக் கண்டுகொண்டாள்! கர்த்தர் **எப்போதும்** எமது துதிக்குப் பாத்திரராய் இருக்கிறார்!

யோபு ஆரம்பத்தில் கர்த்தரைத் துதித்தார் (யோபு 1:20-21). ஆனால் பிரச்சனைக்கு சில வாரங்களுக்குப் பின் நாம் கர்த்தரைத் துதிப்பதற்கு மறந்து போகலாம். கர்த்தர் எவ்வளவு மேன்மையானவரென்பதை சிந்தியுங்கள். அவரைத் துதியுங்கள்!

**2. அதிகமான விடயங்கள் எமக்கு தெரியாது.**

யோபு 37:5, 14~15

அடுத்தமுறை புயல் வரும் போது நீங்கள் எவ்வளவு குறைவாக கர்த்தருடைய வழிகளை அறிந்திருக்கிறீர்கள் என்பதைச் சிந்திக்கம்படி சற்று நில்லுங்கள். அவர் உலகின் கால நிலைகள் யாவற்றையும் கட்டுப்படுத்துபவராக இருக்கிறார். ஆனால் அவர் என்ன செய்கிறார் என்பது எமக்குத் தெரியாது. எங்களுடைய வாழ்விலும் தேவன் பல்வேறுபட்ட வித்தியசமான காரியங்களை அனுப்பியிருக்கிறார். ஆனால் கர்த்தரின் திட்டம் எமக்குத் தெரியாது.

**3. கர்த்தர் பல வித்தியாசமான திட்டங்களை வைத்திருக்கிறார்**

யோபு 37:13

மழைக்குரிய இரண்டு காரணங்களைப் பாருங்கள்! கர்த்தர் அன்பையும் கோபத்தையும் காட்ட அதே விடயங்களைப் பயன்படுத்தலாம். அவர் எம்மை திருத்துவதற்காக அல்லது ஆசீர்வதிப்பதற்காகப் பிரச்சனை களைப் பயன்படுத்தலாம். அல்லது இரண்டும் ஒரே நேரத்தில் நடைபெறலாம்! யோபுவிற்கு கர்த்தர் பிரச்சனை அனுப்புவது அவரைத் தண்டிப்பதற்காக என யோபுவின் நண்பர்கள் நிச்சயித்து இருந்தார்கள். ஆனால் கர்த்தருடைய திட்டம் யோபுவை ஆசீர்வதிப்பதாக இருந்தது! கர்த்தரின் மக்களுக்கான அவரின் திட்டம் **எப்போதும்** அவர்களது நன்மைக்கானதாகவே இருக்கும்.

**4. புயல் வந்ததன் பின் சூரியன் உதிக்கும்.**

யோபு 37:21

சூரியனும், புயலைப் போலவே சக்தி வாய்ந்தது - ஆனால் மிகவும் வேறுப்பட்டது. பிரச்சனை வந்த பிறகு கர்த்தருடைய மக்கள் ஆசீர்வதிக்கப் படுகிறார்கள். அத்துடன் கர்த்தரின் புன்னகை அவரது புயலைப் போலவே சக்தி வாய்ந்தது!

நாம் பிரச்சனைகளின் வழியை **நோக்காது** அதற்குப் பதிலாக எமது கர்த்தர் எவ்வளவு மேன்மையானவர் என்பதை நாம் நினைக்க வேண்டும். அப்பொழுது நாம் தாழ்மையுள்ளவர்களாகவும் அத்துடன் கர்த்தரை நம்புவதற்கு இன்னும் தயாராகவும் இருப்போம். எங்களுக்கு தெரிந்தவை கொஞ்சமே. ஆனால் கர்த்தர் முழுமையான கட்டுப் பாட்டை உடையவராக இருக்கிறார். காலநிலையோடு சேர்ந்து எங்களுக்குத் தேவையானதையும் கர்த்தர் அனுப்புவார்.

I பேதுரு 5:6~7

# 15 கர்த்தர் பேசுகிறார்

**பின்னணி**

யோபுவோ அல்லது கர்த்தரோ எலிகூவுக்கு பதிலளிக்கவில்லை. ஆனால் எலிகூ கர்த்தரின் மேன்மையைப் பற்றிப் பேசுகின்ற பொழுது **கர்த்தர்** பேசுவதற்கான வழிகளை ஆயத்தம் செய்கிறார். புயலின் மத்தியிலும் அநேக கடினமான கேள்விகளினால் கர்த்தர் யோபுவை சோதித்தார்.

**யோபு 38~39.** கர்த்தர் யோபுவிடம் கேள்விகளைக் கேட்டபோது அது கர்த்தர் முன்னிலையில் யோபு எவ்வளவு சிறியவர் என்பதை யோபுவுக்கு எடுத்துக்காட்டியது. (நீ எங்கே இருந்தாய்...? நீ எப்போதாவது உத்தரவு கொடுத்திருக்கிறாயா...? அதற்குரிய வழி என்ன...? உன்னால் முடியுமா...? உனக்குத் தெரியுமா...?)

**யோபு 40:1~5.** கர்த்தருக்குப் பதிலளிப்பதற்கு யோபு வெட்கப்பட்டான்.

கர்த்தர் யோபுவை இன்னும் அதிகத் தாழ்மையுள்ளவராக வேண்டுமென்று விரும்பினார். இங்கே இரண்டு அதிகாரங்களில் கேள்விகள் காணப்படுகின்றன (யோபு 40-41). கடைசியாக 42 ஆம் அதிகாரத்திலே யோபு கர்த்தரிடம் மன்னிப்புக் கேட்கிறான்.

**முக்கிய குறிப்பு**

கர்த்தருடைய வழிகளைப் பற்றி எவ்வளவு குறைவாக அறிந்திருந்தார் என்பதைக் கர்த்தர் யோபுவுக்கு உணரத்துகிறார்.

**சிந்தித்து செயற்படுவதற்கு**

கர்த்தருடைய ஆறுதல் எமக்குத் தேவை என சில நேரங்களில் யோபுவைப் போல் நாம் உணருகின்றோம். ஆனால் கர்த்தர் யோபுவிடம் பேசிய பொழுது அவர் ஒரு **புயலின்** மத்தியில் பேசுகிறார் (யோபு 38:1). அவர் யோபுவுக்கு ஆறுதலளிக்கவில்லை. யோபு எங்கே தவறு சென்றுள்ளார் என்பதை அவர் யோபுவுக்கு எடுத்துக்காட்டுகிறார்.

- கிறிஸ்தவர்கள் தாங்கள் துன்பப்படும் பொழுது அடிக்கடி விடுகின்ற தவறுகள் எவை? (எமக்காக நாம் வருத்தப்படக் கூடும் அல்லது கரத்தர் நியாயமற்றவர், என்று சிந்திக்கக் கூடும் அல்லது...)
- இந்தப் பிழைகளுக்கு யோபு 38-39 எப்படி எமக்கு உதவுகிறது?

**குறிப்புக்கள்**

- **யோபு 38:2.** இதன் அர்த்தம்: "அறிவில்லாத வார்த்தைகளினால் எனது ஞானத்தைக் கேள்வி கேட்கும் இவன் யார்?"
- **யோபு 38:3.** "உன்னை இடைக்கட்டிக்கொள்" எனக்கு முன் எழுந்து நில்.
- **யோபு 40:2.** "வழக்காடி" - வாக்கு வாதம். யோபு கர்த்தருடன் வாதாடினான். யோபு கரத்தரை குற்றம் சாட்டினான். கர்த்தர்

## கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 38

தனக்கு நியாயம் செய்யவில்லை என அவன் கருதினான். எனவே இப்போது யோபு கர்த்தருக்குப் பதிலளிக்கட்டும்!

## பிரசங்கியுங்கள்: யோபு 38

### யார் நீ?

யோபு 38:1~3

⊕ என்னுடைய கல்லூரியில் ஒரு மனிதன் என்னுடன் பேசிய மூன்று வார்த்தைகளை நான் இப்போதும் ஞாபகத்தில் வைத்திருக்கிறேன். “யார் நீ?” அவர் நட்பாக இருக்கவில்லை. அதன் அர்த்தம் மிகத் தெளிவாக இருக்கிறது. அவர் நான் வெளியேற வேண்டும் என்று விரும்பினார். அந்த மூன்று வார்த்தைகளும் என்னை மிகவும் சிறியதாக உணர்த்தின!

கர்த்தர் யோபுவிடம் “நீ யார்?” என்று கேட்டார். யோபு தான் எவ்வளவு சிறியவர் என்பதைக் காணவேண்டும் எனக் கர்த்தர் விரும்பினார். எவ்வளவு கொஞ்சமாக அவர் புரிந்து கொள்கிறார் என்பதை யோபு பார்க்கும் படியாக கர்த்தர் விரும்பினார். ஆனால் கர்த்தர் இரக்கமற்றவராக **இருக்கவில்லை**! உண்மையாகவே யோபு மீண்டும் தன்னுடன் நண்பனாக வேண்டுமென்றே கர்த்தர் விரும்பினார். கர்த்தர் கூறும் விடயங்கள் யோபுவுக்கு ஆறுதலை அளிக்கவில்லை. ஆனால் கர்த்தர் தன்னுடன் பேச வேண்டுமென எவ்வளவு தூரம் யோபு விரும்பினார் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள்! கர்த்தர் யோபுவை விட்டு விலகவில்லை என்பதை இது காட்டுகிறது!

யோபு கர்த்தரைப் பற்றி பல

கேள்விகள் கேட்டான். கர்த்தருடைய நியாயத்தையும், ஞானத்தையும் அவன் நம்பவில்லை. ஆனால் கர்த்தரை சந்தேகிப்பதற்கு யோபு யார்? கர்த்தர் தவறிழைத்து இருப்பார் என்று நினைப்பதற்கு, யோபுவுக்கு எந்த உரிமையும் இல்லை! இது, கர்த்தர் கேள்விகள் கேட்பதற்கான நேரம். ஆனால் யோபுவினால் அதற்கு பதில் சொல்ல முடியுமா?

கர்த்தர் உங்கள் கேள்விகளுக்குப் பதில் கொடுக்க **வேண்டுமென** நீங்கள் நினைக்கிறீர்களா? ஒருவேளை நீங்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் கர்த்தர் என்ன செய்கிறார் என்பதை அறிய அது உங்களுக்கு உரிமையை கொடுக்க இல்லை. **"நீ யார்?"** கர்த்தர் எவ்வளவு பெரியவர் என்பதையும் நாம் எவ்வளவு சிறியவர்கள் என்பதையும் நாம் நிச்சயமாக ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.

யோபுவுக்கு சிறிய அளவே **தெரியும்** என்பதை யோபு காணவேண்டும் என்பதைக் கர்த்தர் விரும்புகிறார். சிறிய அளவு **வல்லமை**யையே யோபு கொண்டுள்ளார் என்பதை யோபு காண வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார்;

**யோபு 38:34-35.**

இதைப்போலவே கர்த்தருக்கும் எமக்கும் பெரிய இடைவெளி இருக்கிறது! எமக்கு சிறிதளவே தெரியும்! ஆனால் நாம் சில நேரங்களில் யோபுவைப் போல் அதிகளவு விடயங்களைக் கூறுவோம்! கர்த்தரைக் காட்டிலும் எமக்கு அதிகம் தெரியும் என்பதைப் போல நாம் பேசுகிறோம்! நாம் கர்த்தராக இருந்தால் இது போன்ற செயலை நாம் செய்திருக்க மாட்டோம் என நாம் சில வேலைகளில் நினைக்கிறோம். **நாம் எவ்வளவு முட்டாள்களாக இருக்கிறோம் என்பதைக் கர்த்தர் எமக்குக் காட்டுகிறார்.**

## நீ எங்கே இருந்தாய்?

யோபு 38:4-18

⊕ உங்களுக்கு இரண்டு வயதுடைய பிள்ளை ஒன்று இருப்பதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். பல்கலைக்கழக பரீட்சை வினாக்களுக்கு அவளால் விடையளிக்க இயலாது! ஒருபோதும் விடை தெரியக் கூடிய சாத்தியமில்லை!

கர்த்தர் யோபுவிடம் கேள்விகளுக்கு மேல் கேள்விகள் கேட்டார். ஆனால் யோபுவினால் பதில் கூற முடியவில்லை. (சில கேள்விகளைப் பற்றி மேலதிகமாகப் பேசுங்கள்.) இவை எல்லாவற்றையும் செய்யக்கூடிய ஒருவர் கர்த்தரே! அதைத்தான் கர்த்தர் குறிப்பிடுகிறார்.

## அமைதி! யோபு 40:1-5

இப்போது பேசுவதற்கான யோபுவின் நேரம். அவர் கர்த்தருடன் வாதாடட்டும்! இறுதியாக, இது யோபுவினுடைய வாய்ப்பு. அவர் துன்பப்படுவது ஏன் நியாயமில்லை என அவர் கர்த்தரிடம் சொல்லட்டும்!

ஆனால், சொல்வதற்கு யோபுவிடம் ஒன்றும் இல்லை. அவர் ஏற்கனவே அதிகமாக சொல்லியிருக்கிறார் என அவருக்குத் தெரியும். அவரது பேச்சு எவ்வளவு மடமைத்தனமாக இருந்திருக்கும் என அவருக்குத் தெரியும். இன்னும் சிறிது நேரம் அவர் அமைதியாயிருந்து கர்த்தருக்கு செவிகொடுப்பார். ஒரு வேளை நாமும் யோபுவிடமிருந்து கற்றுக்கொள்ளலாம்...

# 16 கர்த்தர் மீண்டும் பேசுகிறார்

**பின்னணி**
யோபுவிடம் கூறுவதற்கு கர்த்தரிடம் இன்னும் விடயங்கள் இருந்தன. யோபு தாழ்மையாகவும், அமைதியாகவும் இருந்தார். ஆனால் இதைவிட அதிகமாக கர்த்தர் யோபுவிடம் எதிர்பார்க்கிறார். ஆனால் கர்த்தர் அதற்கு மேலாக யோபு கர்த்தரைப்பற்றி வைத்திருந்த சில எண்ணங்கள் எந்தளவு தவறானதாக இருந்ததென்று யோபு பார்க்க வேண்டுமென விரும்புகிறார். யோபு மன்னிப்புக் கேட்டுத் தன்னிடம் வரவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

- யோபு ஒருபோதும் கர்த்தர் நியாயமற்றவர் என நினைக்கக் கூடாது; **யோபு 40:6~14.**
- மிகப்பெரிய மிருகமாகிய பிகெமோத், மற்றும் லிவியாதான் ஆகியவைகளை விட கரத்தர் வல்லமை வாய்ந்தவர். இந்த பயங்கரமான விலங்குகளை முதலில் தனது செல்லப் பிராணிகளாக்கட்டும் யோபு இடம் கொடுத்தால்! பின்னர் அவர் துணிவுடன் கர்த்தரின் முன்பாக எழுந்து நிற்கலாம்! **யோபு 40:15~41:34**

**முக்கிய குறிப்பு**
கர்த்தர் நாம் நினைப்பதை விட மேன்மையானவர். நாம் அவரோடு ஒரு போதும் தர்க்கிக்கக் கூடாது. கர்த்தர் நியாயமற்றவர் என நாம் ஒருபோதும் நினைக்கக்கூடாது.

**சிந்தித்து செயற்படுவதற்கு**
நாம் மிகவும் பெருமை உள்ளவர்களாக இருக்கலாம். கரத்தரைவிட எமக்கு அதிகமாகத் தெரியும் என நாம் மிக விரைவாக நினைக்கக் கூடும். இது எவ்வளவு முட்டாள் தனமான காரியம் என்பதை உங்களுக்கு செவிமடுப்போருக்கு காட்டுவதற்காக எப்படி இவ்வதிகாரங்களைப் பயன்படுத்துவது எனக் கர்த்தரிடம் ஜெபியுங்கள். நாம் எவ்வளவு சிறியவர்கள்! கர்த்தர் எவ்வளவு பெரியவர்! கர்த்தரைப் பற்றிய எமது குறைவான புரிந்து கொள்ளுதலி னாலேயே கர்த்தருடைய வழிகளைப் பற்றிய சந்தேகங்களும், கேள்விகளும் வருகின்றன.

**குறிப்புகள்**

- **யோபு 40:8.** இவைகளே யோபுவுக்குரிய கர்த்தரின் முக்கிய கேள்விகளாக இருக்கிறது. “நீ என் நியாயத்தை அவமாக்கு வாயோ? நீ உன்னை நீதிமானாக்கிக்கொள்ளும் படிக்கு என்மேல் குற்றம் நீ சுமத்துவாயோ?”
- **யோபு 40:9-14.** கர்த்தரைப் போல தானும் மகத்தவமுள்ளவரும், பலமானவரும் என யோபு நினைத்தாரா? அப்பொழுது அவர் தனது மகத்துவத்தைக் காட்டட்டும்! யோபு கர்த்தரைப் போல நடிக்கட்டும்! யோபு, பெருமையான மற்றும் தீய மனிதர்களைத் தாழ்மையாக

## கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 40:6-41:34

மாற்றி அவர்களுக்குத் தீர்ப்பளிக்கட்டும்!

- **யோபு 40:15, 41:1.** “பிகெமோத்” மற்றும் “லிவியாதான்” பிகெமோத், நீர்யானையை ஒத்ததாகும். லிவியத்தான் பெரிய முதலையைப் போன்றதாகும். ஆனால் இரண்டு விலங்குகளும் நீர்யானையையும், முதலையையும் காட்டிலும் பெரியதும், கொடூரமானதுமாகவே தென்படுகின்றன. அது பெரிய டைனோசோரைப் போன்றது (இவ் விலங்குகள் தற்போது உயிருடன் இல்லை).
- **யோபு 41:10.** லிவியத்தானை செல்லப் பிராணியாக வளர்க்க இயலாத அளவு அது மிகவும் பயங்கரமானது! அதை கட்டுப்படுத்த ஒருவராலும் முடியாது! ஆகவே லிவியத்தானை படைத்த **கர்த்தரை** எதிர்த்து நிற்பதும் இயலாத காரியமாகும்!

## பிரசங்கியுங்கள்: யோபு 40:6-41:34

### கர்த்தர் நியாயமுள்ளவர்!

யோபு 40:6~14

⊞ “நான் கர்த்தரை சந்தித்தால் அவரிடம் கேட்பதற்கு என்னிடம் சில கேள்விள் இருக்கின்றன” என சில மக்கள் சொல்வார்கள். அவர்கள் சொல்வது சரியா?

யோபு உண்மையில் கர்த்தரைக் கண்டகொள்ள விரும்பினார். அவர் கர்த்தரிடம் சில கேள்விகளைக் கேட்க விரும்பினார். கர்த்தர் நியாயமானவராக இருந்தால் இந்த வேதனைகளையெல்லாம் தனக்குக் கொடுத்திருப்பாரா என அவர் கேட்க விரும்பினார். **ஆனால் கர்த்தர் யோபுவைச் சந்தித்த போது எல்லாக் கேள்விகளையும் கர்த்தரே கேட்டார்!**

கர்த்தர் ஏன் இந்த அனைத்து துன்பங்களையும் கொடுத்தார் என யோபுவால் புரிந்துகொள்ள முடியவில்லை. தான் இவற்றை அனுபவிப்பதற்குரிய எந்தவொரு செயலையும் செய்யவில்லை என்பது அவருக்குத் தெரியும். பின்னர் யோபு அவரது தவறைச் செய்கிறார். **அவர்** எந்தப் பிழையையும் செய்யாவிட்டால் **கர்த்தர்** எந்த அளவு நேர்மையாக எல்லாவற்றையும் செய்கிறார் என்பதை யோபுவினால் காண முடியாது!

யோபு கர்த்தரைப்பற்றி கேள்விகள் கேட்டார். இது கர்த்தருடைய கேள்விகளுக்கு யோபு பதில் கொடுக்கும் நேரமாயிருந்தது! யோபு 40:8

## ➡ பிரசங்கியுங்கள்: யோபு 40:6 –41:34

"கர்த்தாவே நீர் நேர்மையில்லாதவர்" என நீங்கள் எப்போதாவது நினைத்ததுண்டா? அல்லது சொல்லியிருக்கிறீர்களா? கர்த்தர் எப்போதும் நியாயமானவர். நியாயமற்றவராக இருப்பது கர்த்தரால் இயலாது (உபாகமம் 32:4). இதைப் புரிந்துகொள்ளாததே **எமது** பிரச்சனையாய் இருக்கிறது. யோபுவைப் போல் நாமும் கர்த்தர் செய்யும் விடயத்தில் ஒரு சிறிய அளவையே பார்க்கிறோம். நாம் கர்த்தர் அல்ல!

கர்த்தர் யோபுவுக்கு ஒரு பரீட்சையை கொடுத்தார். யோபுவினால் கர்த்தராக முடியும் என அவர் காட்டட்டும்! யோபு பெருமையான தீய மனிதர்களை தாழ்மையாக மாற்றி அவர்களுக்கு தகுதியானதைக் கொடுக்கட்டும்! அல்லது யோபுவுக்கு இதைச் செய்ய முடியாவிட்டால் நியாயமான காரியம் எது என்பதைக் கர்த்தர் தீர்மானிக்கட்டும்! 📖 **யோபு 40:9–14**

### கர்த்தரே கர்த்தர்!

📖 **யோபு 41:1–10**

கர்த்தர் யோபுவிற்கு இன்னுமொரு பரீட்சையை வைத்தார். அதை அவனால் செய்ய இயலுமானால் அவன் தேவனிடம் தனது கேள்விகளைக் கேட்பதற்கு போதுமான பெலனை உடையவனாக இருப்பான். யோபு லிவியாதானைப் பிடித்து கயிற்றினால் கட்டி அதை வழிநடத்திச் செல்ல வேண்டும்! மூர்க்கத்தனமான அம்மிருகத்தை ஒரு செல்லப்பிராணியாகிய நாயைப்போல தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும்! நீர் தேவனாக இல்லாவிட்டால் இதைச் செய்ய முடியாது! இது சாத்தியமற்றது. லிவியாதன் மிகவும் கொடூரமான மிருகம். இதற்கு அருகில் ஒருவரும் நெருங்க முடியாது.

📖 **யோபு 41:10.** கர்த்தர் தனது கருத்தை வெளிப்படுத்திவிட்டார். அவன் கர்த்தரைப் போன்றவன் அல்ல. அவன் பெலவீனனும், சிறியவனும், மிகவும் குறைவாக விடயங்களை அறிந்தவனுமாயிருக்கிறான். யோபு லிவியாதனோடு வாதாடுவதற்குப் பயந்தவராக இருந்தால், அவர் நிச்சயமாக கர்த்தரோடு வாதாடுவதற்கு மிகவும் பயப்பட வேண்டும்.

**யோபுவின் கேள்விகளுக்கான பதில் அவருக்கு ஒருபோதும் கிடைக்க வில்லை.** (ஏன் நான்? இது நியாயமா?) ஆனால் அவருக்கு அதன் பதில்கள் தெரிந்திருக்கவேண்டிய **தேவையில்லை** என்பதை தேவன் அவருக்குத் தெரியப் படுத்தினார். அதற்குப் பதிலாக கர்த்தரே கர்த்தர், கர்த்தர் நியாயமும் நீதியும் உள்ளவர் என்பதை யோபு நம்பவேண்டியது அவசியமாகும்.

கர்த்தர் எவ்வாறு நியாயம் செய்கிறார் என்பதைப் புரிந்து கொள்வது மிகவும் கடினமான காரியமாக இருக்கலாம். அநேகமான விடயங்கள் நமக்கு நியாயமானவையாகத் தோன்றுவதில்லை. இந்த அதிகாரங்களிலுள்ள பாடங்களை ஞாபகத்தில் வையுங்கள்! நீங்கள் கர்த்தருக்கு எதிராக விவாதிக்கக் கூடிய அளவு பெரியவர்களும், பெலனுடையவர்களுமாக இருக்கிறீர்களா? கர்த்தர் செய்யும் விடயங்களை உங்களால் செய்ய முடியுமா? அவ்வாறு இயலாது எனில் கர்த்தர் நியாயமானவர் என **நம்புங்கள்.** கர்த்தரே கர்த்தர் என **நம்புங்கள்.** இயேசு கிறிஸ்து நீதிபதியாக வரும் வரை காத்திருங்கள். கர்த்தருக்குள் அவர் எல்லாவற்றையும் சரிப்படுத்துவார்!

# 17 கற்றுகொண்ட பாடங்கள்

**பின்னணி**
ஏன் நீண்ட நாட்களாக யோபு துன்பப்பட நேர்ந்தது?

அது ஏனெனில் யோபு சில பிரயோஜனமான பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டுமென கர்த்தர் விரும்பினார். அவருடைய சகல துன்பங்களிலிருந்தும் யோபுக்கான கர்த்தருடைய வார்த்தைகளில் இருந்தும் அந்தப் பாடங்கள் வருகின்றன (யோபு 38-41).

யோபுவிற்கு ஏற்பட்ட துன்பத்துக்குப் பின் அவருக்குள் எவ்வாறான மாற்றம் ஏற்பட்டது என்பதைப் பாருங்கள்; **யோபு 42:1~6.**

**முக்கிய குறிப்பு**
யோபு கர்த்தர் முன்னிலையில் தாழ்மையுடையவராக இருந்தார். தனது முட்டாள் தனமான வார்த்தைகளுக்காக கர்த்தரிடம் மன்னிப்புக் கேட்டார்.

**சிந்தித்து செயற்படுவதற்கு**
நாம் துன்பப்படும் பொழுது பிரச்சனைகள் நிறுத்தப்பட வேண்டும் என நாம் உண்மையாகவே விரும்புகிறோம். வழமையாக துன்பங்கள் தொடர்ந்து வருவதை யோபு புத்தகம் எமக்குக்காட்டுகிறது. அப்பொழுது மாத்திரம் தான் கர்த்தர் எமக்குக் காட்ட விரும்புகின்ற சிறப்பான விடயங்களை நாம் கற்றுக்கொள்வோம். நாம் துன்பப்படும் பொழுது பொறுமையாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தர் பிரச்சனையிலிருந்து எம்மை வெளியே கொண்டுவரும் நேரம் வரும் வரை நாம் காத்திருக்க வேண்டும்.
**யாக்கோபு 5:10~11**

**குறிப்புக்கள்**

- **யோபு 42:2.** கர்த்தர் தாம் விரும்புகின்ற எல்லாவற்றையும் செய்ய அவருக்கு உரிமையும், அதிகாரமும் உண்டு. கர்த்தருடைய திட்டத்தை ஒருவராலும் நிறுத்த முடியாது. யோபு இதை ஆரம்பத்தில் அறிந்திருந்தார். ஆனால் இப்பொழுது இந்த உண்மையைக் குறித்து அவர் **சந்தோஷப்படுகிறார்.**
- **யோபு 42:3.** யோபு கர்த்தருடைய கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார். (யோபு 38:2). அவர் கர்த்தருடைய வழிகளைப்பற்றி அதிகமாகக் கூறியதை அவர் காண்கிறார். அவரால் புரிந்துகொள்ள முடியாத அளவு கர்த்தருடைய வழிகள் மிகவும் “அதிசயமானது”. (பெரியது)
- **யோபு 42:5.** அப்பொழுது யோபு கர்த்தரை மிகவும் ஆழமான விதத்தில் **அறிந்துகொண்டார்** என யோபு உணருகின்றார். ஆரம்பத்தில் கர்த்தரைப் பற்றி **கேள்விப்பட்டிருந்தார்.** ஆனால் இப்போது அவர் கர்த்தருக்கு நெருக்கமாக வந்து விட்டார்.
- **யோபு 42:6.** யோபு “மனஸ்தாபப் படுகிறார்” (பச்சாதாபம்) அவர்

## ⬇ கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 42:1 - 6

வேதனையில் இருக்கும் பொழுது பிழையான விடயங்களை கூறியுள்ளதை அவர் காண்கிறார். அவர் அதை "அருவருக்கிறார்" (வெறுக்கின்றார்). அவர் தான் கூறியதைக் குறித்து வெட்கப்பட்டு மன்னிப்பு கேட்கின்றார்.

## ➡ பிரசங்கியுங்கள்: யோபு 42:1 - 6

### கற்றுக் கொண்ட பாடங்கள்

**1. கர்த்தர் தாம் எதைச் செய்ய விரும்புகிறாரோ அதையே செய்கின்றார்.**
**யோபு 42:2**

இது உண்மை என்பது எமக்குத் தெரியும், ஆனால் சில நேரங்களில் இதை விரும்ப மாட்டோம். சில வேளைகளில் சில விடயங்களை எம்மால் நிறுத்தக் கூடியதாக இருக்கும்படி நாம் விரும்புவோம். ஆனால் கர்த்தருடைய திட்டத்தை ஒருவராலும் நிறுத்த முடியாது என்பது எமக்குத் தெரியும்.

கர்த்தர் தாம் விரும்பியதையே செய்வார் என யோபு எப்போதும் அறிந்திருந்தார். ஆனால் இதற்காக அவர் புதிய வழிகளில் கர்த்தரைத் **துதிக்க** கற்றக்கொண்டார். அவை அதிக வேதனையைத் தருவதாக இருப்பினும் கர்த்தருடைய திட்டத்தை நிறுத்த முடியாததைக் குறித்து அவர் சந்தோசப்படுகிறார்! நீங்கள் யோபுவுடன் இணங்குகிறீர்களா?

**2. எமக்கு மிகவும் சிறிதளவே தெரியும்**
**யோபு 42:3**

நாம் வல்லுனர்கள் என்று நினைக்க நாம் விரும்புகிறோம்! கர்த்தருடைய வழிகளைப் பற்றி எமக்கு அதிகமாகத் தெரியும் என்பது போல நாம் பேசுகிறோம்! பின்பு கர்த்தர்

உண்மையான வல்லுனராக பேசுகிறார். அவருக்கு எல்லாம் தெரியும். நாம் சிறியவர்களாக உணருகிறோம்.

- நீங்கள் சிலநேரங்களில் யோபுவைப்போல இருந்ததுண்டா? கர்த்தருடைய வழிகளைப் பற்றி தேவைக்கு அதிகமாக நீங்கள் பேசியதுண்டா?
- நாம் கர்த்தரைப் பற்றி புரிந்து கொள்ளாத சில விடயங்கள் எவை?

### 3. நாம் தேவனை அறிந்து கொள்வது அவசியம்

யோபு 42:5

நம் எல்லோராலும் கர்த்தரைப் **பற்றி** பேச முடியும். யோபுவுக்கு கர்த்தரைப் **பற்றிய** விடயங்கள் அதிகம் தெரியும். ஆனால் அவன் இப்போது ஒரு புதிய வழியில் கர்த்தரைப்பற்றி **அறிந்துகொண்டான்.** யோபுவின் வேதனை, அவன் கர்த்தரை சிறப்பாக பார்ப்பதற்கு உதவி (அறிந்துகொள்ளச்) செய்தது.

- வேதனை உங்களைக் கர்த்தரின் அருகில் கொண்டு வந்துள்ளதா? [நீங்கள் சில மக்களிடம் அவர்களுடைய துன்பத்தைப் பற்றியும் அதன் மூலம் அவர்கள் தேவனைப்பற்றிக் கற்றுக்கொண்டதைப் பற்றியும் பகிர்ந்து கொள்ளும்படி கேட்கலாம்]
- நீங்கள் இயேசுவைப் பற்றி இன்னும் அதிகமாக அறிந்துகொள்ள விரும்புகிறீர்களா? நீங்கள் வேதனை அனுபவிக்க தயாராக உள்ளீர்களா? பிலிப்பியர் 3:10.

### 4. நாம் மனம் திரும்ப வேண்டும்

யோபு 42:6

யோபு கர்த்தரைப் பற்றி சொன்ன வற்றைக் குறித்து வெட்கமடைந்து மன்னிப்புக் கேட்டான். அதனால் அவன் **கர்த்தரிடமாக திரும்புகிறான்.** ("மனந்திரும்புதல்"). அதன்பின் அவன் கர்த்தரைக் குறித்து அவன் சந்தேகப்படவில்லை. அவருடன் வாதாட விரும்பவில்லை. கர்த்தர் நியாயமற்றவர் என அவன் நினைக்கவில்லை. அதற்குப் பதிலாக அவன் கர்த்தரின் ஞானத்தையும், அன்பையும் **நம்புகிறான்.**

யோபுவினுடைய துன்பம் அவனுடைய பாவத்தின் பொருட்டு கர்த்தர் கொடுத்த தண்டனை அல்ல என்பது எமக்குத் தெரியும். எமது துன்பமும் கூட பெரும்பாலும் நாம் செய்த தவறுகளுக்கானதாக அமைவதில்லை. அது ஒரு தண்டனை அல்ல.

ஆனால் யோபுவைப் போல எமது **வேதனைகளில்** நாம் பாவம் செய்வது மிகவும் இலகுவானதாக இருக்கும். வேதனையை ஏற்றுக்கொள்வது கடினமானதாக இருக்கும். கர்த்தர் இன்னும் எம்மில் அன்பு வைத்திருக்கிறார் என்பதை நம்புவது கடினமாக இருக்கும். அதனால் யோபுவைப்போல நாம் கர்த்தரைப் பற்றி பிழையான விடயங்களை சிந்தித்து அவற்றைக் கூறுகின்றோம். நீங்களும் கர்த்தரிடம் மன்னிப்பைக் கேட்டு மீண்டும் அவரிடமாகத் திரும்புவது அவசியமாக இருக்கிறதா? நாம் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்?

## கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 42:7-17

# 18 கர்த்தருடைய ஆசிர்வாதம்!

**பின்னணி**

கர்த்தர் யோபுவைத் தன் பக்கமாகத் திருப்பினார். கர்த்தரை நம்புவதைக் குறித்து யோபு மகிழ்ச்சியடைந்தான். எனவே இது யோபுவைக் கர்த்தர் ஆசீர்வதிக்கும் நேரம்! தேவைக்கு மீறி யோபு தொடர்ந்தும் துன்பப்படுவதைத் தேவன் விரும்பவில்லை.

ஆரம்பத்தில் யோபுவுக்குக் கொடுத்த ஆசீர்வாதத்தை விட பின்னர் அதிகமான ஆசீர்வாதத்தை அவர் கொடுத்தார்! கர்த்தர் யோபுவின மீது அன்பு வைத்துள்ளார் என்பதை இது மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. யோபு வேதனையிலும் கர்த்தரைச் சரியாகப் பற்றிப்பிடித்தார் என்பதை இது காண்பிக்கின்றது.

யோபு 47:7~17

**முக்கிய குறிப்பு**

கர்த்தருடைய பிள்ளைகள் சிறிது காலம் துன்பப்படக் கூடும், ஆனால் அவருடைய மக்களுக்காக கர்த்தர் நல்ல திட்டங்களை வைத்துள்ளார்.

**சிந்தித்து செயற்படுவதற்கு**

யோபுவின் கதை முழுமையானதாக முடிவுறுகிறது. எல்லாக் காரியங்களும் அவருக்கு சரியானதாக நடைபெறுகின்றது. ஆனால் பெரும்பாலும் கர்த்தருடைய மக்களுக்கும் இவ்வாறு நடைபெறுவதில்லை. வழமையாக நம் வாழ்வின் ஆரம்பம் முதல் இறுதிவரை பிரச்சனைகளைக் கொண்டிருக்கக் கூடும். அநேகமான கிறிஸ்தவர்கள் யோபுவைப்போல் செல்வந்தர்கள் அல்ல! நாம் கர்த்தருக்கு உடையவர்களாய் இருக்கும் போது எமது கதை ஒரு முழு நிறைவான முடிவைக் **கொண்டிருக்கும்** என்பதை நினைவில் வைத்திருங்கள். பரலோகத்தின் ஒரு முழு நிறைவான முடிவை யோபுவின் கதை எமக்குக் காண்பிக்கிறது. எல்லாத் துன்பமும் ஒரு நாள் முடிவு பெறும் என்பதை அது எமக்கு எடுத்துக் காட்டுகிறது. அதன் பின்பு நாம் கர்த்தரின் ஆசீர்வாதத்தை **மாத்திரமே** அறிந்து கொள்வோம்.

**குறிப்புக்கள்**

- **யோபு 42:7.** யோபு கர்த்தரைப் பற்றி **சில** தவறான காரியங்களைச் சொன்னான். ஆனால் அது பெரும்பாலாக "சரியானதாகவே" இருந்தது. யோபுவின் நண்பர்கள் யோபுவின் தவறைக் குறித்து உறுதியாக இருந்தார்கள். அவர்கள் **அவர்களுடைய** வார்த்தையில் என்ன தவறு இருக்கிறதென்பதை பார்க்கவில்லை. அவர்கள் கர்த்தருக்கும் யோபுவுக்கும் எதிராக அநேக தவறான விடயங்களைப் பேசினார்கள். இப்பொழுது யோபு நிச்சயமாக அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும்.
- **யோபு 42:7-9.** கர்த்தர் யோபுவுடைய நண்பர்கள் மீது கோபமாக இருந்தார். ஆனால் அவர்களும் அவரிடம் திரும்ப வரவேண்டுமென அவர் விரும்பியதைப் பாருங்கள்.

## கற்றுக்கொள்ளுங்கள்: யோபு 42:7-17

யோபுவின் துன்பம் அவருடைய நண்பர்களுக்கு முக்கியமான பாடங்களைக் கற்றுக்கொடுத்தது. (உதாரணம்: கர்த்தருடைய வழிகளைப் புரிந்துகொள்ள, அவை மிகவும் பெரியவை, நல்ல மக்களுக்கும் கூட தீமையானவைகள் நடக்கும்...)

- **யோபு 42:10.** “செழிப்பு” - செல்வம். கர்த்தருடைய ஆசீர்வாதமென்பதன் அர்த்தம் நாங்கள் செல்வத்துடனும், ஆரோக்கியத்துடனும் இருப்போம் என்பது அல்ல. யோபுவின் செல்வமானது கர்த்தருடைய மக்களுக்கு அவர் வைத்துள்ள உண்மையான ஆசீர்வாதங்களைக் காண்பிக்கும் ஒரு சித்திரமாக இருக்கிறது. கர்த்தர் அவருடைய பிள்ளைகளுக்கு அன்பு, சமாதானம், சந்தோஷம், மற்றும் மன்னிப்பு, ஆகியவற்றை இயேசு கிறிஸ்துவுக்கூடாகக் கொடுக்கிறார். அதன் பின்பு பரலோகம்! பணத்தையும், ஏனைய சொத்துக்களையும்விட இவை மேலானவை!

- **யோபு 42:11.** யோபுவின் துன்பம் அநேக மக்களைத் தாக்கியது. கர்த்தர் அவருடைய பிள்ளைகளின் நன்மைக்காக எவ்வாறு துன்பத்தைப் பயன்படுத்துகிறார் என்பதை அவர்கள் அனைவரும் கற்றுக் கொள்ளக் கூடியதாக அமைந்தது.

## பிரசங்கியுங்கள்: யோபு 42:7-17

கர்த்தர் எப்போதும் நல்லவராகவே இருக்கிறார். யோபுவின் துன்பத்தினூடாக அதைப் பார்ப்பது கடினமாக இருந்தது. யோபுவுக்கும், அவனது நண்பர்களுக்குமான கர்த்தரின் இரக்கத்தை இங்கே நாம் காணலாம்.

### கர்த்தர் யோபு 42:10, 12

“கர்த்தருடைய மக்களுக்கு ஏன் தீமையான காரியங்கள் நடக்கின்றன”? என நாம் சில வேளைகளில் கேட்போம். கர்த்தர் அவருடைய மக்களுக்கு **எப்போதும்** நல்ல திட்டத்தை வைத்திருக்கிறார் என்பதே கர்த்தருடைய பதிலாக இருக்கிறது. (எரேமியா 32:40).

கர்த்தரைத் துதியுங்கள -

- கர்த்தர் தீமையான விடயங்களை எங்களுடைய நன்மைக்காகப் **பாவிக்கிறார்.** எங்களுடைய பிரச்சனைகள் எப்போதும் வீணாகாது. நாம் நோய்வாய்ப் பட்டிருந்த அந்த ஆண்டுகள் வீணாவது இல்லை. துன்பம் என்ன நல்ல காரியத்தைக் கொண்டு வருகிறது?
- கர்த்தர் மென்மேலும் தன் மக்களை ஆசிர்வதிக்க விரும்புகிறார். கர்த்தர் யோபுவிற்கு இரு மடங்காக கொடுத்ததன் மூலம் அவர் யோபுவின் மீது எவ்வளவு அன்பு வைத்தார் என்பதைக் காண்பிக்கிறார். இப்பொழுது வாழ்வு

கடினமாக இருப்பது போலத் தென்பட்டால், பரலோகத்திற்கான தேவனின் திட்டத்தை நினைவு கூருங்கள்! (2 கொரிந்தியர் 4:17)

## நண்பர்கள் யோபு 42:7~9,11

⊞ இந்த நேரத்தில், நான் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளேன். இதனூடாக கர்த்தர் எனக்கும் என் குடும்பத்துக்குமான ஒரு அன்பான திட்டத்தை வைத்திருக்கிறார். ஆனாலும் அவர் அநேக **ஏனைய மக்களோடும்** பேசியிருக்கிறார். அவர்களும், அவர்களுடைய வாழ்வைப்பற்றியும் அவர்களுடைய மரணத்தைப் பற்றியும் சிந்தித்து உள்ளனர். கர்த்தரைத் துதியுங்கள் அவர் எமது துன்பங்களைப் பயன்படுத்தி அநேகரை ஆசீர்வதிக்கிறார்.

யோபுவின் மூன்று நண்பர்களும் யோபுவுக்கு இருந்த பிரச்சனையை நிச்சயமாக அறிந்திருந்தனர். ஆனால் கர்த்தர் **அவர்கள்** எவ்வளவு பிழையானவர்கள் எனக் காட்டினார். அவர் அவர்களைத் தாழ்மைப்படுத்தி அவர்களை மன்னித்தார். அவர்களுக்காக ஜெபிக்கும்படி யோபுவிடம் கேட்பது அவர்களுக்கு மிகவும் கடினமானதாக இருந்தது! ஆனால் அவர்களுக்கு கர்த்தரைப் பற்றிய அநேகக் காரியங்களைக் கற்பிப்பதற்காக கர்த்தர் இதைப் பயன்படுத்தினார்.

- யோபுவினுடைய நண்பர்களும் உறவினர்களும் இதனூடாக என்ன பாடத்தைக் கற்றுக் கொண்டிருப்பார்கள் என நீங்கள் நினைக்கிறீர்கள்?

## யோபு யோபு 42:7, 8, 12

யோபு அவருடைய துன்பத்தினூடாக அநேக விடயங்களைக் கற்றுக்கொண்டார். ஆனால் இப்புத்தகம் அதன் தொடக்கத்தை போலவே முடிவடைகிறது என்பதனை அவதானியுங்கள்.

- யோபு ஒரு **நல்ல** மனிதன். அவன் சரியான முறையில் வாழ்ந்து சரியானவற்றையே பேசுகிறான் (யோபு 1:1, 42:7). யோபு முழு நிறைவானவன் அல்ல. ஆனால் யோபு தனது துன்பத்தினூடாக கர்த்தரைப் பற்றிப்பிடிப்பான் எனக் கர்த்தர் நம்பினார்.
- யோபு ஒரு **ஆசீர்வதிக்கப்பட்ட** மனிதன் (யோபு 1:2-3, 42:12). அவனது வேதனைகளுக்கூடாக ஆசீர்வாதத்தைக் காண்பது கடினமானது. ஆனால் நாம் கர்த்தரை நம்பும் போது முடிவில் ஆசீர்வாதம் வரும்.

⊳ நீங்கள் கர்த்தரின் ஆசீர்வாதத்தை அறிய விரும்புகிறீர்களா? கர்த்தருடைய சிறப்பான திட்டமானது எப்போதும் அவரது மக்களை நோக்கி வரும் என்பதை நினைவில் வைத்திருங்கள்! யோபுவைப் போல் ஒரு போதும் கர்த்தரை விட்டு விடாதிருங்கள்! உங்கள் சொந்த வழிகளில் விடயங்களைச் செய்வது சிறந்தது என ஒருபோதும் சிந்திக்காதீர்கள். அது உங்களை அதிகமாகக் காயப்படுத்தினாலும் யோபுவை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். கர்த்தர் உங்களுக்குப் பெரிதான ஆசீர்வாதத்தை திட்டமிடுகிறார் என்பதை நினைவில் வையுங்கள்.

# உ. யோபு புத்தகத்தில் உள்ள பாடங்கள்

கர்த்தருடைய வார்த்தையில் உள்ள பாடங்களை எம்முடைய வாழ்க்கையினுள் உள்ளெடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இக் கேள்விகளை குழுக்களாக கலந்துரையாடி, அவைகளுக்காக ஜெபிப்பதற்கு உங்களுடைய மக்களுக்கு இது உதவும். இந்தக் கேள்விகள் இந்தப் புத்தகத்தின் முக்கியமான சில பாடங்களை நாம் கற்க உதவுகின்றது. யோபு புத்தகத்தைக் குறித்த உங்களுடைய உரையாடல்கள் அனைத்தும் முடிந்த பின்பு நீங்கள் இக்கேள்விகளைப் பயன்படுத்தலாம். அல்லது நீங்கள் விரும்பினால் ஒவ்வொரு பகுதி முடிவிலும் இக் கேள்விகளை நீங்கள் உபயோகிக்கலாம்.

## யோபு புத்தகத்திலுள்ள பாடங்கள்

**1. சாத்தான் அல்ல தேவனே ஆளுகை செய்கிறார்!**

- யோபுவிற்கான சாத்தானின் தீமையான திட்டங்களிற்கு என்ன நடந்தது?
- சாத்தானிற்கு அல்லது அசுத்த ஆவிகளிற்கு பயப்பிடுகிறீர்களா? நீங்கள் யோபுவினுடைய கதையிலிருந்து எதைக் கற்றுக்கொண்டீர்கள்?

**2. கரத்தர் எப்பொழுதும் நல்லவரும் எப்பொழுதும்** நியாயமுள்ளவருமாக இருக்கிறார்.

- யோபு எவ்வாறு இப்பாடத்தைக் கற்றுக்கொண்டார்?
- எம்முடைய வாழ்க்கையில் அசாதாரண நிலை ஏற்படுகின்ற போது நாம் எவ்வாறு இந்த சத்தியத்தை பற்றிக்கொள்ளலாம்?

**3. தேவன் தம்முடைய மக்களிற்கு நல்ல திட்டங்களை வைத்துள்ளார்.**

- இது ஏன் உண்மையானது?
- எமக்கு 'தீமையான' காரியங்கள் நடை பெறும் போது நாம் தேவனைக் குறித்ததான என்ன காரியங்களை நினைவு கூர வேண்டும்?

**4. ஏற்படுகின்ற 'தீமையான' மிகவும் வேதனையான காரியங்களை நல்ல காரியமாக மாற்றுகின்றார்.**

- இது எவ்வாறு யோபுவிற்கும் அவருடைய நண்பர்களிற்கும் சாத்தியமாக அமைந்தது?
- கர்த்தர் எவ்வாறு இதை உங்கள் வாழ்க்கையில செய்தார் என்பதைப் பகிருங்கள்.

**5. எங்களால் புரிந்துகொள்ள முடியாத பல காரியங்கள் உண்டு. ஏனென்றால் நாம் தேவன் அல்ல.**

- யோபு ஏன் இவ்வாறான துன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்று தேவன் விளங்கப்படுத்தவில்லை. அது ஏன்?
- நாம் யார் என்பதை நினைவில் வைத்திருக்க இது எவ்வாறு உதவுகின்றது?

**6. நாம் அனைத்தையும் அறிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. நாம் எல்லா விடயத்திலும் தேவனை நம்பவேண்டும்.**

- யோபு காரணங்களை அறியாதிருந்ததைக் குறித்து ஏன் இறுதியில் சந்தோஷமாக இருந்தான்?
- வாழ்க்கையில் உள்ள உதாரணங்களை நினைத்துப் பாருங்கள். நாம் புரிந்துகொள்ள வேண்டிய நேரங்களை விட எப்போது நாம் அதிகமாக நம்ப வேண்டியது அவசியம்? (உதாரணம்: இளம் பிள்ளைகளும் அவர்களுடைய பெற்றோர்களும்.) இவ் உதாரணங்கள் தேவனை விசுவாசிக்க எவ்வாறு எமக்கு உதவுகின்றது?

**7. ஏன் என்று அறிதலை விட தேவனை அறிதல் மிகவும் முக்கியமான தொன்றாகும்.**

- யோபுவும் (யோபுவினுடைய நண்பர்களும்) இறுதியில் தேவனை எந்த வழிகளில் சிறப்பாக அறிந்து கொண்டார்கள்?
- உங்களுடைய வேதனைகள் கர்த்தரை இன்னும் சிறப்பாக நீங்கள் அறிந்து கொள்ள உதவி செய்யுமானால் உங்களுடைய வேதனையை சந்தோஷமாக ஏற்றுக்கொள்வீர்களா?

**8. தேவன் வேதனைகளிற்கு பல காரணங்களை வைத்துள்ளார். அவை அனைத்தும் நன்மையானவையே.**

- அவைகளில் சில காரணங்கள் எவை?
- துன்பம் வருகின்ற பொழுது கர்த்தருடைய நல்ல காரணங்களை ஞாபகப்படுத்துகிறீர்களா? எவ்வாறு அது உங்களுக்கு உதவுகிறது?

**9. சாத்தானானவன் எமக்கு ஏற்படுகின்ற வேதனைகளைப் பயன்படுத்தி, நாம் தேவனை விட்டுத் திரும்பும்படி செய்கிறான். ஆனால் தேவன் வேதனைகளைப் பயன்படுத்தி நாம் தேவனிடமாகத் திரும்பும்படி செய்கிறார்.**

- சாத்தானும் தேவனும் யோபுவிற்கு கொடுத்த சோதனைகளை நினைத்துப் பாருங்கள்? அவைகளுடைய வித்தியாசமான காரணங்கள் என்ன?
- சிலர் இன்னல்கள் துன்பங்களின் போது தேவனை விட்டுத் துரமாகச் சென்று விடுகின்றனர். இதைத்தான் சாத்தான் எம் ஒவ்வொருவரிடமிருந்தும் எதிர்பார்க்கிறான். பிரச்சனையின் போது, தேவனிடமாகத் திரும்ப நாம் ஒருவருக் கொருவர் எவ்வாறு உதவி செய்யலாம்?

**10. பெரும்பாலும் எமது துன்பங்களுக்குக் காரணம் எமது பாவங்கள் அல்ல.**

- யோபுவினுடைய துன்பங்களுக்கான காரணங்கள் என்ன?
- எமது வாழ்வில் தேவன் துன்பங்களை கொண்டு வருவதற்கான சில காரணங்கள் எவை?

**11. நாம் துன்பப்படும் போது பாவங்கள் செய்வது இலகுவானதாகும்.**

- யோபு தேவனைப் பற்றிப் பிடித்திருந்தார், ஆனால் அவர் எதற்காக மன்னிப்பு கேட்க வேண்டியவராக இருந்தார்?
- எமக்குத் துன்பங்கள் இன்னல்கள் நேரிடும் போது நாம் எவ்வாறான பாவங்களைக் குறித்துக் கவனமாக இருக்க வேண்டும்?

**12. துன்பத்தில் இருக்கும் மக்களை தேற்றும் போது எமக்கு கர்த்தரின் உதவி தேவை.**

- யோபுவின் நண்பர்கள் செய்த தவறுகள் என்ன?
- அவர்களுடைய தவறுகளில் இருந்து நீங்கள் எதைக் கற்றீர்கள்?
- நீங்கள் உதவி செய்யும் நண்பராக இருக்கும் படிக்கு நீங்கள் எதைக் குறித்து ஜெபம் பண்ண வேண்டும்

**13. எமது துன்பங்கள் கடைசிவரை நீடிக்காது (தம்முடைய மக்களுக்காக துன்பப்பட்ட இயேசுவில் நம்பிக்கை வைப்போமாயின்). வேதனைக்குரிய இறுதி பதில்கள் தேவனிடமே காணப்படுகின்றது. துன்பங்கள் நிறைவடைந்து பரலோகத்தை நாம் காணலாம்!**

- யோபு வேதனைப்பட்ட போது தனக்கு என்ன நடக்கும் என அவர் நினைத்தார்? அவருக்கு என்ன நடந்தது?
- நாம் இன்னல்கள் வேதனைகளிற்கூடாக செல்லும் போது, அது இயேசுவையும் பரலோகத்தையும் குறித்து நினைத்துப் பார்க்க எவ்வாறு உதவி செய்கின்றது?

## துன்பங்களுக்கான காரணங்கள்

இந்தத் தலைப்பு பற்றிய உரை அல்லது வேதப்படிப்பு உங்கள் செவிமடுப்போருக்கு பெரிதும் உதவிபுரியும். கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களை எவ்வாறு சிறப்பாகப் பயன்படுத்தலாம் என சிந்தியுங்கள்

துன்பப்படுதல் குறித்த ஒரு கடினமான விடயம் என்னவென்றால் அது **ஏன்** நமக்கு நடந்தது எனத் தெரியாமல் இருப்பதாகும். வழமையாகக் கர்த்தர் ஏனென்று விளங்கப்படுத்த மாட்டார். நாம் எமது வேதனையிலும் அவரை நம்ப வேண்டுமென்று அவர் விருப்புகிறார்.

ஆனால் வேதாகமம் துன்பத்துக்குரிய பல நல்ல காரணங்களை எடுத்துக் கூறுகிறது! கர்த்தர் எமது வாழ்விலே நல்ல காரியங்களை உருவாக்குவதற்காக சோதனைகளைப் பயன்படுத்துகின்றார். நாம் துன்பப்படுகின்ற போது இந்த காரணங்களை நாம் நினைக்க வேண்டும்.

### 1. வேதனைப்படுதல் என்பது நாம் வாழுகின்ற பாவமான உலகத்தில் ஒரு பகுதியாகும். ரோமர் 8:22–23

ஆதாம் பாவம் செய்ததிலிருந்து முழு உலகமுமே பிரச்சனைக்குள்ளானது. பாவமானது ஒவ்வொருவருக்கும் பிரச்சனையைக் கொண்டுவநத்து. மரணம், ஏமாற்றம், வேதனை, நோய் என்பவற்றை யாவரும் அறிந்திருந்தனர். ரோமர 8 இல்,உலகத்தின் படைப்புக்கள் யாவும் "புலம்புகின்றன" (வேதனையால்) என்று பவுல் கூறுகிறார். ஏனெனில் பாவமானது எல்லாவற்றையும் தவறாகச் செய்தது.

கிறிஸ்தவர்கள் இந்தப் பாவத்தினால் வீணாக்கப்பட்ட (அழிந்து கொண்டிருக்கிற) உலகில் வாழ வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்! அனைவரையும் போல எமக்கும் பிரச்சனைகள் உண்டு. ஆனால் இந்த உலகின் எல்லாப் பிரச்சனைகளும் எம்மை விட்டுப்போகிற நாளுக்காக நாம் எதிர்ப்பார்த்திருக்கிறோம். புரலோகத்திற்காக நாம் எதிர்ப்பார்த்திருக்கிறோம். அங்கு எந்த வேதனையும் இல்லை.

### 2. சோதனைகள் எமது சொந்த பிழையின் காரணமாகவும் இருக்கலாம்.

ஒரு வேளை நாம் அசுத்தமான நீரைப் பருகிய படியால் நோயாளர்களாவோம்.அது கர்த்தரிடமிருந்து வந்தது அல்ல. அது எம்மிடமிருந்தே வந்தது! சில வேளைகளில் தவறான முடிவுகளும் பிரச்சனையைக் கொண்டுவரும். அது எமது தவறாயிருக்கிறது! எமது தவறுகளிலிருந்து நாம் பாடங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் உருவாக்கிய பிரச்சனைகளுக்கூடாக செல்வதற்கு நாம் கர்த்தரிடம் உதவி கேட்கவேண்டும்.

### 3. துன்பம் என்பது நம்மை சீர்ப்படுத்திக் கொள்வதற்காக தேவனால் நியமிக்கப் பட்டதாகும். எபிரேயர் 12:4–13

தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு அன்புள்ள தந்தையாக இருக்கின்றார் என எபிரேயர் 12 கூறுகிறது. அவர் கொடியவரும், கோபமும் கொண்டவரல்ல. அவர் எம்மைப் புண்படுத்த விரும்புவதில்லை. (புலம்பல் 3:31–33) நாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தோமேயானால் துன்பப்படுதல் என்பது கர்த்தரால் கொண்டுவரப்பட்ட தண்டனையல்ல. இயேசு எங்கள் எல்லோருடைய பாவங்களுக்காகவும் சிலுவையிலே துன்பத்தை அனுபவித்தார்! நல்லதொரு தகப்பனைப் போன்று நாம் சரியான பாதையில் செல்வதைக் கர்த்தர் விரும்புகிறார்.

நாம் கர்த்தரை விட்டு விலகிச் சென்றால் நம்மை மீண்டும் கரத்தரிடத்தில் கொண்டு வருவதற்காக துன்பத்தைப் பயன்படுத்தலாம். சில நேரங்களில் நாம் அவரது வார்ததைகளுக்கு செவி கொடுக்காம லிருக்கிறோம். சில வேளைகளில் நாம் எமது வாழ்வில் துன்பத்தை அனுபவிக்கும் போது மாத்திரம் தேவனுக்கு செவி கொடுக்கிறோம். அவர் எம்மை நேசிக்கின்ற படியாலும்

மீண்டும் நாம் திரும்பி அவரிடம் வருவதை அவர் விரும்புகிறபடியாலும் கர்த்தர் எமக்குத் துன்பத்தை அனுப்புகின்றார். நாம் அவரிடம் கேட்போமானால் இது தான் எமது துன்பத்துக்குக் காரணம் என அவர் காட்டுவார். நீங்கள் கர்த்தரை விட்டு விலகிச் சென்றதில்லை எனில் குற்ற உணர்வு அடையாதீர்கள்!

கர்த்தர் ஒரு தகப்பனைப் போன்று. தேவன் நம்மை பயிற்றுவிப்பதற்காகத் துன்பங்களை பயன்படுத்துகிறார். நாம் பாடங்களைக் கற்கவேண்டும் என்பதற்கு கர்த்தர் கடினமான காரியங்களை எமக்குக் கொடுக்கிறார். அவருடைய பிள்ளைகள் வளர்ச்சியடைவதை அவர் விரும்புகிறார்!

**4. பாடுகள் எம்மை விசுவாசத்தில் வளர்ச்சியடையச் செய்கிறது. யாக்கோபு 1:2–4, 12, யோபு 23:10**

கர்த்தர் அநேக வேளைகளில் தம்முடைய பிள்ளைகளுக்கு ஏன் பிரச்சனையைக் கொடுக்கிறார். எமது வாழ்வு எளிதாக இருக்கும் போது நாம் வழமையாக சிறப்பாக வளர்ச்சியடைய மாட்டோம். பிரச்சனையானது பயிர் வளருவதற்குரிய நல்ல மண்ணைப் போன்றதாகும். பிரச்சனையானது கர்த்தரை நாம் நம்புவதற்கு எமக்குக் கற்றுத் தருகிறது. பிரச்சனையானது எம்மை எந்த வித குறைவுகளுமின்றி நிறைவுள்ளவர்களாக வளர்ச்சிடையச் செய்யும். பிரச்சனையானது அவருடைய விசுவாசத்தை பொன்னை போல் மாறுவதை யோபு கண்டார். பிரச்சனைகள் வரும்பொழுது சந்தோசமாக இருங்கள் ஏனெனில் அது உங்கள் விசுவாசத்தை வளர்ச்சிடையச் செய்யும் என யாக்கோபு சொல்கிறார்! நாம் ஒரு போதும் முறைப்பாடு செய்யக் கூடாது. பிரச்சனையானது எமக்கான கர்த்தருடைய பரிசு என நாம் விசுவாசிக்க வேண்டும்.

**5. பாடுகள் எம்மை பாடுபடும் எமது மீட்பரிடம் கிட்டிச் சேர்க்கும். பிலிப்பியர் 3:10**

பவுல் தனது மீட்பரின் துன்பத்தைப்பற்றி அதிகமாக பகிர்ந்துகொள்ள விரும்புகிறார்.பவுல் தான் வேதனை அடைவதன் மூலம் இயேசுகிறிஸ்துவை சிறப்பாக அறிந்துகொள்வார் என அறிந்திருந்தார்.

**6. பாடுகள் துன்புறுத்தப்படலாக இருக்கலாம். மத்தேயு 5:10–12**

நாம் இயேசுவைப் போல இயேசு கிறிஸ்துவைப் பற்றி மற்றவர்களுக்கு சொல்வதால் துன்புறுத்தப் படுகிறோம். அவர் நிமித்தம் நம்மைத் துன்புறுத்தும் போது மகிழ்ச்சியடையும் படி இயேசு கூறுகிறார். அது இயேசுவைப் போல் நாமும் மாற எம்மை உற்சாகப் படுத்துகிறது. மக்கள் எம்மை வெறுக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் இயேசுவையும் வெறுக்கிறார்கள். நாம் இயேசுவுக்கு சொந்தமானவர்கள்.

**7. துன்பமானது ஏனைய மக்களுக்குப் பல விடயங்களைக் கற்றுத் தருகிறது.**

இன்று நான் தீவிரமாக நோய்வாய்ப்பட்டவர் எழுதிய ஒரு வாழ்த்து அட்டையை வாசித்தேன். அந்த அட்டையிலே பிரச்சனை வேளையில் ‘உங்கள் விசுவாசமும், பொறுமையும் என்னை அதிகமாக ஊக்குவித்தது’ எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. நாம் பாதிக்கப்படும் பொழுது மற்றவர்களுக்கு உதவ முடியும். பிரச்சனையில் தொடர்ந்து செல்லும் மக்களுக்கு அது உதவும். அவர்கள் வாழ வேண்டிய வழியை சிந்திக்க அது உதவும்.

ஒரு பெரிய காரியம் என்னவென்றால் யோபுவின் புத்தகத்தைப் படிக்கின்ற மில்லியன் கணக்கான விசுவாசிகளுக்கு உதவுவதே யோபுவின் துன்பப்படுதலுக்கான காரணமாகும்!

**8. எமது பாடுகள் மற்றவர்களை ஆறுதல் படுத்த எமக்கு உதவியளிக்கிறது. 2 கொரிந்தியர் 1:3–7**

யோபுவின் நண்பர்களால் யோபுவை ஆறுதல்படுத்த முடியவில்லை. அவர்கள் துன்பப்படுதலைப் பற்றி அறிந்திருக்கவில்லை. ஆனால் நாம் துன்பப்படும் பொழுது கர்த்தர்

எம்மைத் தேற்றியுள்ளார். நாம் மற்றவர்களு க்கு உதவமுடியும். நாம் அமைதியானவர்களா கவும், இரக்கமுள்ளவர்களாகவும் இருப்போம். நாம் அவர்களுடைய வேதனையைப் புரிந்து கொண்டோம் என அவர்கள் அறிவார்கள். கர்த்தர் எமக்கு எவ்வளவு நல்லவராக இருக்கிறார் என்பதைப்பற்றி நாம் அவர்களுக்குக் கூற முடியும்.

இந்தக் காரியங்கள் யாவும் எவ்வளவு நல்ல வை என சிந்தித்துப் பாருங்கள்! நாம் இப்பொழுது துன்பத்தை கடினமாகக் காணலாம். ஆனால் துன்பப்படுதலானது நல்ல விடயங்களைக் கொண்டு வருகிறது என நாம் நாம் நினைக்கும் பொழுது நாம் கர்த்தரைத் துதித்து அவரில் நம்பிக்கை வைக்க முடியும்.

# யோபு நூலைப் பிரசங்கித்தல்

## யோபு நூலுக்கான பேசும் வரைகோடுகள்

***...உலகமெங்குமுள்ள வேதாகம ஆசிரியர்களுக்காக எழுதப்பட்டுள்ளது***

**ஜெபம் செய் - தயார் செய் - போதனை செய்** என்பது உலகெங்குமுள்ள வேதாகம ஆசிரியர்கள் தேவனின் வார்த்தையைத் தெளிவாகவும், துல்லியமாகவும் விளக்குவதற்கு அவர்களுக்கு உதவியாயிருப்பதற்காகத் தயாரிக்கப்பட்டதொரு புதிய வழிகாட்டித் தொடராகும். 2 தீமோத்தேயு 2:15 இப்படிக் கூறுகிறது: 'நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாய் நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.'


***யோபு நூலைப் பிரசங்கித்தல்*** என்னும் இந்தப் புத்தகம் இதைச் செய்ய உங்களுக்கு உதவியாயிருக்கும். அது உங்களுக்கு இவைகளில் உதவி செய்யும்:

- துயரப்படுதலைத் தேவன், எப்படி அவரது ஜனங்களின் நன்மைக்காகப் பயன்படுத்துகிறார் என்பதைப் **புரிந்துகொள்வதற்கு**.
- சாத்தான் அல்ல, தேவனே ஆளுகை செய்கிறார் என்பதைக் **கற்றுக்கொள்வதற்கு**.
- ஜனங்கள் துயருறும் போது, தேவனை நம்ப **உதவுவதற்கு**.
- ஒவ்வொரு பகுதியும், எவ்விதம் முக்கியமானது என்பதை உமது மக்கள் **சிந்திப்பதற்கு**.
- முக்கிய விடயத்தை தெளிவாக **கற்பிப்பதற்கு**.



அண்மைக் காலமாக, வியாக்கியான பிரசங்கத்தின் அவசியம் குறித்து அதிகம் பேசப்பட்டு வருகின்றது, எனினும் ஆசியாவிலே இப்பிரசங்கமானது மிகக் குறைந்த அளவிலேயே செய்யப்பட்டுள்ளது. இந்த பாடநூல் தொடரானது ஊழியர்களினதும் மற்றும் அநேக பிரசங்கிகளின் வாழ்விலும் அவர்கள் விரைந்து இப்படிமுறையை ஆரம்பிக்க உதவி செய்யும். இன்றைய நாள் ஊழியர்களுக்கு வியாக்கியான பிரசங்கமானது செய்ய முடியாத மற்றும் நடைமுறைக்கொவ்வாத ஒன்றல்ல என்பதை இது காட்டுகிறது. வேதாகமப் பகுதிகளைத் திறந்து நடைமுறைக் காரியங்களில் பிரசங்கம் செய்வதற்கு, இத்தொடரானது புதிய சந்ததியின் ஊழியர்களை வேத வார்த்தையில் வளர்ப்பதற்கு உதவி செய்யும்.

***அஜித் பெர்னான்டோ, கற்பித்தல் இயக்குனர், கிறிஸ்துவுக்காக வாலிபர், இலங்கை.***



வேதாகமத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு, அதன் வல்லமையையும் அதன் பொருந்தும் தன்மையையும் வெளிப்படுத்தும் பிரசங்கங்கள் உலகம் முழுவதிலும் இன்று மகத்தான தேவைகளிலொன்றாக இருக்கிறது. **'யோபு நூலைப் பிரசங்கித்தல்'** வேத வசனத்தைப் போதிக்க அவர்களுக்குத் தேவையான வளங்கள் போதுமான அளவு இல்லாத போதகர்களுக்கும், ஏனைய ஊழியர்களுக்கும் மிகப் பெரியதொரு உதவியாயிருக்கும்.

***யோனத்தான் லாம், இயக்குநர், இலங்கம் பிரசங்கித்தல், சர்வதேச இலங்கம் பங்குதாரர்.***

Rs. 100/-

ISBN 978-955-3640-09-3

Langham PARTNERSHIP

CTS Publishing
Colombo Theological Seminary